
# திருக்கோயில்

ஏப்ரல் 1982 ரு. 1-25



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு



பெரியார் ம்ாவட்டம், கோபி வட்டம், பாரியூர் 'அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் திருக்கோயிலின் துணைக் கோயிலான அருள்மிகு அமரபணீசுவரர் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் செய்யும் போது, அகழ்ந்து எடுக்கப் பெற்ற நான்கு பஞ்சலோக விக்கிரகங்கள். 1. நடராசப் பெருமான், 2. சிவகாமியம்மை, 3. சந்திரசேகரர், 4. சந்திரசேகரர் அம்மன்.

[முகப்பு]

காஞ்சிபுரம்
அருள்மிகு திருவேகம்பநாதர் திருக்கோயிலின்
தோற்றம்

# திருக்கோயில்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 24 | திருவள்ளுவர் ஆண்டு 2012, துன்மதி ஆண்டு-பங்குனி [ஏப்ரல் 1982] ரூ. 1-25 | மணி : 7 |
|---|---|---|

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

*திருக்கோயில்* திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ.25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்

தமிழ்நாடு சட்ட மேலவையில்
அறநிலைய அமைச்சர் உரை.

பாரதியாரும் விநாயகரும்
—டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம்

நாராயண கவசம்
—திருமதி சௌந்தரா கைலாசம்.

சிவஞான போதத் தெளிபொருட் பதவுரை
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம். ஓ. எல்.

இந்து சமயத்தின் உலகளாவிய இனிய இயல்பு
—ந.ரா. முருகவேள்

சைவாகமங்கள்
திரு. மு. அருணாசலம்

உடையும் நடையும்
—திரு. உ. வே. ஆர். கண்ணன், பி.ஏ.

அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே
பேராசிரியர் மறைத்திரு. ப. சு. மணியம் அவர்கள்

திவ்வியப் பிரபந்த சார சங்கிரகம்
—திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள்

அறத்தின் பெருமை
அருள்மொழி அரசு திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள்.

அரும் பெருந் துறவி அப்பர் அடிகள்
—டாக்டர் திரு. அ. மா. பரிமணம்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# தமிழ்நாடு சட்ட மேலவையில்

## அறநிலைய அமைச்சர்

### மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு தலைவரவர்களே, சட்ட மன்றப் பேரவையிலே நிறைவேற்றப் பெற்று, இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காக இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற, 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவின் மீது, கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வருக்கும், முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத் திருத்தம் சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் வரவேற்கப்படும் என்பதிலே அரசுக்கு எந்தவிதமான ஐயப்பாடும் இல்லாமல் தான் இருந்தது. அதன் அடிப்படையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கின்றோம். அதேபோலவே சட்ட மன்றப் பேரவையிலே உள்ள உறுப்பினர்கள் எல்லோருமே வரவேற்றார்கள். இங்கேயும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி உட்பட, இதை வரவேற்றார்கள் என்றுதான் நான் எடுத்துக் கொள்வேன். ஆனால் மாண்பு மிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர் களுக்கு அடிப்படையிலேயே எழுந்த ஓர் ஐயப் பாட்டைத்தான், அவர்களைப் பொறுத்த வரையில் நியாயம் என்று கருதி, இங்கே கருத் தினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அரசைப் பொறுத்த வரையில், என்னைப் பொறுத்தவரையில், அந்த ஐயப்பாடு அவர் களுக்குத் தேவையற்று எழுந்த ஓர் ஐயப்பாடு என்பதாகத்தான் நான் எடுத்துக் கொள்வேன். முதலிலே அவருக்கு எழுந்துள்ள அந்த ஐயப் பாட்டை நீக்கிவிட்டால், எல்லோருமே இதை வரவேற்கக் கூடிய சூழ்நிலை உருவாகிவிடும் என்று நான் எண்ணுகிறேன். இதைச் சட்ட மன்றப் பேரவையிலே முன்மொழிகிறபோது, இந்து சமயத்தையோ, இந்து சமயத்தினரை யோ, இந்து சமயத்தைப் பின்பற்றுகிற மக் களையோ, இந்து சமயத்தை வளர்க்கிற தலை வர்களையோ, வழிகாட்டுகிற ஆச்சாரியர் களையோ, ஆதீனத் தலைவர்களையோ, வேறு எந்தப் பொறுப்பிலே இருக்கின்ற இந்து மதத் தலைவர்களையோ, அல்லது இந்து சமயத் தைப் பின்பற்றி, இந்து சமயத்தைக் கட்டிக் காத்துப் பின்பற்றுகின்ற கோடிக்கணக்கான மக்களையோ எந்த விதத்திலும் இழிவுபடுத்து கின்ற, கோரப்படுத்துகின்ற, குறைபடுத்து கின்ற, கேவலப்படுத்துகின்ற, ஒரு செயலைச் செய்யவில்லை. அது இந்த அரசினுடைய நோக்கமும் அல்ல. அதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவும் இல்லை என் பதை, மிகவும் தெளிவாக எடுத்துச் சொன் னேன். இங்கேயும் இதனுடைய விளக்கத்தை நான் முன்னாலேயே தெரிவிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்குமானால், நான் முதலி லேயே அந்தக் கருத்தை எடுத்துச் சொல்லி யிருப்பேன். அதையொட்டி மாண்புமிகு உறுப் பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்கு, எங்கள்மீது இருக்கிற உண்மையான அன்பின் அடிப்படையிலே, நம்பிக்கையின் காரணமாக எழுந்திருக்கின்ற இந்த ஐயப்பாடும்கூட எழுந் திருக்காது. அவர்கள்கூட இவ்வளவு நேரம் அந்தச் சந்தேகத்தை அடிப்படையாக வைத்து, பிரச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்திருக்க மாட்டார்கள்.

''இந்தச் சட்டத்திருத்தம் ஏன் வந்தது? இப்போது என்ன அவசரம்? இந்து சமயத்துக் கான சட்டத்தை மட்டும் ஏன் கொண்டு வரு கிறீர்கள்?'' என்று கேட்பவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன். ''நான் இந்து சமய அறநிலையத் துறைக்குப் பாதுகாப்பாக இருக் கின்ற அமைச்சர். ஆகவே கொண்டு வரு கின்றேன்.'' ஆக, கடந்த 2, 3 ஆண்டுகளாக எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளின் மூலம், அரசு பெற்றிருக்கிற அனுபவங்களின் அடிப்படையில், நாம் இதிலே சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று நுழைகிறபோது, அங்கே இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, அவர்கள் கொடுக்கிற காரணங்கள், அதற்குத் துணையாக இருக்கிற சட்டங்கள் அல்லதுசட்ட விதிகள் இவைகளையெல்லாம் மனதிலே கொண்டுதான், உடனடியாக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1959-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதுதான் இறுதி யான சட்டம். 1925-ஆம் ஆண்டிலிருந்தே இப்படி இந்து சமய அறநிலையத் துறைக்கு, அறக்கட்டளைகளுக்கு ஒரு கட்டுப்பாடு வேண் டும், விதிகள் வேண்டும், ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளே இதைக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அதன் அடிப் படையில் ஒரு போர்டு நிறுவப்பட்டு, அது படிப்படியாக வளர்ந்து மாறுதல் அடைந்து, 1959-ஆம் ஆண்டுச் சட்டமாக அது இன்

றைக்கு நம்முடைய கையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை. அதனால் ஒரு காம்ப்ரியென்சிவ் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டு, இன்றைக்கு 21 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தால், காலநிலைமைகள் எவ்வளவோ மாறியிருக்கின்றன. அதற்கேற்ற படி மக்களுடைய நிலைகளும் மாறியிருக்கின்றன. சமுதாய நிலையும் மாறியிருக்கிறது. அவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு, இந்து மதம் எப்படி வளர்ந்துகொண்டு வருகிறது; இந்து மதம் எப்படி வளர்க்கப்படுகிறது; அதே சமயத்திலே மற்ற மதங்கள் எல்லாம் எப்படி வளர்ந்துகொண்டு வருகின்றன, எப்படி வளர்க்கப்படுகின்றன என்பதையும் அறிந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் இந்து சமயம் எப்படி இன்றைக்குவளர்ச்சி குறைந்து கொண்டு வருகிறது அல்லது வளர்ச்சி குறைக்கப்பட்டு வருகிறது, இதற்குக் காரணமானவர்கள் யார், யார்? ஏன் விழிப்புணர்வு இல்லாமல் இருக்கிறார்கள்? என்கிற அடிப்படைகளையெல்லாம் ஆராய்ந்து ஒரு ஒட்டுமொத்தமான, காம்ப்ரியென்சிவ் சட்டத் திருத்தமாகக் கொண்டு வரவேண்டுமென்ற நல்லெண்ணத்தின் காரணமாக, அத்தகைய ஒரு சட்டம் இப்போது சட்டத்துறையின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கிடையில் இந்தச் சட்டத் திருத்தத்தை மட்டும் ஏன் உடனடியாகக்கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டால், நான் உறுப்பினர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். இது 1976ஆம் ஆண்டு இந்த மாநிலம் குடியரசு ஆட்சித் தலைவருடைய ஆட்சியில் இருந்தபோது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் தொடர்ச்சிதான் இந்த சட்டத் திருத்தம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். ஆக, இது முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் முயற்சியாலும், இன்றைக்கு இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் முயற்சியாலும், ஆரம்பிக்கப்பட்ட ஒன்று அல்ல. இந்த மாநிலம் ஆளுநர் ஆட்சியில் இருந்தபோது இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்போதும் ஏன் அதற்கான முயற்சியை எடுத்தார்கள் என்று கேட்டால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருமே ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த நாட்டிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிற மடங்கள் அல்லது மடத்திற்குரிய தலைவர்கள் அல்லது பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற தலைவர்கள், ஆதீனகர்த்தாக்கள் அல்லது ஆச்சாரியர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் மதப்பரிசீலனை, மதத்திற்குரிய தொண்டினை அல்லது மதக் கருத்துக்களை மட்டும் மக்களிடத்தில் பரப்பிக் கொண்டிருக்கக்கூடிய பணியைச்செய்யவில்லை. அப்படி அவர்கள் செய்து கொண்டிருந்திருப்பார்களேயானால், அரசாங்கம் தலையிட வேண்டிய அவசியமே வந்திருக்காது. இப்படிப்பட்ட சட்டத் திருத்தத்தையும் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியமும் வந்திருக்காது. ஆனால் எப்படி அவர்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை, அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பல கோடிக் கணக்கான சொத்துக்களை இந்த நாட்டிலே அரசர்களும், கொடை உள்ளம் கொண்டவர்களும், மதத்தலைவர்களிடம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள், அதற்குப் பிறகு மன்னர் கொடுத்த பணத்தை வைத்து மாணிக்கவாசகர் ஆவுடையார் கோயிலில் சிற்பங்கள் நிறைந்த கோயிலைக் கட்டினார். இப்படியாக மதத் தலைவர்களிடத்தில் ஆலயங்களை நம்பிச் சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டன. இன்றைக்கு இருக்கிற சமயத் தலைவர்கள் எல்லாம் மதத்தை வளர்க்கிற சமயத்தலைவர்களாக மட்டும் இருந்திருந்தால், அவர்கள் பக்கத்திலே அரசாங்கமே, போகாது. போக வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இன்றைக்கு அவர்களிடத்தில் இருக்கிற சொத்துக்களின் மதிப்பு எத்தனை கோடி என்று மதிப்பிடவே முடியவில்லை. ஆனால் ஒரு தோராயமாக அவர்களுடைய பொறுப்பிலே இருக்கிற 55 ஆலயங்களிலிருந்து அவர்கள் கணக்குப்படி வருகிற வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 65,29,373 ரூபாய். மடங்களிலிருந்து வரக்கூடிய ஆண்டு வருமானம் 61,26,486 ரூபாய். ஆக, அவர்கள் தருகிற கணக்குப்படி, ஆண்டு ஒன்றுக்கு வருகிற மொத்த வருமானம் 1 கோடியே, 26 லட்சத்து, ஐம்பத்து ஐயாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொன்பது ரூபாய். நாம் அதற்கு உள்ளே நுழைந்து பார்க்க முடியவில்லை. பார்க்கப்போன இடத்தில்தான்தடை வந்தது.

குடியரசுத் தலைவருடைய ஆட்சியின் போது இந்த ஆலயங்களுக்கு நிர்வாக அதிகாரிகளைப் போட்டார்கள். மடங்களுக்குப் போடவில்லை. அதற்கும் அவர்கள் இப்படிப் போட உங்களுக்கு அதிகாரம் இல்லையென்று பேசினார்கள். அப்படி அவர்களால் தடுத்து நிறுத்தப்பட்ட ஒன்றுக்கு 1919ஆம் ஆண்டுச் சட்டத்திலே விதி இடம் தருகிறது. நிர்வாக அதிகாரிகளை நாம் போடலாம் என்று 1959-ஆம் ஆண்டுச் சட்டத்திலே விதி நமக்கு இடம் தந்திருக்கிறது. இதைக் கண்டுபிடித்து, நீண்டகாலமாகவே ஏன் இதைக் கொண்டு வர வழி வகை செய்யவில்லையென்று கேட்டபோது, இந்த முயற்சியில் இறங்கினோம். அது தடை செய்யப்பட்டது. 1979-ஆம் ஆண்டு மீண்டும் முயற்சி செய்தோம். மீண்டும் 1980-ஆம் ஆண்டில் தடை வாங்கி விட்டார்கள். அதுவும் 'அப்சலியூட் ஸ்டே' வாங்கிவிட்டார்கள். பொதுவாகவே ஒரு கோர்ட்டில் ஒருவர் ஸ்டே வாங்கிவிட்டால், அதற்கு அடுத்த தலைமுறையிலே தான் விடிவுகாலம் வரும். நாங்கள் கண்டறிந்து இங்கே கொண்டு வரப்பட்டிருப்பது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் முயற்சி எடுக்கப்பட்ட ஒன்று அல்ல. 1976-ஆம் ஆண்டில் குடியரசு ஆட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்திலேயே முயற்சி எடுக்கப்பட்டஒன்று இது என்பதையும், அதன் தொடர்ச்சியாக இந்த அரசு நடவடிக்கை எடுத்து இந்தச் சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறது என்பதையும், நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு

வருகிறேன். அப்படி நுழைய வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால், டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் அவர்களை வைத்து, இவைகளையெல்லாம் பரிசீலித்து ஒருஅறிக்கை தரவேண்டும் என்று, அன்றைக்குக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இது நீண்டகாலமாக இருந்துவரும் வரலாறுதான். அரசாங்கம் மடங்களிலே தலையிடுவது இன்று நேற்று மட்டும் உள்ள பழக்கமல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசுகிறபோது, அண்ணா அவர்கள் எழுதிய 'வேலைக்காரி' கதையைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு முன்பு 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்தக் கருத்துக்களைப் பரப்பியது 'சவுக்கடி சந்திரகாந்தா' என்ற நாடகமும் படமும்தான். அதிலே மடாதிபதிகளைக் கேவலப்படுத்தியதைப் போல, அண்ணா அவர்கள் எழுதிய வேலைக்காரியிலே கேவலப் படுத்தவில்லை. மடாதிபதிகள் என்பவர்கள் எப்பொழுதும் மக்கள் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், சமயத் தலைவர்கள் ஆகிறார்கள். ஆகவே அவர்கள் மக்கள் மத்தியிலே விமர்சிக்கப்படலாம் என்ற உரிமைக்கும் பொறுப்புக்கும் வந்து விடுகிறார்கள். அதை யாரும் தடுக்க முடியாது.

*சர் சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே ஒரு சிறிய அறிக்கையை மட்டும் நான் படிக்கின்றேன்.*

In many cases, the Heads of Maths have become essentially wordly and in some cases, have been found by Courts to be corrupt and immoral.

*அண்ணாதிராவிட முன்னேற்றக் கழக அரசு இப்படிச் சொல்லவில்லை. சர் .சி. பி. ஆர். அவர்கள் சொன்னது.*

Many are no: conversant in the first with principles of Hindu religion, not to speak of the fact that they really make little attempt to propagate or promote religious knowledge. The need for remedying this state of affairs is a matter of real urgency and the steps which we consider necessary in this regard will be discussed.

*1960ஆம் ஆண்டு மற்றும் 62-ஆம் ஆண்டு அதற்கென்று தரப்பட்ட அறிக்கைகளிலே, சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதிலே சில மடங்களைப் பற்றிச் சொல்கிறார். தருமபுரம் ஆதீனத்தைப் பற்றிச் சொல்கிறார்.*

The Dharmapuram Adheenam has 27 temples and Kattalais under its management and Public schemes, Sanitation schemes, Orphanages are being run. All these activities are to be paid for mainly out of the temple funds and not out of those of the Math.

*இது தருமபுரத்திற்கு அவர் தந்திருக்கும் சர்ட்டிபிக்கேட்.*

*அடுத்தபடியாக, திருவாவடுதுறைக்கு அவர் தந்திருக்கும் சர்ட்டிபிகேட் என்னவென்றால்,*

The head of Thiruvavaduthurai Mutt who is also a trustee of a number of temples is said to be not managing the temples satisfactorily.

*ஆகவே, 1960 மற்றும் 62ஆம் ஆண்டுகளிலே சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் அறிவித்த அந்த அறிக்கையிலே, இந்தமடங்கள் எல்லாம் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று என்று தெரிவித்திருக்கிறார். நான் இங்கே அவைகளுடைய சொத்துக்களைப் பற்றிச் சொன்னேன். அந்தச் சொத்துக்களிலேகூட, திருவாவடுதுறை மடத்தைப் பற்றி, பெயரைத் தனியாகச் சொல்லிப் பேசக் கூடாது, அப்படி பேசுவதனாலே ஏதோ ஒரு மடத்தை நாம் குறைத்துப் பேசுகிறோம் அல்லது அவர்களுக்குக் குறை ஏற்பட வேண்டும் என்று அந்த நோக்கத்திலே பேசுகிறோம் என்று, யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது என்ற அளவிலே, மிகவும் ஜாக்கிரதையாகப் பேசுகிறேன். திருவாவடுதுறை மடம்தான் இருக்கிற மடங்களிலேயே மிகவும் அதிகமான சொத்துக்களையுடைய மடம். அதற்கு இருக்கிற நஞ்சை புஞ்சை நிலங்கள் 26,813 ஏக்கர்கள். அதனுடைய பொறுப்பிலே இருக்கிற கோயில்களின் எண்ணிக்கை 19. ஆகவே, அது பெரிய மடமாக இருப்பதால், அந்த மடம் அப்படிப்பட்ட பெரிய காரியங்களை இந்தத் தமிழ்நாட்டிலே செய்த காரணத்தினாலே, 400-500 ஆண்டுகளாக அந்த மடம் ஆற்றியிருக்கிற சமயச் சேவைகளையும் தொண்டுகளையும் பார்த்தால், நம்முடைய வள்ளலார் இராமலிங்க அடிகளாரைப் பார்த்தவுடனே அவர் உள்ளே நுழைந்தவுடனே அவருக்கு எதிர்த்து வழக்குப் போட்ட, அவர் அருட்பா பாடவில்லை, மருட்பாதான் பாடினார் என்று சொன்ன மதிப்பிற்குரிய ஆறுமுக நாவலர் அவர்கள்கூட எழுந்து மதிப்பளித்தார் என்பதைப் பார்த்த நீதிபதிஅவர்கள் நீங்களே அவர்களைத் தலைவராக ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று தீர்ப்புக் கூறினார் என்பதைப் பார்க்கிறபோது, அப்படி அவர் வெள்ளை வேஷ்டி அணிந்து எளியவராக, காட்சிக்கு எளியவராக கருத்துக்கு இனியவராக, பெருமை வாய்ந்தவராக எப்படித் தோற்றமளித்தாரோ, அந்தத் தோற்றத்தை இன்றைக்கு நாம் யாரிடத்திலே பார்க்க முடிகிறது? அதனால் அல்லவா இன்றைக்குமீனாட்சிபுரம் நடந்திருக்கிறது? அதனால் அல்லவா இன்றைக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பெருவையூர்கள் எல்லாம் நடந்திருக்கின்றன. இவ்வளவு கோடிக்கணக்கான சொத்துக்களை என்றைக்கோ மன்னர்களும், வள்ளல்களும், கொடை வள்ளலார்களும் இவர்களிடம் ஒப்புவித்துப் போனார்கள்; எதற்காக என்றால் சமயத்திற்காகவும், மொழிக்காகவும். அதை யாரோ இன்றைக்குத் தனி மனிதர்கள் தங்களுடைய இஷ்டப்படி செலவழிக்கலாம், அழிக்கலாம் என்று சொல்லுவதை, சுதந்திரம் பெற்ற திருநாட்டிலே, நாடாளுமன்றமும், சட்டமன்றமும், சட்டமன்ற மேலவையும் இருந்து, இந்த*

நாட்டினுடைய ஆட்சியைப் பரிபாலனம் செய்யும் ஜனநாயக யுகத்தில் அதிலே தலையிடக் கூடாது என்ற உணர்வை நாம் ஏற்றுக் கொள்கிறோமா, அந்த உணர்வை நாம் பெறுகிறோமா என்பதை அருள்கூர்ந்து இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தெரிவிக்க வேண்டும். தலையிடலாம். ஆனால் எந்த அளவிற்குத் தலையிடுவது, என்றுகேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இருக்கிற திருத்தங்கள் எல்லாம், ஏற்கெனவே பழைய சட்டத்திலே இருக்கிற அடிப்படை விதிகள் தான். அதிலே வந்த சந்தேகங்களுக்குச் சில விளக்கங்களை இதிலே சேர்த்திருக்கிறோம். ரிலிஜியஸ் இன்ஸ்ட்டியூஷன் என்று சொல்லப் பட்டிருப்பதற்கு, முன்னாலேயே விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஆலயங்கள் என்று இருக்கிறது. ஆனால் 'மடம்' என்று இல்லை. ஆகவே எங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று சொன்னார்கள். ஆகவே, இப்போது ப்ராக்கெட்டுக்கு உள்ளே மடத்தையும் சேர்த்து இருக்கிறோம். ஆணையர் என்பவர் ஒரு நிர்வாக அதிகாரி மட்டுமல்ல, அவர் ஒரு நீதிபதிக்கு உள்ள அந்த அதிகாரத்தையும் பெற்றவர். அது முன்னாலே ஏற்படுத்தப் பட்ட சட்டம். ஆகவே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற அதிகாரமும், நீதிபதிகளுக்கு உள்ள அதிகாரமும், ஏற்கெனவே ஆணையருக்கு உள்ள அதிகாரம்தான். இன்றைக்கு அந்த மடங்கள் எல்லாம் ஆண்டுக்கு ஒருமுறை தான் அவர்களுடைய பட்ஜெட்டைத் தருகிறார்கள். ஆனால் அதற்குள்ளே சென்று கணக்கைக் கேட்க முடியாது. இவ்வளவு வரவு இவ்வளவு செலவு என்று கணக்கு மட்டும் தருகிறார்கள். திருவாவடுதுறை மடத்திலே வர வேண்டிய பாக்கியிருப்பது 2 கோடியே 2 இலட்சத்து 33 ஆயிரத்து 206 ரூபாய். இவ்வளவு விவசாயிகளிடத்திலேயிருந்து வர வேண்டியிருக்கிறது. இவ்வளவும் பாக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்திலே உள்ளவர்கள் கொடுக்காமல் இருப்பார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ளவர்கள் கொடுப்பார்கள், திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ளவர்கள் கொடுப்பார்கள். எங்களுக்கு இதெல்லாம்தெரியும். நாங்கள் வசூலித்துக் கொண்டிருக்கிறோம்.

2கோடியே 2இலட்சத்துச் சொச்சம் ரூபாய் பாக்கி இருக்கிறது அவ்வளவுதான். அதற்கு மேலே நாம் உள்ளே போக முடியாது. முன் அனுமதி பெறாமல் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. அப்படிச் செலவழிக்கும் நிலையில் எதற்கும் கேள்வி கேட்கக் கூடாது. எதிலும் தலையிடக் கூடாது. ஆகவே, நிர்வாகத்தையும் சேர்த்து வைத்துக் கொண்டு, இந்த நாட்டிலே சைவ சமயத்தையும் மொழி வளர்ச்சியும் ஆகிய இந்த இரண்டையும் இணைத்தார்கள் பெரியவர்கள். காரணம் தமிழ் வளர்ந்தால் சமயம் வளரும், சமயம் வளர்ந்தால் தமிழ் வளரும் என்று சொன்னார்கள். இந்தத் தமிழை நம்முடைய முன்னோர்கள் வளர்த்த பட்டியலைப் பார்த்தால், அவர்கள் எல்லாம் சமயத்தோடு இணைந்துதான் தமிழை வளர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் சொன்னதுபோல ஒரு சமயம் அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பாரதியார்கூடத் தமிழ் வளர்த்தால் தர்மம் வளரும் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இஸ்லாமிய மதமானாலும் சரி, கிறிஸ்தவ மதமானாலும் சரி, தமிழை வளர்த்தவர்கள் எல்லாம் சமயத்தையும் சேர்த்து வளர்த்திருக்கிறார்கள். அவரவர்களுடைய சமயத்தையும் சேர்த்து வளர்த்திருக்கிறார்கள். ஆனால், இந்து சமயத்தை வளர்ப்பதற்காக இவர்கள் என்ன செய்தார்கள்? ராபர்ட் நொபிலி என்பவர் இத்தாலியிலேயிருந்து சமயத்தைப் பரப்ப வேண்டும்என்று இந்தியாவுக்கு வந்தார். முதலில் கோவாவில் வந்து இறங்கி அதற்குப் பின்னர் மதுரைக்கு வந்தார். அப்போது பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருந்தார்கள். இவர் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப வந்தவர். நாட்டில் இருந்த சூழ்நிலையைப் பார்த்தார். பார்த்தவுடன் தன்னை ஒரு இந்துவைப் போல மாற்றிக் கொள்கிறார். தன்னோடு ஒரு பிராமணனையும் வைத்துக் கொள்கிறார். அவனை வைத்துச் சைவ உணவைச் சமைக்கச் செய்து உபயோகப்படுத்தினார். தன்னை ஒரு சைவ உணர்வு உள்ளவனாக ஆக்கிக் கொள்கிறார். அதற்குப் பிறகு சமயப் பிரச்சாரத்தை ஆரம்பிக்கிறார். இங்கிருப்பவர்கள் உடனே இந்த விஷயத்தைப் போப்புக்குச் சொல்கிறார்கள். நீங்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப இவரை அனுப்பினீர்கள். இவர் இங்கே வந்து பிராமணனை வைத்துக் கொண்டு சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு, சைவ சமயத்தைச் சேர்ந்தவனைப் போல இருக்கிறார் என்று சொன்னார்கள். அதற்கு இவர் விளக்கம் அளித்தார். இந்த நாட்டு மக்கள் எந்தச் சூழ்நிலையிலே இருக்கிறார்களோ, அந்தச் சூழ்நிலைக்கு என்னை மாற்றிக் கொண்டால்தான் நான் விரும்புகின்ற சமயத்தை வளர்க்க முடியும் என்று சொல்கிறார். ஆக, அவர்களெல்லாம் சமயத்தையும் தமிழையும் இணைத்தே வளர்த்திருக்கிறார்கள். அப்படித்தான் ஆரம்பத்திலே திருவாவடுதுறைமடத்திலேயும் வளர்த்தார்கள். தமிழ்ப்பெரியார் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், வேதநாயகம்பிள்ளை அவர்கள் போன்ற மிகப் பெரிய புலவர்கள் எல்லாம் -இன்னும் சொல்லப் போனால் தமிழ் மொழியைக்காப்பாற்றிய அனைத்துப் புலவர்களெல்லாம்-இந்தத் திருவாவடுதுறை மடத்தின் மூலம் அரும்பெரும் தொண்டு செய்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றைச் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும். கடந்த இரண்டு பட்டங்களாக அந்த ஆதீனத்தின் பொறுப்புக்கு வந்தவர்கள் எத்தகைய தகுதியைப் பெற்றிருந்தார்கள் என்பதை நாடறியும். நாம் அனுபவத்திலே இதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய சொத்துக்களையும், செல்வங்களையும், நாம் எதற்காக அவர்களிடத்திலே ஒப்படைத்தோம்? அவர்கள்

மூலமாக அவை இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்றுதானே ஒப்படைத்தோம். அதற்காகத்தானே மன்னர்களை ஒழித்தோம். மன்னர்களெல்லாம் மகேசர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். கோயில் என்பதே 'கோ' என்ற அரசனின் இடத்தைத்தான் குறிக்கும் என்று வியாக்கியானம் சொல்லப்பட்டது. ஆனால், அந்த மன்னர்களையெல்லாம்நாம் ஒழித்தோம். அதோடு அவர்களுடைய மானியத்தையும் ஒழித்தோம். இப்படி மக்களால் மதிக்கப்பட்டவர்களை எல்லாம் எதற்காக நாம் ஒழித்தோம்? நாட்டு மக்களின் தேவைக்காகத்தானே ஒழித்தோம். ஆனால் மடாதிபதிகளைப் பொறுத்த வரையில், நாம் யாரையும் ஒழிக்கச் சொல்லவில்லை. நாம் அவர்களிடத்திலே போகவே இல்லை. ஆனால் அருள்கூர்ந்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொதுச் சொத்துக்களை, பொதுச் செல்வங்களை இந்த நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் நிர்வாகத்தை அமைக்க வேண்டும். அதற்கு அவர்கள் உதவி செய்ய வேண்டும் என்றுதான் கேட்கிறோம்.

கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போல், இன்றைக்கு அந்த மடத்தின் தலைவர்கள் மாறிவிட்டார்கள். இதைச் சொல்வதற்காக இந்த அவையில் உள்ளவர்கள் மன்னிக்க வேண்டும். கடந்த இரண்டரை ஆண்டுகளாக நான் அறிந்ததைப் பற்றிப் பட்டியலே போட்டுத் தருவதற்குத் தயாராகஇருக்கிறேன். நாற்பதாண்டுக் காலத்திற்கும் மேலாகப் பகுத்தறிவு இயக்கத்தில் தொண்டனாக இருந்த நான்-என்னைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி எப்படி வேண்டுமானாலும் எண்ணிக் கொள்ளட்டும்—ஆண்டவன்எனக்குத் தண்டனையிட்டிருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை—இப்போது ஒரு நாளைக்கு நான்கு கோயில்களுக்குப் போய் வருகிறேன். நான் கோயிலுக்குப் போவதால் யாருக்கும் எந்தப் பாதகமும் வரவில்லை. வேண்டுமானால் விசாரித்துப் பார்த்துக் கொள்ளலாம். கோயில்களில் தற்போது பொதுவாக என்ன நடக்கிறது என்பதை, நண்பர்கள் கட்சி உணர்ச்சிக்கு அப்பாற்பட்டவர்களைப் பார்த்துக் கேட்டுப் பார்க்கலாம். அப்படி பல்வேறு கோயில்களுக்குப் போகிறபோது, நான் என்னுடைய 40 ஆண்டுக்காலப் பகுத்தறிவு இயக்கத்தோடு தொடர்புள்ள வாழ்க்கையை மறந்து விட்டு, அந்த இலட்சியத்தையே மறந்துவிட்டு, எந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ, அதை நிறைவேற்றினால், அதன் மூலம் நமது இலட்சியத்தையே நிறைவேற்றலாம் என்று செயலாற்றிக்கொண்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களும், திருமூலரும் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் சைவத் தொண்டு.

இன்றைய தினம் காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரியார் அவர்கள், 84 வயதைக் கடந்தவர். அவர் இன்றைக்குத் துறவுக் கோலத்தில் நாடு முழுவதும் கால்நடையாகச் சுற்றித் திரிந்து வேள்வி நடத்திக் கொண்டிருக்கிறார். அவர் ஒருபுறம். அவருக்கு அடுத்த புறத்தில், அவருடைய வாரிசாக வந்திருப்பவர், அவரையொட்டிப் பல பணிகளைச் செய்து வருகிறார். இன்றைய தினம் அவர் குருவாயூரிலிருந்து கொண்டு, தினந்தோறும் அரசாங்கத்திற்குப் பத்துக் கடிதங்களை அனுப்பிக்கொண்டிருக்கிறார். மீனாட்சிபுரம் சம்பவத்திற்குப் பிறகு, அங்கே பல தூதுக் குழுக்களை அனுப்பிக் கொண்டு பல ஹரிஜனங்களையும் சந்தித்து, அவர்களிடமிருந்து அவருக்கு வருகிற விண்ணப்பங்களையெல்லாம், அரசாங்கத்திற்கு அனுப்பி, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். இது ஒருபுறம்.

இன்னொருபுறத்தில் அகோபில மடம் ஜீயர், 85 வயதாகிறது. ஸ்ரீரங்கத்தில் உள்ள மொட்டைக் கோபுரத்தைச் சுமார் 70, 80 இலட்சம் ரூபாய் செலவில்-அரசாங்கத்திடமிருந்து ஒரு காசைக்கூடப் பெறாமல், பொது மக்களிடத்திலேயே வசூல்செய்து-கட்டும் திருப்பணியில் ஈடுபட்டு, ஒரு கொத்தனாரைப்போல் ஒரு மேஸ்திரியைப் போல் இருந்து கொண்டு, அந்தக் கோபுரத்தைக் கட்டி முடித்து விட்டுத் தான் மறுவேலை என்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

அடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், இன்றைய சமுதாயக் கண்ணோட்டத்தோடு சமயத்தையும்தமிழையும்இணைத்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாடெங்கும் சுற்றி அவர் இன்றைக்குத் தமிழையும் சமயத்தையும் வளர்த்து வருகிறார். அது மட்டுமல்ல, கோவையிலுள்ள பேரூர் சாந்தலிங்க அடிகளாரும், தவத்திரு சுந்தர அடிகளாரும், தமிழையும் சமயத்தையும் சேர்த்து இணைத்தே வளர்த்து வருகிறார்கள். அதன் மூலம் நாட்டு மக்களிடையே நற்பணியாற்றி வருகிறார்கள். கோவையிலுள்ள சுந்தர அடிகளார், சுமார் 15 திருக்கோயில்களுக்கு அந்த மாவட்டத்திலேயே திருப்பணி செய்திருக்கிறார். அதைப்போலப் பேரூர் சாந்தலிங்க அடிகளார் அங்கே மிகப்பெரிய தமிழ்க் கல்லூரியை நடத்தி வருகிறார். அவர் சமயப் பேரவையின் தலைவராக இருந்தார். ஆனால், அந்த அமைப்பு இப்போது ஏன் இயங்கவில்லை. அந்த அமைப்பிலே திருவாவடுதுறை ஆதீனம் வந்தால், அதற்குத் தருமை மடத்தைச் சார்ந்தவர் வரமாட்டார். இவர் வந்தால் அவர் வரமாட்டார். அவ்வளவு ஒற்றுமை இரண்டு மடங்களுக்குமிடையே. இதன் காரணமாக அந்தப் பேரவையில் சமயத்தை வளர்ப்பதற்கான இடமில்லாமல் போய்விட்டது. பேரவையில் இருந்த அரசாங்கப் பணமெல்லாம்கரைந்து போய், இப்போது அச்சகம் ஒன்றுதான் அங்கே மிச்சப்பட்டிருக்கிறது. அதற்கும் ஒரு தாவா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே பெயர்களைச் சொல்ல வேண்டாம் என்றுதான் எண்ணினேன். ஆனால் நாட்டில் இருக்கும் சூழ்நிலை, மக்களுக்குத் தெரிய வேண்டுமே என்ற எண்ணத்தில், இந்த விவரங்களையெல்லாம் நான் தெரிவித்தேன்.

இந்த நிலையில் இப்போது இந்தச் சட்டத்திற்கு என்ன அவசரம் வந்தது என்று கேட்கலாம். கடந்த 1980-ஆம் ஆண்டு, மிகப் பெரியவர்கள் என்று கருதப்படக்கூடியவர்கள் நான் அவர்களின் பெயரை இங்கே குறிப்பிட விரும்பவில்லை - அவர்களெல்லாம் உண்மையிலேயே மிகுந்த மரியாதைக்கும் மதிப்புக்கும் உரியவர்கள். சமயத்தோடு, தொடர்பு கொண்டு சமயப்பணியாற்றுபவர்கள். அதிலும் சிறப்பாகத் திருவாவடுதுறை மடத்தோடு தொடர்பு கொண்டவர்கள் 3, 4 பேர் திடீரென்று என்னிடம் வந்து, திருவாவடுதுறை ஆதீனத்தில் மிகப் பெரிய அபாயம் ஒன்று வருவதற்கிருக்கிறது, அரசாங்கம் அதில் தலையிட்டு அதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். என்ன அப்படிப்பட்ட அபாயம் என்று கேட்டேன். ''இன்றைக்கு இருக்கும் ஆதீனகர்த்தரின் உடல் நலிவடைந்து அபாய கட்டத்திற்கு வந்துவிட்டார். அதனால் அவர் அவசர அவசரமாக ஒரு வாரிசை நியமிக்க முனைகிறார்'' என்றார்கள்.

இதில் சட்டம் என்ன சொல்கிறது என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அருள் கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். 1933-ஆம் ஆண்டில் ஒரு ஸ்கீம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஸ்கீம்படி திருவாவடுதுறை மடம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஆதீனத்தின் தலைவர் உயிரோடு இருக்கும்போது, காஷாயம் தரித்த ஒருவரைப் பார்த்து 'இவர் தான் என்னுடைய வாரிசு' என்று சொல்லிவிட வேண்டும். அப்படிச் சொல்லாவிட்டால், அப்படிச் சொல்லாமல் அவர் காலமாகிவிட்டால், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்கும் தம்பிரான்களையெல்லாம் அழைத்து ஒன்று கூட்டி, அதில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்காகத்தான் பலர் இறக்கிறார்கள் என்கிறார்கள் அல்லது கொல்லப்படுகிறார்கள் என்கிறார்கள். என்னென்னவோ மர்மங்களெல்லாம் அங்கே நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு அவர்கள் விண்ணப்பம் அளித்தார்கள். உடனே தலையிடுங்கள் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதோடு, யாரோ ஒருவரைக் கொண்டு வந்து அவருக்குப் பட்டம் கட்ட இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். விசாரித்து அவர்களே விவரம் தந்தார்கள். கையெழுத்துப் போட்டு அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்தார்கள். அவைகளையெல்லாம் இங்கே படிக்கக்கூடாது, நான் அவைகளைப் படிக்க விரும்பவில்லை. ''நம்முடைய பல்லைக் குத்தி நாமே முகர்ந்து பார்ப்பதுபோல்'' என்று பழமொழி சொல்லுவார்கள். ஆனால், இங்கே அந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது என்பது மட்டுமல்ல, அறுவைச் சிகிச்சை செய்தால்தான் பிழைக்கும் என்று தெரிந்தபிறகு, துணிந்து செய்தாக வேண்டும். இல்லையென்றால் அது சிழ்பிடித்து ''ஆளே 'குலோஸ்' ஆவதோடு, எத்தனை மீனாட்சி புரங்களாக மாறுமோ தெரியாது. இத்தகைய சூழ்நிலையில்தான், அரசாங்கம் ஜாக்கிரதையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டினார்கள். அப்படி பட்டம் கட்டப்படுவதாக இருந்த ஆசாமி யார் என்று பார்த்தால், அம்பாசமுத்திரம் மில் ஒன்றில் ஸ்டோர் கீப்பராக வேலை செய்து கொண்டிருந்த நபர் ஒருவரை அழைத்து வந்து அவருக்கு அந்தப்பட்டம் கட்டுவதாக இருந்திருக்கிறார். அவருக்கும் அந்த இடத்திற்கும் எந்தவிதமான ஸ்நானப் பிராப்தியும் கிடையாது. அவர் எப்போதும் அங்கே இருந்ததேகிடையாது. அவர் காஷாயம் தரித்து மடத்தில் எப்போதும் தொண்டு செய்ததும் கிடையாது. அவர் துறவியானதும் கிடையாது. அப்படிப்பட்ட ஒரு நபரைக் கொண்டு வந்து, காஷாயம் கொடுத்து 8ஆவது மாதத்திலேயே, இவர்தான் பட்டத்து இளவரசு என்று அறிவித்து விட்டார். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டார்கள். இவ்வாறு அந்த மடத்திற்கு வேண்டியவர்களே கொடுத்த வேண்டுகோளையொட்டி, இந்து சமய அற நிலையத்துறை ஆணையர் அவர்கள், அவருக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில்—இத்தகைய அதிகாரம் அவருக்கு ஏற்கனவே இருக்கிறது—எவ்வாறு இப்படி ஒரு தகுதியற்ற ஒருவரை நியமித்தீர்கள் என்று கேட்டார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இவ்வளவு விவகாரங்களையும் சொல்லிவிட்ட நிலையில், மனு கொடுத்த அந்தப் பெரியவர்களின் பெயர்களையும் சொல்லி விடலாமே.

மாண்புமிகு திரு இராம. வீரப்பன் : அது இந்த அவைக்கு நல்லதல்ல என்று நினைக்கிறேன். தேவையானால் ஒரு குழுவே அமைத்து...

திரு. க. இராமமூர்த்தி : மடாதிபதி யார் என்பது இங்கே சொல்லப்பட்டுவிட்டது. அது எந்த மடம் என்பதும் சொல்லப்பட்டுவிட்டது. கமிஷனர் எடுத்த நடவடிக்கை என்ன என்பதும் வந்தாகிவிட்டது. இவ்வளவு விவரங்களையும் கண்டு பிடித்துச் சொன்னவர்கள், யார் என்பதுதான் இன்னும் வெளியிடப்படவில்லை. அந்த மிகப் பெரியவர்கள், இந்த அளவுக்கு அக்கறை கொண்டவர்கள் யார் என்பதை மட்டும்தான் சொல்லவில்லை. அவர்களையும் சொல்லிவிடுவது நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : அது தேவையில்லை என்றுதான் நான் கருதுகிறேன். நடைபெற்ற சம்பவம் உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு, செயல்பட்டால் போதும். சொன்னவர்களைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நடைபெற்றதாகச் சொல்லப்பட்டதில் தவறு இருந்தால், தவறான தகவல்களைக் கொடுத்தது யார் என்று கேட்டால், நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்களே, இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்பதற்கான சான்றுகளையே சொல்லிவிட்டார்.

•

இதையடுத்து அறநிலையத்துறை ஆணையர் அவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்பினார். உடனே அதற்கு ஆதீனத்திலிருந்து என்ன பதில் வந்தது என்றால், ''இது எங்களுடைய சொந்தப் பிரச்சினை, இதில் வேறு யாரும்

தலையிடக்கூடாது'' என்பது மட்டுமல்ல, இதில் தலையிட அறநிலையத்துறை அதிகாரி களுக்கு அதிகாரமே கிடையாது என்றுசொல்லி, கோர்ட்டுக்குப் போய் ஒரு ஸ்டேயும் வாங்கி விட்டார்கள். அதைப்பற்றியும் டாக்டர் சி.பி. ராமசாமி அய்யர் ரிப்போர்ட்டில் இருக்கிறது. இந்த அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்ட பின்னால் வந்தவர்கள், எப்படி அவற்றை தங்க ளுடைய சொந்தச் சொத்துக்களைப் போலக் கருத ஆரம்பித்துவிட்டார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் இந்தச் சட்டத்திருத்தங்கள் நமக்கு அவசியமாகி விட்டன. தகுதியற்றவர்கள் இத்தனை கோடி ரூபாயைத் தங்களுடைய சொத்துபோலப் பாவிப்பது சரியல்ல. அது மட்டுமல்லாமல், இந்த மாநிலத்திலே 85 சதவீதம் பேர், இந்து சமயத்தைப்பின்பற்றுபவர்கள்இருக்கிறார்கள். அவர்களிலே நானும் ஒருவன். இதைச்சொல்லு வதற்கு நான் வெட்கப்படவில்லை. என்னை யாராவது யார் என்று கேட்டால், நான் மனிதன் என்று சொல்வேன். ''இந்து மதத் திலே பிறந்தாயா?'' என்று கேட்டால், ''ஆம், என்னுடைய தாய் தந்தையர் இந்து மதம் தான்'' என்பேன். ''சாகிறபோது எப்படிச் சாவாய்?'' என்று கேட்டால், மனிதனாகச் சாவேன்; இந்து மதத்திலே பிறந்து இந்து மதத்திலேயே சாவேன்'' என்று சொல்வேன். நான் இதை மறுக்கமாட்டேன், இப்படிச்சொல் வதற்கு வெட்கப்படமாட்டேன். என்னைப் பெற்றெடுத்தவர்கள் இந்து மதத்திலே பெற் றெடுத்தார்கள். ஆகவே சாகும்போது இந்து மதத்திலேயே சாவேன். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று உலகம் மாறவேண்டு மென்ற தத்துவத்தை நோக்கிக் கனவு கண்டு கொண்டிருக்கிற ஆத்மா. ஆகவே எனக்கு இந்து சமயத்திலே நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. 85 சத விகிதம் பேர் நம்புகிற, மதத்திலே, இருக்கிற வர்கள் வணங்குகிற, தலைவருக்குச் சில தகுதிகள் நிர்ணயிக்க வேண்டாமா என்பது தான். இந்தத் தகுதியை இதற்கு முன்பே நிர்ணயித்திருக்கிறார்கள். நாங்கள் இதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்லியிருக்கிறோம். அவர் இந்துவாகத்தான் இருக்க வேண்டும். ஆணையாளரைப் பற்றிக்கூட சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்து மதத்திற்கு எந்தவிதமான அப்பழுக்கும் வந்துவிடாது, எந்தவிதமான அபாயமும் வந்துவிடாது. நம்மை நாமே அழித்துக் கொண்டுவிடக்கூடாது என்பதுதான், எங்களுக்கு இருக்கிற கவலை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்றைக்கு அர சாங்கம் இந்த நடவடிக்கையை அவசர அவசர மாக எடுத்து, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய நிலையில் இருக்கிறது. இல்லையென்றால் ''கம்ப்ரஹென்சிவ் லா'' வருகிறபோது, எல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு வந்திருப்போம். ''வித் புராப்பர்ட்டி, வித்தவுட் புராப்பர்ட்டி'' என்றெல்லாம் சொன்னார்கள். அதுவும் இருக்கிறது.

அறக்கட்டளைகள் இல்லாதவைகளும் இருக்கின்றன. அது எப்படியோ மக்களால் கவரப்பட்டிருப்பதால், மக்கள் பணத்தைக் கொட்டுகிறார்கள். அங்குபோய் நாம் கேட் டால், ''இது ஒன்றும் அறக்கட்டளை அல்ல. இதற்குள்ளே வராதே. இது என்னுடைய சொந்தப்பணம். பாதகாணிக்கையாக மக்கள் எனக்குக் கொண்டு வந்து தருகிறார்கள்'' என்று சொல்கிறார்கள். இதைப்போலச் சில மடங்கள் இருக்கின்றன. இதோடு பெருந்துறை அப்பச்சியார் மடத்திலே மிகப் பெரிய கணக்கு வந்தது. இலட்சக்கணக்கான ரூபாய்களை, ஆடு, மாடுகளை, கோழிகளைத் தருகிறார்கள். ஆனால்யாரையும் உள்ளே விட மறுக்கிறார்கள். இதைப்போல இங்கே பல மடங்கள் இருக்கின் றன. ஆதிமூலசுவாமிகள் மடம், பிச்சானூர், குடியாத்தம், நிரம்ப அழகிய மடம், துலாவூர், காரைக்குடி, கீழ்மடம், கள்ளக்குடி, காரைக் குடி என்று பல மடங்கள் இருக்கின்றன. அங் கெல்லாம் இன்றைக்கு எண்டோமெண்ட் இல் லாமல் இருக்கலாம், நாளைக்கு வரலாம். அன்றைக்குச் சட்டம் போட முடியாது.ஆகவே மக்கள் சொத்துக்களைச் சமயத் தொண்டிற் காகத் தருகிறார்களா அல்லது தனிமனித னுடைய சுய வேட்கைக்காகத் தருகிறார் களா? இதுதான் இன்றைக்குள்ள பிரச்சினை. எனக்குத் தருகிற பாதகாணிக்கையை என் இஷ்டப்படி செலவு செய்வேன் என்று எத் தனை இலட்சத்தை வாங்குவது ?

இருபதாவது பட்டத்திலே இருந்தவர், இந்த நாடு பூராவும் சுற்றித் திருவாவடுதுறை மடத்திலே 87 இலட்சம் ரூபாயைப் பாத காணிக்கையாகப் பெற்று வைத்து விட்டுப் போய்விட்டார். அதை அவருக்குப் பிறகு வந்த இருபத்தொன்றாவது, இருபத்திரண்டாவது பட்டங்கள் எங்கேயென்று தெரியாமல் ஆக்கி யிருக்கிறார்கள். இன்றைக்குள்ள எந்த மடாதிபதியாவது நாடு முழுவதும் சுற்றி 85 இலட்சம் ரூபாயை வாங்க முடியுமா? அந்த அளவிற்கு வாங்கும் தகுதியிருக்கிறதா? இருப தாவது பட்டத்திலே இருந்தவர் ஒரு கோடி ரூபாயைச் சேர்க்க வேண்டுமென்று திட்ட மிட்டிருக்கிறார். அதில் 85 இலட்சம் ரூபாயைச் சேர்த்திருக்கிறார். அதற்குள்ளே இறைவன் அவரை அழைத்துக் கொண்டார். பின்னாலே வந்த இரண்டு பட்டத்தைச் சேர்ந்தவர்கள், அதைக் காணாமல் செய்துவிட்டார்கள். இப் போது 23ஆவது பட்டத்தைப் பற்றித்தான் சொன்னேன். ஆகவே இவர்களையெல்லாம் கேட்க ஆள் வேண்டாமா? அதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அர சியல் சட்டத்தையே 44 தடவை திருத்தி யிருக்கிறோம். அப்படியிருக்கும்போது, இந்தச் சட்டத்தைத் திருத்துவதில் என்ன தவறு? ஆண்டவனையே கேள்வி கேட்ட மதம் சைவ மதம். ''நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே'' என்று கேட்க வைத்த மதம் சைவமதம். ''சங்கு அறுப்பது எங்கள் குலம், சங்கரனார்க்கு ஏதுகுலம்; சங்கை அறிந்துண்டு வாழ்வோம், அரனே நின்போல் இரந்துண்டு வாழ்வதில்லை'' என்று சொன்ன மதம் சைவ மதம். அப்படிப்பட்டவர்களை வளர்த்த மதம் இந்துமதம். இத்தகைய மதத்தின் தலைவ

ராக ஒன்றும் தெரியாதவர்கள் எல்லாம் வருவார்கள், அவர்கள் காலில் விழுந்து வணங்க வேண்டும். இதுதான் தலையெழுத்து என்றால் இந்து சமயத்தைக் காப்பாற்றுகிறோம் என்று பொருளா, என்று உறுப்பினர்களே சிந்திக்க வேண்டும் என்று, அவர்களிடமே விட்டுவிடுகிறேன்.

ஆகவே, இந்து சமயத்திற்கோ இந்து சமயத் தலைவர்களுக்கோ இழிவு ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் ஒரு துளிக்கூட எங்களுக்கு இல்லை. மற்ற மதத் தலைவர்களுக்கு முன்னால், இந்து மதத் தலைவர்களைக் குறைவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. நம்முடைய சமயத்தை நாம் திருத்துகிறோம். நம்முடைய குறைபாட்டை நாம் போக்குகிறோம். நம்முடைய குறைகளை நாமே உணர்கிறோம். அதற்காகத்தான் சில உரிமைகளை ஆணையாளருக்குத் தந்திருக்கிறோம். இதுகூட ஏற்கெனவே இருந்ததுதான். இப்போது மேலும் சில உரிமைகளைச் சேர்த்துத் தருகிறோம். ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டால், அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். பிறகு அவர்கள் கோர்ட்டுக்குப் போகலாம், தடையாணையைப் பெறலாம். தடையாணை என்பது ஏற்கெனவே உள்ள சட்டத்திலே இருப்பதுதான். ரிட் ஜூரிஸ்டிக்ஷனில் போய், தடையாணை பெற இன்றைக்கு உரிமை இருக்கிறது. சாதாரணமாக சப்-கோர்ட்டிலே போய் 'ஸ்டே' வாங்கிவிட்டால், பிறகு அதைத் தீர்க்க 15 வருடங்கள் ஆகின்றன. வழக்கறிஞர்களைப் பொறுத்த வரையில், தடையைச் சுலபமாக வாங்கி விடுகிறார்கள். ''நீங்கள் ஒன்றும் பயப்பட வேண்டாம், பணத்தைக் கொண்டு வாருங்கள், மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன், ஸ்டே வாங்கித் தருகிறேன்'' என்று வழக்கறிஞர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் மன்னிக்க வேண்டும். இன்றைக்கு அந்த அளவிற்கு 'ஸ்டே' வாங்குவது என்பது சுலபமாகிவிட்டது. மக்களுடைய நல்ல முயற்சிகளுக்காக எடுக்கப்படுகிற நடவடிக்கைகள், இந்தியாவின் பெருமதிப்பு பெற்ற நாடாளுமன்றம் நிறைவேற்றுகிற சட்டங்கள்கூட, உச்ச நீதிமன்றத்திலே தடுமாறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற்று விட்டுத்தான், இந்தச் சட்டத் திருத்தத்தை அறிமுகப் படுத்தியிருக்கிறோம். ஏனென்றால் இது கன்கரன்ட் லிஸ்டில் இருக்கின்ற ஒன்று. ஆகவே வேறு எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது என்பதை, மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், தினசரி ஆலயத்திற்குச் செல்லுகிற ஆத்திகர்களைவிட, நான் இந்த இந்து சமயத் துறையின் பொறுப்பேற்றிருக்கிற காலம் வரை, நிச்சயமாக ஒழுங்காகக் காப்பாற்றுவேன் என்ற உறுதிமொழியை, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளலாம். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர். திரு. சங்கரலிங்கம் அவர்கள், இந்த நாட்டைப் பகுத்தறிவுப் பாதையிலிருந்து மாற்றிவிடுவேனோ என்று பயப்படவேண்டாம். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற தத்துவத்திற்கு அனைவரையும் அழைக்க இருக்கிறோம். நாமே அறநிலையத் துறையின் சார்பாக மாநாடு கூட்டவிருக்கிறோம். அதற்கான ஆரம்பக் கூட்டம் நடைபெற்றாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய விளைவுகளைப் பற்றி இனி மேல் பரிசீலித்து அறநிலையத்துறையில் ஒரு முடிவு எடுப்பதற்காக, ஓர் ஆலோசனைக் குழுவை அமைக்கவிருக்கிறோம். அது ஒரு வாரத்திற்குள் அமைக்கப்பட இருக்கிறது. அறநிலையத்துறை அமைச்சரைத் தலைவராகவும், மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள், பொதுத்துறையிலே, சமயத்துறையிலே தொடர்பு கொண்ட பெரியவர்கள், இந்த நாட்டிலே இருக்கின்ற எல்லா மடங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் அல்லது ஆதீனகர்த்தாக்கள்—அவர்கள் வரமுடியவில்லை என்றால், அவர்களுடைய பிரதிநிதிகள்—சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்த இந்து சமயத்திற்குப்பட்ட எல்லோரும் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவை அரசாங்கம் அமைக்கவிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் முத்தையா செட்டியார் அவர்கள், இந்தச் சட்டத்தை நிறைவேற்றினாலும்கூட, இதை 'நோட்டிஃபை' செய்வதைக் கொஞ்சம் தள்ளி வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். எப்போது 'நோட்டிஃபை' செய்கிறோம், எப்போது நிறைவேற்றுகிறோம் என்பதல்ல பிரச்சினை. நோயைக் கண்டுபிடித்தாகிவிட்டது. அது கடுமையான நோய் என்று தெரிந்தாகிவிட்டது. எவ்வளவு சீக்கிரம் அறுவைச் சிகிச்சையைச் செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்வது நோயாளிக்கு நல்லது. அப்படியில்லாமல் டாக்டர் 'டூ லேட்' என்று சொல்லி விடக்கூடாது. இதுதான் இன்றைக்குள்ள அவசரம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தச் சந்தேகமும் கொள்ள வேண்டாம். என்னுடைய இதயத்தைத் திறந்து சொல்லுகிறேன், என்னுடைய வாழ்நாளில் இந்து சமயத்திற்காகவும், இந்து சமய வழிபாட்டுக்காகவும், இந்து சமயத் தலைவர்களுக்காகவும் வாதாடுகிற கட்டம், என் மூலம் வரும் என்று 13 வயதில் தந்தை பெரியார் தொண்டனாக மாறிய நேரத்தில் எண்ணியதே கிடையாது. இன்றைக்கு அத்தகைய ஒரு சூழ்நிலையில், நாடு முழுவதும் சுற்றிக் கொண்டிருக்கிறேன் என்று, இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்கிறேன். நான் பேசுகின்ற அரசியல் கட்சிக் கூட்டங்களை விட, அதிகமான அளவுக்கு ஆஸ்திக, சமயக் கூட்டங்கள்தான் இருக்கின்றன. ஆகவே அங்கத்தினர்களுக்கு நான் அருள் கூர்ந்து தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மிகப் பெரிய, கோடிக்கணக்கான சொத்துக்களைத் தனி மனிதர்களிடத்திலே விட்டிருக்கிறார்கள். அவர்கள் சுட்டுவிரல் காட்டினால், என்ன வேண்டுமானாலும்செய்து

விடலாம் என்ற நிலையிலே இருக்கின்றது. அதுவும் அந்தச் சொத்துக்களைத் தகுதி இல்லாதவர்களிடத்திலே கொண்டு போய் ஒப்படைத்து விட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். அதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத் திருத்தத்தை வைத்துக் கொண்டு அரசாங்கமோ அறநிலையத்துறையோ இந்து சமயத்திற்கு அல்லது தலைவர்களுக்கு இழுக்கு ஏற்படுத்துவதையோ, சமயத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவதையோ, இந்த அரசு சகியாது என்று உறுதியாகக் கூறி, இந்து சமயத்தினுடைய பாதுகாப்பைக் கருதி, தமிழ் வளர்ச்சியைக் கருதி, இந்து சமயத்தைத் தக்கவர்களிடத்தில் தக்க நேரத்தில் சேர்க்க வேண்டும் என்ற அளவில், இந்தச் சட்ட முன்வடிவை ஏற்று அங்கத்தினர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. க. இராமமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கின்ற திருத்தங்களுக்கெல்லாம் நான் விடையளித்துவிட்டேன் என்று கருதுகிறேன். ஒவ்வொரு திருத்தத்தையும் அவர் வற்புறுத்தாமல் மொத்தமாக அவர்கள் திரும்பப் பெற வேண்டும். சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று அவர்களைத் தனியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**

---

நூல் அறிமுகம்

## ஒன்றே குலம்! ஒருவனே தேவன்!

மதுரைத் திருவள்ளுவர் கழகப் புரவலர், ''வாழ்விக்க வந்தோர் வரலாறு—பழமுதிர் சோலை—கோயில் மாநகர் — முதலிய நூல்களின் ஆசிரியர்'' ''அறநெறியண்ணல்'' திரு கி. பழனியப்பன் அவர்கள், இந்நூலை எளிய இனிய நடையில், தெளிவாகவும் சிறப்பாகவும், அழகுற எழுதியிருக்கின்றார்கள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், பத்தாம் திருமுறை ஆக விளங்கும் திருமூலர் திருமந்திரம் கூறும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்னும் சீரிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டது, சைவசித்தாந்தம் என்னும் தமிழகத் தத்துவக் கொளகை. அக்கொள்கையின் அருமை பெருமைகளை உணர்த்தும் முறையில், மெய்கண்டதேவர் அருளிய சிவஞான போதத்திற்குச் சான்றோர் பலர் கூறிய வினக்கங்களின் அடிப்படையில் தொகுக்கப்பெற்ற, கருத்துக்கோவையாக இந்நூல் அமைந்து விளங்குகின்றது.

ஆசிரியர், பாமரரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய முறையில், பேச்சு நடையில், கருத்துக்களை அழகாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். அன்பர்கள் பலருக்கும் ஏற்படக்கூடிய, பலவகை ஐயப்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றிற்குரிய விளக்கங்களையும், ஆசிரியர் இதன்கண் கூறியுள்ளார். பகுத்தறிவுக்கும், விஞ்ஞான அறிவிற்கும், நமது சமயம் எவ்வகையிலும் புறம்பானது அன்று என்பது, இந்நூலில் நன்கு விளக்கப்பெற்றுள்ளது. சமயம், வாழ்விற்கு உயிர் போன்றது. சமய தத்துவ அறிவு, சமய வளர்ச்சிக்கு உரிய அடித்தளம். எனவே, அனைவரும் தத்துவங்களை அறிந்து, வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக் கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் பயன் பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன், இந்நூலை ஆசிரியர் அழகுற எழுதி வெளியிட்டுள்ளார்.

சைவசித்தாந்தத் தத்துவம், புலவர்கள்பால் மட்டுமேயன்றிப் பொது மக்களிடையிலும், மிகுதியாகப் பரவி வளர்தல் வேண்டுமென்று விரும்பி, இந்நூலை அறநெறி அண்ணல் திரு. கி. பழனியப்பன் அவர்கள் இயற்றி அளித்திருப்பது, யாவராலும் போற்றிப் பாராட்டப்படுதற்குரியது, காஞ்சி காமகோடி பீடம் தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சங்கராச்சாரிய சுவாமிகள் அவர்கள், இந்நூலுக்கு அருளாசி வழங்கியிருக்கின்றார்கள். சைவசித்தாந்தம் கற்க விரும்புபவர்களுக்கு, இந்நூல் ஓர் எளிய இனிய தொடக்க நூலாகப் பெரிதும் பயன்படும். சிறந்த பயன்மிக்க நூல். விலை ரூபா 5/- கிடைக்குமிடம்: விவேகானந்தா அச்சகம், 48, மேலமாசி வீதி, மதுரை-1.

—ஆசிரியர்.

# பாரதியாரும் விநாயகரும்

''சிலம்புச் செல்வர்''
டாக்டர் திரு. ம. பொ. சிவஞானம், M.L.C., D.Litt.,
சட்டமன்ற மேலவைத் தலைவர்

இந்தியப் பெரு நாட்டிலுள்ள இந்துக்களெல்லாம் 'விநாயகர்' எனப்படும் 'பிள்ளையார்' பெருவிழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர். தமிழர்களிலேயும் இந்துக்களானோர் இவ்விழாவைக் கொண்டாடத் தவறவில்லை. விநாயகர் வழிபாடு சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. அங்குப் பிள்ளையார் எனும் பெயர் முருகப்பெருமானுக்குத்தான் சொல்லப்படுகிறது. இந்தப் பெயர் பிற்காலத்தில் விநாயகப் பெருமானுக்கே உரியதாகிவிட்டது. விநாயகர் வழிபாடு தமிழகத்தில் புகுந்தது, தமிழர் அல்லாதார் எனப்படும் பல்லவர் ஆதிக்கத்தின்போதுதான்.

பிள்ளையார், பின்னால் வந்த புதுத் தெய்வமாயினும், அவர் அகச் சமயத்தார்அனைவருக்கும் பொதுத்தெய்வம் ஆகிவிட்டார். சந்திதோறும் ஏழை எளியவர்கள் எல்லோரும் ஆராதித்து வழிபடுகின்ற 'முச்சந்திப் பிள்ளையார்' கோயில்கள் தமிழகத்திலே ஏராளமாக இருக்கின்றன. பிளாட்பாரம் பிள்ளையார்களுக்கும் கணக்கில்லை. சுருங்கச் சொன்னால் 'மக்கள் தெய்வம்' என்னும் அளவுக்குப் பிள்ளையாரப்பன் தமிழகத்திலே செல்வாக்குப் பெற்றிருக்கிறார்.

இதனால், மக்கள் கவியான சி. சுப்பிரமணிய பாரதியார், 'விநாயகர் நான்மணி மாலை' என்னும் பெயரில், காப்புச் செய்யுள் உள்பட 41 செய்யுட்களால், தனியாகப் பனுவல் ஒன்றையே படைத்துவிட்டார். அதிலே, 'ஏழையர் தெய்வம்' என்னும் பெயர் தந்தே பிள்ளையாரைப் போற்றுகின்றார் பாரதியார். ஆம்; 16ஆவது செய்யுளிலே, 'ஏழையர்க்கெல்லாம் இரங்கும் பிள்ளை' என்று பிள்ளையார் பெருமானை வருணித்திருக்கிறார். பாரதியார் சக்தி வழிபாட்டைக் கடைப்பிடித்த 'சாக்தர்' எனப்படுகிறார். அப்படியிருந்தும் பராசக்தி மீது தனிப் பாடல்கள் சில பாடியதன்றி, தனி நூல் படைக்கவில்லை.

'கண்ணன் பாட்டு' என்னும் பெயரிலே, திருமால் பற்றித் தனி நூல் என்று சொல்லத்தக்க வகையில் இலக்கியம் ஒன்றைப் படைத்திருக்கிறார். அதுகூட, தமிழ் ஐந்திணை இலக்கணப்படி அகத்துறை பற்றிப் பாடவேண்டுமென்ற ஆர்வத்தால் படைக்கப்பட்டதென்றே சொல்ல வேண்டும். கண்ணன் பாட்டுக்கு வ. வே. சு. ஐயர் தந்துள்ள மதிப்புரையிலே, அப்பட்டமான பக்தி நூலாக அதனை ஏற்பதற்கு அவர் சங்கடப்படுகிறார். சிவபெருமான், முருகன், லட்சுமி, சரசுவதி ஆகிய இந்து சமயத் தெய்வங்கள் பலவற்றின் மீதும் பாரதியார் பக்திப் பாடல்கள் புனைந்துள்ளார். அவையனைத்தும் தனிப் பாடல்களே!

பாரதியார் படைத்த பக்தி நூல் 'விநாயகர் நான்மணி மாலை' ஒன்றுதான். ஒவ்வொரு செய்யுளிலேயும் பக்திப் பரவசத்துடன் பிள்ளையாரை வழிபடுகிறார் பாரதியார். கலித்துறை, விருத்தம், அகவல், வெண்பா ஆகிய நால்வேறு பாவினங்களால் பிள்ளையாரைப் பாடுகிறாராதலால், நால்வேறு பாவினங்களைக் கொண்டு, பத்துத் தொகுதியாக நாற்பது பாடல்களைப் புனைந்துள்ளாராதலால், 'நான்மணி மாலை' என்று பெயர் தந்துள்ளார். அதையும் அந்தாதி இலக்கணப்படிப் பாடியுள்ளார். ஒரு செய்யுளின் இறுதியிலே வரும் சொல் அடுத்துள்ள செய்யுளின் முதலிலே வருவதனை 'அந்தாதி' என்னும் தமிழிலக்கணம்! ஆம், அந்தமும் ஆதியுமற்ற பரம்பொருளை அந்தாதி இலக்கணப்படிப் பாடியுள்ளார் நம் தேசிய மகாகவி.

புதுவையிலே மணக்குள விநாயகர்கோயில் என்றிருக்கின்றது. அந்தக் கோயிலுக்கு அடிக்கடி சென்று மணக்குள விநாயகரைப் பாரதியார் மனங்கனிந்து பாடி வழிப்டுவது வழக்கமாம். அந்த மணக்குள விநாயகருக்குத்தான், தாம் புனைந்த நான்மணிமாலையை அணிவித்துள்ளார். கோடானுகோடி மக்கள் தங்கள் இதயங்களிலே வைத்துப் போற்றும் தேசியக் கவிஞரிடம் நான்மணிமாலை பெறப் புதுவை மணக்குள விநாயகர் என்ன தவம் செய்தாரோ! ஆம்; ஏழையர் தெய்வமாக இருப்பதால்தான் பாரதியார் பிற தெய்வங்களுக்குத் தராத பெருமையைப் பிள்ளையாருக்குத் தந்து அவர்மீது தனியாகப் பக்திப் பனுவல் படைத்தார் போலும்.

தமிழ் மக்களிடையில் மிகுந்த செல்வாக்குடன் விளங்குவது, ஔவையார் பெயரால் உள்ள விநாயகர் அகவல்தான். வேறு சில புலவர்கள் விநாயகருக்குப் பக்தி நூல் படைத்துள்ளனரென்றாலும், அவை மக்கள் மத்தியிலே அதிக செல்வாக்குப் பெறவில்லை. ஔவையார் பெயரில் உலவ விட்டதனாலோ என்னவோ, விநாயகர் அகவல் தமிழகத்தில் உள்ள இந்துக்களின் இல்லந்தோறும் ஏற்றம் பெற்றுவிட்டது. கணபதி விழாவிலே, அந்த விழாவைக் கொண்டாடும் வீடுதோறும் விநாயகர் அகவல் பாடிடக் கேட்கிறோம். ஔவையாரின் விநாயகர்அகவலுக்குஅடுத்தபடியாகத்தமிழிலே சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் படித்துப் பக்தி செலுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது, பாரதியார் பாடியுள்ள விநாயகர் நான்மணி மாலை.

ஔவையாருடன் போட்டியிடுவதிலே பாரதியாருக்குத் தனி ஆர்வம் போலும்! புதிய ஆத்திசூடி படைத்து, ஔவையார் படைத்த ஆத்திசூடிக்கு வழிநூல் தந்த பெருமையைத் தேடிக் கொண்டார் பாரதியார். விநாயகர் பக்தர்களிடையேயும் ஔவையாருக்குரிய பெருமையிலே பங்கு பெற விரும்பியதுபோல, விநாயகர் அகவலுக்குப் போட்டியாக 'விநாயகர் நான்மணி மாலை'யைப் படைத்திருக்கிறார்.

பாரதிக்குத் தமிழில் இலக்கணப் புலமை கிடையாது என்று, தமிழ்ப் புலவர்களிலே சிலர் அவரைக் குறைசொன்ன காலமுண்டு. இந்தக் கூற்று முற்றிலும் பொய் என்பதைக் காட்ட எத்தனையோ சான்றுகள் உண்டு, பாரதியாரின் கவிதைத் தொகுப்பிலே! அந்தச்சான்றுகளில் ஒன்று, நால்வேறு பாவினங்களைக் கொண்டு அந்தாதி முறையில் பாரதியார் பாடியுள்ள 'விநாயகர் நான்மணி மாலை'.

இந்த நூலை மவுனத்தைக் கடைப்பிடித்து இயற்றியதாகப் பாரதியார் கூறுகின்றார். ஆம் ஓரிடத்தில் அமர்ந்து, வாய் மூடி மவுனியாகி, புறக்கண்களை மூடி, அகக் கண்களைத் திறந்து விநாயகர் மீது தம் மனத்துள்ளேயே பாடி, பாரதியார், விநாயகர் நான்மணிமாலையைப் படைத்தார் போலும்! இதனை,

''நீயே சரணம் நினதருளே
சரணஞ் சரணம்
நாயேன் பலபிழை செய்து
களைத்துனை நாடி வந்தேன்;
வாயே திறவாத மவுனத்து
இருந்துஉன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசும்
தமிழ்க் கவி செய்குவனே''

என்று முதல் செய்யுளிலேயே பாரதியார் அறிவிக்கின்றார். ஆம்; 'வாயே திறவாத மவுனத்தில் இருந்து தமிழ்க் கவி செய்வேன்' என்று விரதங்கொண்டு, விநாயகர் நான்மணி மாலையில் உள்ள செய்யுள்கள் அனைத்தையும் முதலில் தன் இதயத்தே எழுதிக்கொண்டு, பின்னர் ஏட்டிலே எழுதினாராம். பாரதியாரிடம் நாம் காணும் புதுத்திறமை இது; இப்படி, மவுனத்திலிருந்து அவர் பாடிய ஒளி வீசும் தமிழ்க் கவிகள் எத்தனை எத்தனையோ!

தனி நூலுக்குக் காப்புச் செய்யுள் இயற்றுவது மரபு. அதையும் விநாயகர் துதியாகத்தான் படைப்பது வழக்கம். பல தெய்வங்களுக்குத் தனித் தனியே காப்புச் செய்யுள் படைக்குங்கால், முதற் செய்யுள் விநாயகருக்குத்தான் படைப்பதுண்டு. பாரதியாரும் தாம் இயற்றிய விநாயகர் நான்மணி மாலைக்குக் காப்புச் செய்யுள் படைத்துள்ளார்.

சக்திபெறும் பாவாணர் சாற்று
பொருள் யாதெனினும்
சித்திபெறச் செய்வார்க்கு
வல்லமைக்கா; அத்தனே
நின்றனக்குக் காப்புரைப்பார்;
நின்மீது செய்யும் நூல்
இன்றிதற்கும் காப்பு நீயே

இது, விநாயகர்மீது பாரதியார் இயற்றியுள்ள காப்புச் செய்யுள். நூல் இயற்றுவோர் விநாயகருக்குக் காப்புச் செய்யுள் படைப்பது வழக்கமென்று பாரதியார் இங்குக் கூறினாலும், விநாயகர் நான்மணிமாலையைத் தவிர, தாம் இயற்றிய வேறு எந்த நூலிலேயும் அவர் காப்புச் செய்யுளை விநாயகருக்குரியதாகச் செய்யவில்லை. புதிய ஆத்திசூடியிலே,

''ஆத்தி சூடி
இளம் பிறை யணிந்து
மோனத் திருக்கும்
முழு வெண் மேனியான்''

என்று, எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் பெயரால் தொடங்கி, நாம ரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டு விளங்கும் எல்லையற்ற இயற்கைச் சக்திக்குக் காப்புச் செய்யுள் படைத்திருக்கிறார்.

''பாஞ்சாலி சபதத்திலே'' பிரம்மன்-கலைவாணி-பராசக்தி ஆகியோருக்குத் தனித்தனியே காப்புச் செய்யுள் பாடியுள்ளார். 'பாரதி அறுபத்தாறு' என்னும் நூலிலே, பராசக்திக்கு மட்டுமே காப்புச் செய்யுள் படைத்துள்ளார். ஆம், புரட்சி உள்ளம் படைத்த புதுமைக் கவியான பாரதியார், விநாயகருக்குக் காப்புச்செய்யுள் பாடுவதனைத் தவிர்க்க முடியாத மதக் கொள்கையாகக் கொண்டிருக்கவில்லை.

பாரதியார், புராணக் கற்பனைகளை எதிர்த்துப் போராடவில்லை என்றாலும், கலையுரைத்த கற்பனையை நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கத்தைக்கடைப் பிடித்துப் புராணக் கற்பனைகளை மெய்யென்று நம்பி, அவற்றுக்கு அடிமைப் பட்டவருமல்லர். இதனை விநாயகர் நான்மணிமாலையிலே தெளிவாகக் காண்கிறோம். புராணவாதிகளைப் போலப் பாரதியாரும் விநாயகப் பெருமானை,

சந்திர மௌலித் தலைவன் மைந்தன்,
வல்லபைக் கோன்,
சக்தி தலைப் பிள்ளை
கரிமுகன்,
யானை முகன்,
அங்குச பாசமும் கொம்பும் தரித்தோன்

என்றெல்லாம், பிள்ளையாரின் பிறப்பையும் தோற்றத்தையும் பற்றி மதவாதிகள் சொன்ன கற்பனைகளை எல்லாம், தாமும் கூறுகின்றார்.

தேசியவாதியான பாரதியார், ஏனைய மதவாதிகள் போல விநாயகப் பெருமானை, 'ஓம்' என்னும் பிரணவப் பொருளாக-தனித் தெய்வமாகப் பார்த்தார். இதனை, 'விநாயகர் நான்மணி மாலை'யுள்,

''ஓமெனும் நிலையில்
ஒளியாகத் திகழ்வான்''

''ஓமெனும் பொருளை
உளத்திலே நிறுத்தி''

என்று பாடியுள்ள வரிகளால் அறிகின்றோம். இத்துடன் நில்லாமல், 'யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே' என்றும் வழிபடுகின்றார்.

சர்வ சமய சமரசவாதியான பாரதியார், உலகத்து மதங்களெலாம் கற்பித்துள்ள அனைத்துக் கடவுளர்களுமாக விநாயக தேவனைப் பார்க்கிறார். இதற்கான சான்றுகளை அவரியற்றிய 'விநாயகர் நான்மணி மாலை'யுள் பார்ப்போம்.

''ஐயா! நான்முகப் பிரமா!
யானை முகனே! வாணிதனைக்
கையாலணைத்துக் காப்பவனே!
கமலாசனத்துக் கற்பகமே!'' (1)

''வேத முனிவர்
விரிவாப் புகழ்ந்த
பிருகற் பதியும்
பிரமனும் யாவும்
தானே யாகிய
தனிமுதற் கடவுள்'' (2)

''விநாயக தேவனாய்.
வேலுடைக் குமரனாய்,
நாராயணனாய்,
நதிச்சடை முடியனாய்,
தேவருந் தானாய்,
திருமகள் ,பாரதி,
உமையெனுந் தேவியர்
உகந்தவான் பொருளாய்,
உலகெலாங் காக்கும்
ஒருவன்....'' (3)

''இறைவி இறையவன்
இரண்டும் ஒன்றாகித்
தாயாய்த் தந்தையாய்ச்
சக்தியும் சிவனுமாய்
உள்ளொளி யாகி
உலகெலாந் திகழும்
பரம்பொரு ளேயோ!
பரம்பொரு ளேயோ! (4)

''ஆதிமூலமே!
அனைத்தையும் காக்கும்
தேவ தேவா!
சிவனே! கண்ணா!
வேலா! சாத்தா!
விநாயகா! மாடா!
இருளா! சூரியா!
இந்துவே! சக்தியே!'' (5)

''வாணி! காளீ!
மாமக ளேயோ!
ஆணாய்ப் பெண்ணாய்
அலியாய் உள்ளது
யாதுமாய் விளங்கும்
இயற்கைத் தெய்வமே!
வேதச் சுடரே!
மெய்யாங் கடவுளே!'' (6)

இப்படி, இந்துமதம், பரம்பொருளுக்கு எத்தனை வடிவம் கற்பித்துள்ளதோ, எத்தனை பெயர் தந்துள்ளதோ, அத்தனையையும் பயன்படுத்தி, விநாயகரை வழிபடுகின்றார். இனி, புறச் சமயங்கள் கற்பித்துள்ள பெயர்களாலும் விநாயகரை வழிபட விரும்பி,

''பிறநாட் டிருப்போர்
பெயர் பல கூறி,
அல்லா யெகோவா!
எனத்தொழு தன்புறும்
உலகெலாங் காக்கும்
ஒருவனே....''

என்றும் பாடிப் பரவுகின்றார் பாரதியார்.

பாரதியார், அரசியல்வாதி மட்டுமல்ல; ஆன்மீக வாதியுமாவார். பிறரை ஆள விரும்புவோன் அரசியல்வாதி; தன்னைத் தான் ஆள விரும்புவோன் ஆன்மீகவாதி. பாரதியும் தன்னை ஆளுந் தகுதியைத் தருமாறு விநாயகரிடம் வேண்டினார்.

''தன்னைத்தான் ஆளுந்
தன்மை நான் பெற்றிடில்,
எல்லாப் பயன்களும்
தாமே எய்தும்''

என்பது பாரதி வாக்கு. இதற்குத் தேவைப்படும் 'அசையா நெஞ்சம் அருள்வாய்' என்றும் விநாயகரை வேண்டினார்.

''உள்ளமெனும் நாட்டை
ஒருபிழை யின்றி
ஆள்வதும், பேரொளி
ஞாயிறே யனைய
சுடர்தரு மதியொடு
துயரின்றி வாழ்தலும்,
நோக்க மாக்கொண்டு,
நின்பதம் நோக்கினேன்''

என்கிறார். ஆம்; அரசியல்வாதியாக மட்டும் இருப்பவன் ஊராள வரம் வேண்டுவான். அரசியல்வாதியும் ஆன்மீக வாதியுமான பாரதியார் 'உளமாள வரம் வேண்டும்' என்கிறார். அதையும் ''சுடர்தரும் மதியொடு, பிழையின்றி ஆள அருளல் வேண்டும்' என்கின்றார். ஆம்; ஊராள்

வோர் போல, உளம் ஆள்வோனும் பிழை செய்துவிடக் கூடாதல்லவா! இன்னும்,

''வேலைத் தவறு நிகழாது
நல்ல வினைகள் செய்துன்
கோலை மனமெனும் நாட்டின்
நிறுத்தல் குறியெனக்கே''

என்ற வரிகளும், தவறேதும் செய்யாமல் மன மெனும் நாட்டை மதிகொண்டு ஆளுவதே, தனது குறிக்கோள் என்கிறார் பாரதியார். விநாயகரை வழிபடுவதால் வரும் பயன்களைக் கூறுகின்றார்.

''உட்செவி திறக்கும்;
அகக்கண் ஒளிதரும்;
அக்கினி தோன்றும்;
ஆண்மை வலியுறும்;
திக்கெலாம் வென்று
ஜெயக் கொடி நாட்டலாம்;

விடத்தையும் நோவையும்
வெம்பகை யதனையும்
துச்சமென் றெண்ணித்
துயரிலா திங்கு
நிச்சலும் வாழ்ந்து
நிலைபெற் றோங்கலாம்;

அச்சந் தீரும்;
அமுதம் விளையும்;
வித்தை வளரும்;
வேள்வி ஓங்கும்;
அமரத் தன்மை
எய்தவும்
இங்கு நாம் பெறலாம்''

நம் தேசிய மகாகவி, ஒவ்வொரு மனித னுக்கும் நான்கு கடமைகள் உண்டென்கிறார். அவற்றைக் கடைப்பிடித்து வாழ்வோனுக்கு நான்கு பயன்களும் உண்டென்று உறுதி கூறு கின்றார். பாரதி கூறும் கடமைகளையும் பயன்களையும் உணர்த்தும் செய்யுள் வருமாறு:

''கடமை யாவன
தன்னைக் கட்டுதல்,
பிறர் துயர்தீர்த்தல்,
பிறர்நலம் வேண்டுதல்,
உலகெலாம் காக்கும்
ஒருவனைப் போற்றுதல்,
இந்நான் கேயிப்
பூமியில் எவர்க்கும்
கடமை யெனப்படும்;
பயனிதில் நான்கால்;
அறம் பொருள், இன்பம்
வீடுஎனும் முறையே''

பாரதி, தமக்கும் தமது தாய் நாட்டுக்கும் வரங்கள் வேண்டுகின்றார். ஆம்; தனி மனிதன் தனக்கு மட்டுமே வரங்கள் வேண்டுவான்; தேசத் தலைவனான தேசியக் கவியான பாரதி தனக்கு மட்டுமன்றி, தனது நாட்டுக்கும் வரம் வேண்டுகின்றார். அவர் தனக்கு வேண்டும் வரங்களாவன:

''எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி!
மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந்திட நீ செயல் வேண்டும்;
கனக்கும் செல்வம், நூறு வயது,
இவையும் தர நீ கடவாயே'' *(1)*

''நோவு வேண்டேன்:
நூறாண்டு வேண்டினேன்!
அச்சம் வேண்டேன்,
அமைதி வேண்டினேன்;
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டியதனைத்தும்
அருள்வதுன் கடனே'' *(2)*

''உனக்கே என் ஆவியும்
உள்ளமும் தந்தேன்:
மனக்கேதம் யாவினையும்
மாற்றி -எனக்கே
நீண்டபுகழ் வாழ்நாள்
நிறை செல்வம் பேரழகு
வேண்டு மட்டும் ஈவாய்
விரைந்து'' (3)

இனி, நாட்டின் நலன் கருதி, பாரதியார் வேண் டும் வரங்களைப் பார்ப்போம்:

''பேசாப் பொருளைப்
பேச நான் துணிந்தேன்;
கேட்சா வரத்தைக்
கேட்க நான் துணிந்தேன்;
மண் மீதுள்ள
மக்கள் பறவைகள்
விலங்குகள், பூச்சிகள்,
புற்பூண்டு, மரங்கள்
யாவுமென் வினையால்
இடும்பை தீர்ந்தே,
இன்பமுற் றன்புடன்
இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும்
தேவ தேவா!

ஞானா காசத்து
நடுவே நின்றுநான்
பூமண்ட லத்தில்
அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும்
மிடிமையும், நோவும்
சாவும் நீங்கிச்
சார்ந்த பல்லுயிரெலாம்
இன்புற்று வாழ்க!
என்பேன்; இதனைநீ
திருச் செவி கொண்டு
திருவுளம் இரங்கி,
அங்ஙனே ஆகுக
என்பாய் சிவனே!
இந்நாள் இப்பொழுது
எனக்கிவ் வரத்தினை
அருள்வாய்.....''

பாரதியார், தமிழ்த் தொண்டு புரியவும் பிரண வப் பொருளாம் பிள்ளையாரிடம் வரம் வேண்டுவார்; இதனை;

''பண்டைச் சிறுமைகள் போக்கி,
என்நாவிற் பழுத்த சுவைத்
தெண்டமிழ்ப் பாடல் ஒருகோடி
மேவிடச் செய்குவையே''

என்ற வரிகளில் பார்க்கிறோம். ஆம், தமிழ் மொழிக்குப் பண்டைப் பெருமைகள் பல இருத்தல் போல, பண்டைச் சிறுமைகளும் பல உள வாம். அவற்றைப் போக்கி, புதிய பெருமைகளைச் சேர்க்கும் பாடல்களைப் புனைய வரம் வேண்டுகிறார். அவையும் நூறு, ஆயிரம், லட்சம் பாடல்கள் அல்லவாம்; ஒரு கோடி பாக்கள் புனைய வரம் வேண்டுமாம், என்ன பேராசை!

பாரதியார் தம் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் கலியுகம் அழிந்து கிருதயுகம் தோன்ற வேண்டும் என்கிறார். அந்த யுகப் புரட்சியையும் தானே செய்து முடிக்கப் போவதாயும் கூறுவார். ஆம், அவ்வளவு தன்னம்பிக்கை.

''வீழ்க கலியின்
வலி யெல்லாம்
கிருதயுகந்தான் மேவுகவே''

''கிருத யுகத்தினைக்
கேடின்றி நிறுத்த
விரதம் நான்
கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன்''.

''மெய்க்குங் கவலைப் பகைபோக்கி,
முன்னோன் அருளைத் துணையாக்கி,
எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி,
உடலை இரும்புக் கிணையாக்கிப்
பொய்க்குங் கலியை நான்கொன்று
பூலோகத்தார் கண் முன்னே,
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே!''

இந்த வரிகளிலே, கலியுகத்தைக் கொல்வேன்; கிருதயுகத்தைப் படைப்பேன்; இதற்கான விரதம் யான் கொண்டனன்; தெய்வ விதி இஃதே என்று கூறுகின்றார். ஆம், பிற மத வாதிகளைப் போல, பாரதியார் விநாயகபக்தர் ஆனால், அவர் பார்வையிலுள்ள விநாயகர், தெய்வம் பல பேசும் சழக்கர் காணும் கணபதியல்ல. இவர் சமரச விநாயகர்; சர்வமத விநாயகர்! தேசிய விநாயகர்; ஆன்ம விடுதலைக்கேயன்றி, அரசியல் விடுதலைக்கும் வரங் கொடுக்கும் விநாயகர். அதனால்,

''கணபதி ராயன்-அவனிரு
காலைப் பிடித்திடுவோம்'
குண முயர்ந்திடவே-விடுதலை
கூடி மகிழ்ந்திடவே''

என்ற பாடலிலே, ''நாட்டின் விடுதலையைக் கோரி விநாயகரை வழிபடுவோம் வாரீர்?'' என்ற தேச பக்தியுடைய இந்தியர்களையெல்லாம் அன்போடு அழைத்தார் பாரதியார்.

'அர்ச்சனை' என்பதன் பொருள், இறைவனைப் புகழ்ந்து போற்றி வழிபட்டு வரங் கேட்பதாம். பாரதியார், அர்ச்சனை முறையில் 'போற்றி அகவல்' பாடி வைத்துப் போயுள்ளார். தமிழ் அர்ச்சனை முறை தமிழகத்துக் கோயில்களிலே தொடங்கப்பட்டுவரும் அர்ச்சனைப் பாடலையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

தமிழிலோ, சமஸ்கிருதத்திலோ பயன் படுத்தப்பட்டுவரும் அர்ச்சனை மந்திரம் மிகவும் நீளமாக இருக்கிறது. அதனால், நேரம் அதிகமாகின்றது. இதனால் கோயிலுக்கு வரும் பக்தர் ஒவ்வொருவரும் அர்ச்சனையை விரும்புவது சாத்தியமில்லாமற் போகிறது. பாரதியார் பாடியுள்ள போற்றி அகவல் 28 வரிகளைக் கொண்டு, சுருங்கிய அளவில் அமைந்துள்ளது. அது வருமாறு :

போற்றி உலகொரு மூன்றையும் புணர்ப்பாய்
மாற்றுவாய் துடைப்பாய், வளர்ப்பாய், காப்பாய்
கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும்
கலந்தாற்போல நீ அனைத்திலும் கலந்தாய்
உலகெலாந் தானாய் ஒளிர்வாய், போற்றி!
அன்னை, போற்றி! அமுதே போற்றி!
புதியதிற் புதுமையாய், முதியதில் முதுமையாய்;
உயிரிலே உயிராய், இறப்பிலும் உயிராய்
உண்டெனும் பொருளில் உண்மையாய் என்
னுள்ளே
நானெனும் பொருளாய், நானையே பெருக்கித்
தானென மாற்றுஞ் சாகாச் சுடராய்,
கவலை நோய் தீர்க்கும் மருந்தின் சுடராய்,
பிணியிருள் கெடுக்கும் பேரொளி ஞாயிறாய்!
யானெனது இன்றி யிருக்குநல் யோகியர்
ஞானமா மகுட நடுத்திகழ் மணியாய்
செய்கையாய், ஊக்கமாய், சித்தமும், அறிவாய்
நின்றிடுந் தாயே, நித்தமும் போற்றி!
இன்பம் கேட்டேன், ஈவாய் போற்றி!
துன்பம் வேண்டேன், துடைப்பாய்போற்றி!
அமுதங் கேட்டேன், அளிப்பாய் போற்றி!
சக்தி போற்றி! தாயே போற்றி!
முக்தி போற்றி! மோனமே போற்றி!
சாவினை வேண்டேன், தவிர்ப்பாய் போற்றி!

இந்தப் பாடலில், 17ஆவது வரியில் வரும் 'தாயே' என்பதனைத் 'தேவே' என்றும் 21ஆவது வரியில் வரும் 'தாயே' என்பதனை 'சாமி' என்றும் மாற்றிக் கொண்டால், சைவக் கோயில்களில் மட்டுமன்றி, வைணவக்கோயில் களிலும் பயன்படுத்தலாம்.

பாரதியார் போற்றி அகவல் பாடியதால், அர்ச்சனை தமிழில் நடப்பதையே அவரும் விரும்பினார் என்பது புலனாகும்.

—o—

# நாராயண கவசம்

திருமதி சௌந்தரா கைலாசம்

[எல்லோருடைய வணக்கத்திற்கும் உரியவரான பிருகஸ்பதி பகவான், ஒருசமயம் தேவசபைக்கு எழுந்தருளினார். அப்போது இந்திரன் ஆணவத்தால், அவரை எதிர்கொண்டழைத்து ஆசனமளித்துப் போற்றாமல் புறக்கணித்து இருந்து விட்டான். தீர்க்கதரிசியும் மகானுமான ஆங்கிரச முனிவர் தேவேந்திரனின் அகங்காரத்தை நினைத்துச் சபையிலிருந்து மௌனமாக வெளியேறித் தன் யோகசக்தியால் யாரும் காணமுடியாதபடி மறைந்து விட்டார். இதை அறிந்த அசுரர்கள் சுக்கிராச்சாரியாரின் அனுமதியோடு தேவர்கள்பால் போர் தொடுத்தனர். அவமானப்பட்ட தேவர்கள் இந்திரனோடு பிரம்மாவைச் சரணடைந்தார்கள். இப்போது பிரம்மா இந்திரன் தான்செய்த பிழையினை உணரும்படி செய்து, துவஷ்டாவின் குமாரனாகிய விஸ்வரூபன் என்பவரைச் சென்று சரணடையுங்கள். அவர் தம் தவபலத்தினால், உங்களுக்குச் சிறப்பும் வெற்றியும் ஏற்படச் செய்வார் என்று கூறினார். அதன்படி தேவேந்திரன், துவஷ்டா என்ற அந்தணனுக்கும், ரசனை என்ற அசுரப்பெண்ணிற்கும் பிறந்த விஸ்வரூபன் என்பவரை அடைந்து பணிந்தான். சுக்கிராச்சாரியரின் வித்தியா பலத்தால் காக்கப்பட்டிருந்த அசுர சாம்ராஜ்யத்தை, மகாவிஷ்ணுவின் உபாசனா பலத்தால் விஸ்வரூபன் அசுரர்களிடமிருந்து கவர்ந்து தேவேந்திரனுக்கு வழங்கினார். அவர் உபதேசித்ததுதான் '' நாராயண கவசம் '' என்பது. வியாசபாகவதத்தில் தட்சவம்ச சருக்கத்தில் உள்ள, நாராயண கவசம் இங்குத் தமிழிற் பக்தர்களுக்குப் பயன்படும்பொருட்டுத் தமிழாக்கம் செய்து தரப்படுகின்றது.]

திருவடித் தாமரை சிறந்தநற் கருடன்
புறமுது கதனில் பொலிவுற வைத்து
சங்கு சக்கரம் சர்மம் கத்தி
பங்கமில் கதை,வில் பாணம் பாசம்
எனப்படும் ஆயுதம் எட்டையும் ஏந்தி, நல்
வினைப்படும் புஜங்கள் வியனுறக் கொண்டு
இனிய குணங்கள் எனுமவை எட்டும்
நனியுடைத் தான நாரா யணஅரி
ஆன ரட்சைகள் அனைத்தும் அளித்திட
வேணுமென் றேயான் வேண்டித் துதித்தேன்!
(1)

யுகத்தின் இறுதியில் ஓங்கிய ஜ்வாலையை
மிகமிக விரித்து மின்னும்அக் கினிபோல்
கூரிய விளிம்பினைக் கொண்டுபே ரொளியதைப்
பாரிலே எங்கணும் பரப்பிடும் சக்கரம்
எம்பிரா னவனால் ஏவிடப் பெற்றே
அம்பரம் அகிலம் அனைத்திலும் சுழன்று,
கனலது பரவக் காற்றின் துணையால்
முனை, வலி வாய்ந்த முட்புதர் அதனைப்
பொசுக்கு வதேபோல் பொல்லாப் பகைவரைப்
பொசுக்குவ தாகுக! பொசுக்குவ தாகுக! (2)

எட்டுத் திசையிலும் பேரொலி எழுப்பித்
தொட்டதை அழிக்கத் தோன்றும் இடிபோல்
கனற்பொறி கக்கும் கதையே! அச்சுதன்
மனதுக் குகந்த மாண்பொரு ளானாய்!
கூஷ்மாண்டர் வைநா யிக ரோடு
நிஷ்டூரமான யட்சராட் சசர்எனும்
பிழைபடு பூத கிரஹங்க ளனைத்தும்
அழிவுறப் பிறிந்திடுன் ஆற்றலால் கதையே!
துட்டப் பகையெலாம் துயர்மிகப் பட்டுப்
பொட்டென வீழப் பொடியாக் கிடுவாய்! (3)

சிறப்பெலாம் ஒன்று சேர்ந்திடும் சங்கமே!
கறுத்த நன்னிறக் கண்ணனால் நீதான்
ஊதிடப் பெற்றே உலகம் அதிர்ந்திடும்
நாதமுண் டாக்கி நள்ளார் இதயம்
நடுங்கிட வைத்து நலமொன் றறியா
ப்ரமத மாத்ரு பிசாச மவையுடன்
பிரம்ம ராட்சஸ கணங்களும் இன்னும்
கொடியதோர் பார்வை கொண்டுள பிறரும்
வெருண்டோ டிடவே விரட்டி அடிப்பாய்! (4)

குத்தக் கொடுமையும் கூர்மையும் வாய்ந்த
கத்தியே! நீலக் கடவுளால் நீதான்
வீசிடப் பெற்றென் வேண்டாப் பகைவரை
நாசப் படுத்துவாய்! நாசப் படுத்துவாய்! (5)

சந்திரர் நூறெனும் தன்மையில் ஒளியினைத்
தந்திடும் சர்மமே! தர்மம் குலையுறக்
கொடுமைகள் செய்யும் கொடும்பா விகளால்
எதிரிகள் கண்களை எடுத்தெறி தோண்டி! (6)

கேதுக்கள் மூலமும் கிரஹங்கள் மூலமும்
பாதக மானிடர் பாம்புகள் மூலமும்
கடிக்கும் ஜந்துக்கள் கசமுடைப் பூதங்கள்
கொடியதாம் பாவக் குவியல்கள் மூலமும்
எவைஎவை அச்சம் ஏற்பட வருமோ
எவைஎம் நலத்துக் கிடையூ றாகுமோ
அவையெலாம் பகவான் அற்புத நாமம்
எழிலுடை ரூபம் ஏற்றநல் அஸ்திரம்
என்பன வற்றை இசைக்கும் கீர்த்தன
நன்மையால் விரைவில் நாசமா கட்டும்! (7)

எல்லாத் திக்கிலும் மூலைகள் எவற்றும்
உள்ளும் புறமும் மேலும் கீழும்
நரசிம்ம மூர்த்திதன் நல்லொளி அதனால்
இருக்கும் ஒளியெலாம் விழுங்குவோராகி
அதிர்ந்திடு கர்ஜனை அதனால் உலக
பயமெலாம் போக்கிப் பாலித் திடுக! (8)

மேன்மைசேர் விஸ்வ ரூபன் உரைத்து
வானவர்க் கரசன் இந்திரன் கேட்ட
நாரா யணாத்மிக கான கவசத்தால்
ஏராள மாகவே வெற்றிகள் எம்மைச்
சேர்வ தாகுக! சேர்வ தாகுக! (9)

மனத்திலே என்றும் மாறிலாத் தியானம்
செய்வதற் குரிய சிறப்புடைக் கடவுள்
தர்மம் கீர்த்தி தளர்விலா ஞானம்
செல்வம்ஐஸ் வர்யம் சிறந்தவை ராக்யமாம்
ஆறு சக்திகள் அமைந்த ஹரியவன்
பேறெல்லாம் தந்தெமைப் பேணுக இனிதே
ஓம் நாராய ணாய நமவென் றுளமுருகிச்
சீராக வாழ்வோம் செழித்து! (10)

# சிவஞானபோதத் தெளிபொருட் பதவுரை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

(முற்றொடர்ச்சி)

## ஒன்பதாம் சூத்திரம்

ஆன்மசுத்தி (சாதிக்கும் முறைமை)

வெண்பா

''ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி;
உராத்துனைத் தேர்த்தெனப் பாசப் ஒருவத்
தண்நிழல்ஆம் பதி;விதி எண்ணும் அஞ்செழுத்தே"

**பதவுரை :**

ஊனக்கண்—குறைந்த அறிவாகிய பசு அறிவினாலும்,

பாசம்—பாச அறிவினாலும்,

உணராப் பதியை—உணரப்படாத முதல்வனை

ஞானக்கண்ணினில்—அவனது திருவடிஞானம் என்னும் அறிவினால்,

சிந்தை—உன் உள்ளத்தினிடத்தே,

நாடி—ஆராய்ந்து அறிவாயாக.

உராத்துனைத் தேர்த்துஎன—பரந்து திரிதற் கண்மிக்க வேகம்உடைய பேய்த்தேர் என்னும் கானல்நீர் போன்று, விரைந்து கழியும் இயல்பிற்று என்று அறிந்து,

பாசம்—நிலம் முதல் நாதம் முடிவாகச் சொல்லப் பெறும் பாசக்கூட்டத்தை,

ஒருவ—நீங்குதலால்,

பதி—பதிஞானமானது,

தண்நிழல்ஆம்—(பிறவித் துன்பமாகிய வெப்பத்துக்குக்) குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும். (அப்பதிஞானக் காட்சி இடையறாது நிகழ்ந்து வருதற் பொருட்டு).

அஞ்செழுத்து—திருவைந்தெழுந்து மந்திரமானது.

விதி எண்ணும்—விதிப்படி அறிந்து கணிக்கப்படும்.

குறிப்பு :

ஊனம்-குறைவு. கண்-அறிவு. ஊனக்கண்-குறைந்த அறிவாகிய பசு(உயிர்) அறிவு.பாசம்-பாசஅறிவு. நாடி-நாடுக; ஆராய்ந்து அறிக; இகர ஈற்று முன்னிலை ஏவல் ''நன்றுமன்இது நாடாய் கூறி (கூறுதி)'' என்னும் அகநானூற்றுப் பாடல் வரியிற்போல.உராத்துனைத்தேர்-ஒருவனால் ஊரப்படாத வேகத்தை உடைய தேர்; பேய்த்தேர்; கானல்நீர். 'ஊரா'என்பது 'உரா' எனக் குறுகிநின்றது. உராவுதல்-உலாவுதல். உலாவுதல்-பரந்து திரிதல். துனை-வேகம் உராத்துனை-பரந்து திரிதற்கண் மிக்க வேகம்; ஏழாம் வேற்றுமைத் தொகை. எண்ணும்-அறிவாற் கணிக்கப்படும்; 'எண்ணுங்கள்' எனஏவல் வினையாகவும் பொருள் கொள்ளலாம்.

பசுஞானம் பாசஞானம் ஆகியவற்றால் இறைவனை அறிதல் இயலாது ஆதலின், 'ஊனக்கண், பாசம், உணராப் பதி' என்றார். பாச ஞானத்தாலும் படர்பசு ஞானத்தாலும் ஈசனை உணர ஒண்ணாது'' என்பது சிவப்பிரகாசம்.

திருவைந்தெழுத்து, மந்திரத்தில், சி சிவத்தினையும், வ அருளையும், ய உயிரையும், ந திரோதானசத்தி என்னும் மறைப்பு ஆற்றலையும், ம ஆணவம் முதலிய மலங்களையும் குறிக்கும் என்பர்.

தம் முதல்வன், குருவுமாகப் போந்து உணர்த்திய திருவைந்தெழுத்தினைச் சிந்தனை செய்துணர்ந்து கணிக்கும் முறையினால், ஐம்புலவேடர்களோடு கலந்து பழகி வளர்ந்த குற்றம் நீங்கி, உயிர் தன்னைத் தூய்மைசெய்து கொள்ளும் நெறியினையுணர்த்துவதனால் இச் சூத்திரம் ஆன்மசுத்தியினை உணர்த்திற்று.

## 9. முதல் அதிகரணம்

''ஈண்டு அம்முதலை ஞானக்கண்ணாலே காண்க என்றது; அவன் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலான்.''

வெண்பா

''நாடியோ? என்போ? நரம்புசீக் கோழையோ?
**தேடி எனை அறியேன்; தேர்ந்தவகை—நாடி, அரன்**
**தன்னாலே தன்னையுங் கண்டு, தமைக்காணார்**
**என்னாம் எனஅறிவார் இன்று''**

பதவுரை:

நாடியோ—இடை பிங்கலை சுழுமுனை என்னும் நாடிகளோ,

என்போ—எலும்புகளோ,

நரம்பு—நரம்புகளோ,

சீ—புண்ணில் வரும் நீரோ,

கோழையோ—ஐ என்னும் சிலேத்துமமோ,

தேடி எனை அறியேன்—இவற்றுள் யான் யார் என்று என்னைத் தேடியும் அறிகின்றிலேன்.;

தேர்ந்தவகை—இவ்வாறு தேடித் தேர்கின்ற தேர்ச்சி அறிவின்கண்ணே,

நாடி—(இதனைத் தெளிவிப்பதோர் அறிவு வேறு உண்டு என்று) ஆராய்ந்து நோக்கி,

அரன் தன்னாலே—(அவ்வாறு நாடுங்கால் விளங்கித் தோன்றுவதாகிய)முதல்வனது திருவடி ஞானத்தால்,

தன்னையுங் கண்டு—முதல்வனையும்உணர்ந்து,

தமைக்காணார்—(முதல்வனின் வியாப்பியமாய் நின்று அங்ஙனம் அறியும் பொருளாகிய) தம்மையும் உணர்தலைச் செய்யாதவர்கள்,

என் என அறிவார்—எவ்வியல்பினர் என்று தம்மை அறிய வல்லுநர் ஆவார்?

இன்று—இம் மூத்திக் காலத்து.

குறிப்பு :

'தன்னையுங் கண்டு' என்புழி, 'தன்' என்பது இறைவனைக் குறித்தது; உம்மை தம்மையும் காணார் என எதிரது தழீஇயிற்று. எவன் என்னும் வினா வினைக்குறிப்புப் பெயர், ஈண்டு ஆகுபெயராய் 'என்' என மருவியது- எவன்-எவ்வியல்பினன். 'நாடியோ என்போ' என்ற உபலக்கணத்தால், ஏனைத் தத்துவ தாத்துவிகங்களிலும் அவ்வாறு தேடி அறிதல் கொள்ளப்படும். ஓகாரங்கள் தெரி நிலை. 'என்று' என்பது சொல்லெச்சம். வகை-தேர்ச்சி அறிவு; ஆகுபெயர். அரனது ஞானத்தை ஒற்றுமைபற்றி, அரன் என்றே உபசரித்தார். தம்மை அறியுமாறு உணர்த்தும் முகத்தானே தலைவனை அறிந்தபின் அறியப்படுவதாகிய தம் அறிவுகொண்டு, தலைவனை அறியுமாறு யாங்ஙனம்? என மறுத்து, இறைவனைப் பசுஞான பாசஞானங்களால் அறிதல் இயலாது; சிவ ஞானத்தால் மட்டுமே அறியமுடியும் என்பது, இதனால் வலியுறுத்தப் பெற்றது.

இச்சிவஞானபோத வெண்பா, பதினொன்றாம் திருமுறையுள், திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில்,

''மேவிய புன்மயிர்த் தொகையோ? அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ? தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ? புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ? கூறுசெய்து
இடையிடை நிற்கும் எலும்போ? எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ? வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ? மெள்ளநின்று
ஊரும் புழுவின் ஒழுங்கோ? நீரிடை
வைத்த மலத்தின் குவையோ? வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ? உடம்பிற்குள்
பிரியாது ஒறுக்கும் பிணியோ? தெரியாது.
இன்னது யான்என்று அறியேன்; என்னை
எங்கும் தேடினேன்; யாதினும் காணேன்''

என்று பட்டினத்தடிகள் அருளிச் செய்ததனை அடியொற்றி அமைந்துள்ளது.

வெண்பா

**காட்டிய கண்ணே தனைக்காணா; கண்ணுக்குக்**
**காட்டாய உள்ளத்தைக் கண்காணா;—காட்டிய**
**உள்ளம் தனைக்காணா; உள்ளத்தின் கண்ணாய**
**கள்வன்தான் உள்ளத்திற் காண்**

பதவுரை:

காட்டிய கண்ணே—உயிரால் காட்டப்பட்டு ஒருவிடயத்தைக் காண்கின்ற கண் தானே,

தனைக்காணா—தன் இயல்பைக் காணமாட்டாது ;

கண்ணுக்குக் காட்டாய உள்ளத்தை—கண்ணாகிய தனக்குக் காண்பித்து முதலாய் நிற்கின்ற உயிரையும்,

கண்காணா—கண்ணானது காணமாட்டாது;

(அது போல)

காட்டிய உள்ளம் தன்னைக்காணா—முதல்வனால் காட்டப்பெற்ற பொருள்களைக் காண்கின்ற உயிர், தன்னியல்

பையும் அறியமாட்டாது; தன்னை உணர்த்தி நிற்கும் முதல்வனையும் அறியமாட்டாது.

உள்ளத்தின்கண் ஆய—அத்தேர்ச்சி அறிவின் கண்ணும் உடனாய் நிற்கின்ற,

கள்வன் தான்—கள்வன், அம்முதல்வனே; (ஆதலால்),

உள்ளத்திற் காண்—அம்முதல்வனை அவ்வறிவின்கண் வைத்து நாடித் தெளிந்து கொள்வாயாக.

குறிப்பு :

இவ்வெண்பா, சொற்பொருட் பின் வரு நிலை அணி, 'கண்ணே'—ஏகாரம், அசைநிலை. 'தனைக்காணாது' எனற்பாலது 'தனைக் காணா' எனத் துவ்வீறு விகாரத்தால்தொக்கு வந்தது. ''முறைகாக்கும் முட்டாச் செயின்'' என்றாற் போல. 'காட்டிய உள்ளம்' என்புழி உள்ளம் என்பது தேர்ச்சி அறிவைக் குறித்தது. 'உள்ளத்தின் கண்ணாய' என்புழி, 'உள்ளத்தின் கண்ணும்' என்ற சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. தோன்றாது மறைந்து நிற்றல் பற்றி இறைவனைக் 'கள்வன்' என்றார். திருஞானசம்பந்தர், 'உள்ளங்கவர் கள்வன்' என்றமை காண்க.

இறைவனைக் கள்வன் என்றது, ''உயிர் கண்ணுக்கு மறைந்து நின்றே காட்டுவது ஆதலால், அக்கண் தன்னையும் உயிரையும் அறியமாட்டாதாயிற்று: அதுபோல முதல்வனும் இதுகாறும் மறைந்து நின்றே உயிர்களுக்கு உணர்த்தி வருதலின், உயிரானது தன்னையும் முதல்வனையும் அறியமாட்டாதாயிற்று" என்பதனைப் புலப்படுத்தும் குறிப்பு மொழி.

இறைவனை உள்ளத்தில் காண வல்லவர்களுக்கு, மறைந்து நின்று உணர்த்தும் இறைவனின் கள்ளத்தன்மை நீங்குதலின், தம்மையும் முதல்வனையும் அவர்கள் காணுதல் கூடும் என்பது கருத்து. ''கள்ளரோடு இல்லம் உடையார் கலந்திடின் வெள்ள வெளியாம் என்று உந்தீபற'' என்பதும் இக்கருத்துப் பற்றி. இச் செய்யுள் எடுத்துக்காட்டு உவமையணி. காண்கின்ற கண் தன்னையும் காணாது, தனக்குக் காட்டிநிற்கும் உயிரையும் காணாது; பொருள்களை நுகர்கின்ற உயிர் தன்னையும் அறியாது, தன்னை நுகர்விக்கின்ற முதல்வனையும் அறியாது என்பது கருத்து.

"கண்டிடும்கண் தனைக்காணா; கரணம் காணா;
கரணங்கள் தமைக்காணா; உயிரும் காணா;
உண்டிஅமர் உயிர்தானும் தன்னைக் காணாது,
உயிர்க்குயிராம் ஒருவனையும் காணா தாகும்.
கண்டசிவன் தனைக்காட்டி, உயிரும் காட்டிக்
கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்;
கொண்டரனை உளத்திற்கொண்டு அடிகூடில், பாசம்
கூடாது; கூடிடினும் குறித்தடியின் நிறுத்தே''

எனவரும் சிவஞானசித்தியார் செய்யுள், இச் சிவஞான போத வெண்பாவை முழுவதும் தழுவி அமைத்ததாகும்.

## 9. இரண்டாம் அதிகரணம்

''இனி அசத்தாய் உள்ள வன்ன பேதங்களை அசத்து என்று காண உளதாய் நிற்பது ஞான சொரூபம் என்று உணரற்பாற்று''

வெண்பா

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்த்
தற்பரமாய் நின்ற தனிமுதல்வன்,—அற்புதம்போல்
ஆனா அறிவாய் அளவிறந்து தோன்றானோ!
வானே முதல்களையின் வந்து

பதவுரை :

நிர்க்குணனாய்—அசுத்தப் பிரபஞ்சம்போல, முக்குணரூபமாய் அளவிட்டு அறியப் படுவானும் அல்லனாய்,

நின்மலனாய்—முக்குணங்களைக் கடந்த மிச்சிரப் பிரபஞ்சம் போல மலகன்ம காரியரூபமாய் அறியப்படுவானும் அல்லனாய்,

நித்திய ஆனந்தனாய் — மலகன்மங்களையும் கடந்த சுத்தப் பிரபஞ்சம்போல அநித்தியானந்த ரூபனாய் அறியப் படுவானும் அல்லனாய்,

தற்பரமாய்—இம்மூன்றனோடும் கூடி உணரப் படும் உயிர்போல் அன்றி அதற்கும் மேலானவனாய்,

தனிமுதல்வன்—இவ்வாறு நிற்றலான் ஒன்றன் இயல்புபற்றி அறியப்படாத தனி முதலாகிய இறைவன்,

வானே முதல் களையின்—ஆகாசம் முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீக்கியவழி,

அளவு இறந்து—சுட்டறிவின் அளவினைக் கடத்தலால்,

அற்புதம்போல் வந்து—இன்னதென்று அறிய வாராத சூனியப் பொருள்போலத் தோன்றி,

ஆனா அறிவாய்—சுட்டிறந்து அறியும் தன் அறிவின்கண் நீங்காது நிலைபெறுவதாய்,

தோன்றானோ—சோதிக்குள் சோதியாய் விளங்கித் தோன்ற மாட்டானோ? தோன்றுவன்.

குறிப்பு :

இறைவன் அசுத்தப் பிரபஞ்சம்போல முக்குண ரூபமாய் அளவிட்டு அறியப்படுவானும் அல்லன்; முக்குணங்களைக் கடந்த மிச்சிரப்

பிரபஞ்சம்போல, மலகன்ம காரியரூபமாய் அறியப்படுவானும் அல்லன்; மல கன்மங்களையும் கடந்த சுத்தப் பிரபஞ்சம் போல அநித்தியானந்த ரூபனாய் அறியப்படுவானும் அல்லன்; இம்மூன்றனோடும் கூடிப் பொதுவியல்பு பற்றி அவ்வாறு உணரப்படும் உயிர்போலன்றி, அதற்கு மேலாய் ஒப்பற்று நிற்றலான், ஆகாசம் முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கினால், இன்னதென்று அறியவாராத சூனியப் பொருள் போலத் தோன்றிப் பின்னர் சுட்டிறந்து அறியும் தன்னறிவின்கண் நீங்காது நிலைபெற்று, சோதிக்குள் சோதியாய் விளங்கித் தோன்றுவன் என்பது கருத்து. தன்-உயிர். தற்பரம்-தனக்குப் பரம்; உயிர்களுக்குத் தலைவன். அற்புதம்-சூனியம். முதற்கண் சூனியமாய்த் தோன்றினும் சூனியம் அன்று என்பார், 'அற்புதம் போல் வந்து' என்றார். ஆனாமை-நீங்காமை. ஓகாரம் எதிர்மறை. 'வானேமுதல்' என்புழி ஏகாரம் அசைநிலை. வான்முதல் எனவே தோற்றமுறை பற்றி வானம் முதலாகிய பூதங்களும், ஒடுக்கமுறைபற்றி வான்முதலாகிய ஏனைத் தத்துவங்களும் அடங்கும்.

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய்த் தற்பரமாய் என்புழி, ஆக்கச்சொல் உண்மை குறித்து நின்றது; இது வடமொழி மதம். 'அறிவாய்' என்புழி, ஆக்கம் வேறுபாடு குறித்து நின்றது. ஒற்றுமைபற்றி முதல்வனது ஞானத்தை 'முதல்வன்' என்று கூறினார்.

வெண்பா

**சுட்டி உணர்வதனைச் சுட்டி அசத்தென்னச்**
**சட்ட இனியுளது சத்தேகாண்—சுட்டி**
**உணர்ந்தநீ சத்தல்லை; உண்மையைத் தைவம்**
**புணர்ந்து, அதனாற் பொய்விட்டுப் போம்**

பதவுரை :

சுட்டி உணர்வதனை—சுட்டி உணரப்படுவது ஆகிய பிரபஞ்சத்தை,

சுட்டி அசத்து என்ன—ஒவ்வொன்றாகச் சுட்டி நோக்கி, அசத்து என்று கழித்துக் கொண்டு செல்ல,

இனி—முடிவின்கண்,

சட்டஉளது—செம்மையே புலனாவது,

சத்தே—அசத்தின் வேறாகிய சத்தேயாகும்.

காண்—இவ்வுண்மையை உணர்க.

சுட்டி உணர்ந்தநீ—இதுகாறும் அசத்தோடு கூடிச் சுட்டி அறிந்து வந்தநீ,

சத்துஅல்லை—அசத்தின் வேறாய்த் தோன்றும் சத்து ஆக மாட்டாய்; (அற்றேல் இச்சுட்டுணர்வு எனக்கு நீங்காது போலும் எனின்),

தைவம் ஆய் உண்மையைப் புணர்ந்து—சத்து ஆகிய தெய்வத்தின் உடைமையாய், அந்தச் சத்துப் பொருளைப்புணர்ந்தால்,

அதனால்—அப்புணர்ச்சியாலே,

பொய்—சுட்டுணர்வாகிய பொதுவியல்பு,

போம்—நின்னை விட்டு நீங்கும்.

குறிப்பு :

'அசத்து என்ன'—அசத்து என்று கழித்து நீக்க. 'சட்ட' என்பது செப்பம் என்னும் பொருள்தரும் அகரஈற்று இடைச்சொல்; அது சட்டம் என இழிவழக்கில் மகர ஈறாய் மருவியது. 'சத்தேகாண்' என்புழி, ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது; அசத்தைப் பிரித்தமையால். உண்மை, சத்து என்பன ஒரு பொருட்கிளவி. 'தைவம் ஆய்' என்று ஆக்கச்சொல் வருவித்துக்கொள்க. புணர்ந்து-புணர்ந்தால். 'உண்மைக்குத் தைவம் ஆதல் புணரின்' என உருபு மயக்கமாகக் கொண்டு உரைப்பினும் அமையும். பற்றற நீங்கிக் கழிந்தொழியும் என்பார், 'விடும்' என்னாது 'விட்டுப்போம்' என்றார்.

வெண்பா

**கண்டதை அன்றுஅன்று எனவிட்டுக் கண்ட சத்தாய்**
**அண்டனை ஆன்மாவில் ஆய்ந்துணரப் —பண்டணைந்த**
**ஊனத்தைத் தான்விடுமாறு உத்தமனின் ஒண்கருட**
**சானத்தில் தீர்விடம்போல் காண்.**

பதவுரை :

கண்டதை—சுட்டி உணரப்பட்ட பிரபஞ்சத்தை,

அன்று அன்று எனக் கண்டு—இது சத்து அன்று, இது சத்து அன்று என்று ஒவ்வொன்றாக ஆராய்ந்து நோக்கி.

அசத்தாய் விட்டு—அசத்து என்று நீக்கி,

ஆன்மாவில்—அவ்வாறு கண்டு கழித்த ஆன்ம அறிவின்கண்,

அண்டனை ஆய்ந்து—சுட்டுணர்வின்றி நின்ற கடவுளை ஆராய்ந்து,

உணர—சோகம் எனப் பாவிக்க,

உத்தமனின்—(அப்பாவகத்தால் அத்துவிதமாய் விளங்கித் தோன்றும்) முதல்வனால்,

பண்டுஅணைந்த—முற்காலந்தொட்டுக் கூடி நின்ற,

ஊனத்தை—சுட்டுணர்வு ஆகிய குறைபாட்டினை,

தான்விடும்ஆறு—ஆன்மா விட்டு நீங்கும் தன்மை,

ஊண்கருட சானத்தில்—ஒளிபொருந்திய கருட தியானத்தினால்,

தீர்விடம்போல் தான்—பாவகன் விடத்தைத் தீர்த்துக் கொள்ளும் தன்மை போலும்.

குறிப்பு :

அசத்துப் பொருள்களை அசத்தென்று உணர்ந்து நீக்கி, ஆன்ம அறிவில் இறைவனை ஆராய்ந்து சோகம்பாவனை செய்தால், கருட தியானத்தினால் பாம்பின் விடம் தீர்தல்போல, ஆன்மாவை அநாதியே கூடிநின்ற சுட்டுணர்வு ஆகிய குறைபாடு விட்டு நீங்கும் என்பது கருத்து.

''கண்டதை அன்று அன்று எனக்கண்டு, அசத்து ஆய்விட்டு'' எனக் கூட்டுக. அண்டன்-இறைவன். ஆன்மாவில்-ஆன்மஅறிவில். ஊனம்-பொதுஇயல்பு; குறைபாடு; மலங்களால் பற்றப் பெற்றிருக்கும் தன்மை. விடுமாறு-விட்டு நீங்கும் தன்மை. உத்தமனின்-முதல்வனால். சானம்-தியானம், பாகதச் சிதைவு. 'தீர்விடம்போல்' என்பதனை 'விடம் தீர்வது போல்' என மாற்றிக் கொள்க. 'தான்' இரண்டனுள் முன்னையது எழுவாய், பின்னையது அசை.

கருடன் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் என மூவகைப்படும். அவற்றுள் உலகத்தில் காணப்படும் கருடன் ஆதி பௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாகிய மந்திரம், ஆதிதைவிக கருடன். அம்மந்திரத்தின் இடமாக, நின்று, மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசக்தி, ஆத்தியான் மிக கருடன் என்று கூறப்படும். இம்மூன்றனுள் ஈண்டுக் கருடன் என்றது, கருடனுக்கு அதி தெய்வமாகிய மாந்திரிகன் உள்ளத்தில் அது போல் வைத்துத் தியானம் செய்து கணிக்கப் படும் மந்திர ரூபமாகிய ஆதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது, நாள்தோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தால், அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து, தன்னறிவு அதன் வயத்ததாகும்படி உறைத்து நிற்றல். அவ்வாறு நின்று அம்மந்திரக்கண் கொண்டு மாந்திரிகன் பார்ப்ப, பாம்பினாற்கடியுண்டானுக்கு அவ்விடத்தின் வேகத்தை மாற்றுதல் ஒருதலை. ஆகலின், ''ஓண் கருடசானத்தின் தீர்விடம்போல்'' என்றார்.

''கண்டஇவை அல்லேன்நான் என்றகன்று, காணாக்
கழிபரமும் நான்அல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்தான் நின்றகலப் பாலே,
சோகம்எனப் பாவிக்கத் தோன்றுவன்வேறு இன்றி;
விண்டகலும் மலங்கள்எலாம்; கருடதியானத்தால்
விடம்ஒழியும் அதுபோல, விமலதையும் அடையும்;
பண்டைமறைகளும் அதுநான் ஆனேன் என்று,
பாவிக்கச் சொல்லுவது, இப் பாவகத்தைக் காணே''

என்னும் சிவஞான சித்தியார் செய்யுள், இச் சிவஞானபோத வெண்பாவையே முற்றிலும் அடியொற்றி அமைந்துள்ளது.

## 9. மூன்றாம் அதிகரணம்

"இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கிரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது; இவ்வான்மாக் களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றைநோக்கி நிற்குமாதலின், அது நீக்குதற்கு எனக்கொள்க''

வெண்பா

அஞ்செழுத்தால் உள்ளம் அரன்உடைமை கண்டு, அரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்து, இதயத்தில் —அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்து ஓமம்; கோதண்டம் சானிக்கில்,
அண்டன்ஆம் சேடன்ஆம் அங்கு

பதவுரை :

உள்ளம்—உயிரானது

அரன்உடைமை—சிவனுக்கு உடைமையாதலை,

அஞ்செழுத்தால் கண்டு—திருவைந்தெழுத்தை உச்சரிக்கும் முறையில் வைத்து ஆராய்ந்து

இதயத்தில்—இருதயகமலத்தில்,

அரனை—(அஞ்செழுத்தால் அமைந்த திருமேனியை உடைய) முதல்வனை,

அஞ்செழுத்தால்—திருவைந்தெழுத்தால்,

அர்ச்சித்து—கொல்லாமை அருள் ஐம்பொறியடக்கல் பொறை தவம் வாய்மை அன்பு அறிவு என்னும் எண்மலர்கள் கொண்டு அருச்சனை புரிந்து,

அஞ்செழுத்தால்—திருவைந்தெழுத்தால்,

குண்டலியின்—குண்டலித் தானமான உந்தியில்,

ஓமம் செய்து—ஞான அனலை எழுப்பி அதன் கண் விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழுமுனைநாடி இடைநாடி ஆகிய சுருக்குச் சுறுவங்களால் ஓமம் செய்து,

கோதண்டம்—புருவநடுவின்கண்,

சானிக்கில்—சிவோகம்பாவனை செய்தால், அங்கு—அப்பாவனையின்கண்,

அண்டன் ஆம்—முதல்வன் விளங்கித் தோன்று வான்.

சேடன் ஆம்—அம்முதல்வனுக்குச் சிவோகம்பா வனை செய்பவன் அடிமையாவான்.

குறிப்பு:

ஓமம் செய்தலும், தியானம் செய்தலும், பூசைக்கு அங்கம் ஆகும். இதயம் பூசைத்தான மும், உந்தி ஓமத்தானமும், புருவநடு தியானத் தானமும் ஆகும். கோதண்டம்-புருவநடு. சானிக்கில்-தியானித்தால். அண்டன்-கடவுள். சேடன்-அடிமை.

ஞானசொரூபம் விளங்கியவழியில், பயிற்சி வயத்தான் ஏகதேசப்பட்டுப் புறத்திற்செல்ல நோக்குவதாகிய தன்அறிவை, அங்ஙனம் ஆகாத வாறு மடக்கி, அகத்தே ஒருகுறியின்கண் நிறுத்தி நிட்டை கூடும்படி, அஞ்செழுத்தை ஓதும்முறை யில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்க, அச் சிந்தனை அந்நோக்கத்தைப் பற்றறக் கெடுத்து, ஞான சொரூபத்தை இனிது விளக்கிப் பூரண நிலையிற் கொண்டு செலுத்தும் என்பது, இப் பாடலின் கருத்து.

வெண்பா

இந்துவிற் பானுவில் இராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணில் சிவன்கண்ணாம்—உந்தவே
காட்டாக்கின் தோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
ஆள்தானாம் ஓதஞ் செழுத்து

பதவுரை:

இராகுவை—(வானத்தில் இயங்கும் ஒன்பது கோள்களில் ஏனையன போலக் காணப்படாத) இராகு கேதுக்களை,

இந்துவில் பானுவில் கண்டாங்கு—(கிரகண கால காலத்தில்) சந்திர சூரியர்கள் பால் காண்பது போல,

சிந்தையில் காணில்—(பசுபாசங்களோடு ஒப்ப, வேறு காணப்படாத) முதல்வனை, இருதய கமலத்தில், அஞ்செழுத் தின் முறையிற் கண்டால்,

உந்தவே—கயிற்றினால் சுற்றிக் கடைதலாலே,

காட்டாக்கின்—காட்டத்தினின்று அக்கினி தோன்றுமாறு போல,

சிவன் தோன்றி—முதல்வன் வெளிப்பட்டு,

கண் ஆம்—அறிவுக்கு அறிவாய் விளங்கிநிற்பான்.

கனல்சேர் இரும்பு என்ன—நெருப்பைச்சேர்ந்த இரும்பு நெருப்புமயமாய் ஆதல் போல,

தான் ஆள் ஆம்—உயிரானது முதல்வனுக்கு அடிமை ஆகும்.

அஞ்செழுத்து ஓது—ஆதலால் திருவைந் தெழுத்தை முறைப்படி ஓதுக.

குறிப்பு:

முதல்வனை ஒரு குறியின்கண் வைத்தன் றிக் காண்டல் இயலாதவாறும், அவ்வாறு கண்டவழி முதல்வன் ஆன்மாவின் மாட்டும் விளங்கித் தோன்றுமாறும், தோன்றியவழி ஆன்மா அம்முதல்வனுக்கு அடிமையாகுமாறும், இதனால் உவமையில் வைத்து நன்கு இனிது வலியுறுத்தப் பெற்றன.

கேது, சாயாக் கிரகமாதலின் வேறு கூறா ராயினர். எனினும், இராகு கேது என்பது பொருளாகக் கொள்க. கண்-அறிவு. கண் ஆம்-அறிவுக்கு அறிவாய் முதல்வன் நிற்பன். இந்து-சந்திரன். பாநு—சூரியன். தோன்றி ஆம்—வெளிப்பட்டு விளங்கி நிற்பான். உந்துதல்—கடைதல், காட்டாக்கி "காஷ்ட அக்கினி" என் னும் வடசொற் றொடர், காட்டாக்கி என்று சிதைந்து வந்தது. காஷ்டம்-காட்டம், விறகு. அக்கி-அக்கினி, நெருப்பு. காட்டாக்கின்-காட் டாக்கினியின்; விறகிலிருந்து நெருப்புத்தோன் றுமாறு போல.காட்டாக்கியின் என்பது காட் டாக்கின் என்று வந்தது. இன் உவமை உரு பாய்ப்போல என்னும் பொருள் குறித்தது.

"அஞ்செழுத்தால் ஆன்மாவை அரன்உடைய யரிசும்,
அரன்உருவம் அஞ்செழுத்தால் அமைந்தமை யும் அறிந்திட்டு,
அஞ்செழுத்தால் அங்ககர நியாசம்பண்ணி,
ஆன்மாவில் அஞ்செழுத்தால் இதயத்து அர்ச் சித்து,
அஞ்செழுத்தாற் குண்டலியின் அனலைஓம்பி,
அணைவரிய கோதண்டம் அணைந்தருளின் வழி நின்று,
அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க; மதி அருக்கன்
அணையரவம் போல்தோன்றும் ஆன்மாவில் அரனே'

எனவரும் சிவஞான சித்தியார் செய்யுள், இங்கு அறிந்து இன்புறுதற்குரியது.

வெண்பா

மண்முதல் நாளம், மலர் வித்தை, கலரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும்;—தண்ணில்
கலைஉருவாம் நாதமாம் சக்திஅதன் கண்ணாம்
நிலையதிலாம் அச்சிவன்தாள் நேர்

பதவுரை:

நண்ணில்—இருதயக்கமலத்தின் இயல்பை அறிய முனைந்தால்,

மண்முதல் நாளம்—நிலம் முதலிய 24 தத்துவ மும், உந்தியினின்று தோன்றி, எண் விரல் அளவுள்ள நாளத்தின் வடி வாகும்.

வித்தைமலர்—வித்தியாதத்துவங்கள் ஏழும், சுத்தவித்தையும் ஆகிய எட்டுதத்துவ மும், எட்டு இதழ்களின் வடிவாகும்;

எண்ணிய ஈசர் சதாசிவமும்—அத்தத்துவங்க ளுக்கு மேலாகக் கருதப்பட்ட ஈசுரம் சதாசிவம் என்னும் இரண்டு தத்து வங்களும்,

கலாரூபம்—அறுபத்துநான்கு எனப்படும்கேசர வடிவாகும்.

சக்தி கலைஉருவாம்—சத்தி தத்துவம் அக்கேச ரங்களுக்கு உள்ளாகிய பொகுட்டு வடிவாகும்.

நாதம்—சிவதத்துவம்,

அதன் கண் ஆம்—அப் பொகுட்டில் காணப் படும் தீபவடிவம் ஆகும்;

அதில்—அத்தகைய இருதய கமலத்தில்,

அச்சிவன்தாள்—முப்பத்தாறு தத்துவமும் ஆசனமாக உடைய சிவபிரானின் சக்தி,

நிலை ஆம்—நிலைபெற்று நிற்கும்;

நேர்—அதனை அறிந்து ஐந்தெழுத்தால் வழி படுக.

**குறிப்பு:**

தத்துவம் முப்பத்தாறுக்கும் மேற்பட்ட முதல்வனை இருதய கமலத்தில் கண்டு அருச் சித்து வழிபடும்முறை, இதனால் கூறப்பெற் றது. வித்தை—வித்தியா தத்துவங்கள் ஏழும் சுத்தவித்தையுமாகிய எட்டினையும் குறித்து நின்றது. ஈசர் சதாசிவமும்—ஈசுவரம் சதா சிவம் என்னும் இரண்டு தத்துவங்களும். கலை உரு—கலைக்குள் உரு. அதில்—அதனில். இரு தய கமலம், நாளம் முதலாக மேல் நோக்கித் தோன்றும் உலகத்திலுள்ள தாமரை மலர் போலல்லாமல், கண் முதலாகக் கீழ் நோக்கித் தோன்றியதோர் தெய்வீகத் தாமரையாகும். 'சிவன்தாள் அதில் நிலையாம்' எனவே, சிவன் சத்திக்கு மேலாய் நிற்பன் என்பதுபெறப்படும்.

''நாட்டும் இதயம்தானும் நாபியினில்அடியாய்,

ஞாலமுதல் தத்துவத்தால் எண்விரல் நாளத் தாய்,

மூட்டும் மோகினிசுத்தவித்தை மலர் எட்டாய்,

முழு இதழ்எட்டு அக்கரங்கள் முறைமையினில் உடைத்தாய்க்,

காட்டு கமலாசனமேல் ஈசர்சதா சிவமும்

கலாமூர்த்த மாம்; இவற்றின் கண்ணாகும் சக்தி;

வீட்டைஅருள் சிவன்மூர்த்திமான் ஆகிச் சக்தி

மேலாகி நிற்பான், இந்த விளைவு அறிந்து போற்றே''

—(சித்தியார், 9.8)



# பத்தாம் சூத்திரம்

(பாசநீக்கம் பண்ணுமாறு உணர்த்துதல் நுதலிற்று.)

"அவனே தானே ஆகிய அந்நெறி,
ஏகன் ஆகி இறைபணி நிற்க,
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

மேலே சாதன இயலில் ஏழாம் சூத்திரத் தால் சாதிக்கும் பொருள் ஆகிய சாதகனின் இயல்பும், எட்டாம் சூத்திரத்தால் சாதித்துப் பெறப்படும் பொருள் ஆகிய ஞானத்தை உண ரும் முறைமையின் இயல்பும், ஒன்பதாம் சூத்தி ரத்தால் சாதிக்குமாறு ஆகிய ஆன்ம சுத்தியின் இயல்பும் உணர்த்தினார். இனி, அச்சாதனத் தால் ஆகிய பயன் இயல்பு வகுத்துக் கூறுவான் எடுத்துக் கொண்டார்.

அப்பயனாவது பாசநீக்கம், சிவப்பேறு என இருவகைப்படும். அவ்விரண்டனுள், பாச நீக்கம் என்பது, இப்பத்தாம் சூத்திரத்தால் விளக்கப் பெறுகின்றது.

**பதவுரை:**

அவன்— (ஞானக்கண்ணில் சிந்தை நாடப் பெற்ற) அவ்விறைவன், (பொருட் டன்மையால் வேறேயாயினும், வேறு காணப்படாமல் யானே கண்டேன் என்னும்படி),

தானே ஆகிய—உயிரே ஆகிநின்ற,

அந்நெறி—அந்தப் பெத்தநிலை போல,

ஏகன் ஆகி—(உயிரானது தான் என வேறு காணப்படாமல், அவ் இறைவனேயா கும்படி), ஒற்றுமைப்பட்டு அடங்கி,

இறைபணி நிற்க—இறைவனுக்குரிய தொண்டு களைச் செய்து, அவற்றில் வழுவாது ஒழுகின்,

மலம் மாயை தன்னொடு—(பாசங்கள் நீங்கிய நிலையிலும் வாசனையால் வந்து தாக்குகின்ற ) ஆணவம் மாயை ஆகியவற்றுடன்,

வல்வினை—வலிய கன்ம மலமும்,

இன்று—இல்லையாகிப் பற்றறக் கழியும்

**குறிப்பு:**

ஆன்மாவானது ஆணவமலம் நீங்கி, ஆன்ம சுத்தி எய்தியவழியும், ஆன்மாவை வாசனாமல மாக, ஆணவம் மாயை கன்மங்கள் இடை யிடையே வந்து தாக்கும்; ஆன்மா இறைபணி யின் வழுவாது ஒழுகுவதன் மூலமே, அவற்றை அறவே களைந்தொழிக்க இயலும்: ஆதலின் இறைபணியில் வழுவாது நிற்க என்பது, இச் சூத்திரத்தின் கருத்து.

அவன்-இறைவன். தான்-உயிர். நெறி-போல; உவமவுருபு; இடைச்சொல். அந்நெறி-அதுபோல. ஏகன் ஆகி-ஒற்றுமைப்பட்டு. நிற்றல்-ஒழுகுதல். இறைபணிநிற்றல்-இறைவனுக்குத் தொண்டு செய்து, அதனில் வழுவாது ஒழுகுதல்.

ஈண்டு ''ஏகன் ஆகி இறைபணி நிற்றல்'' என்று குறிக்கப்பட்டதனை, ''அவன் இவனாய் நின்றமுறை ஏகன் ஆகி, அரன் பணியில் நின்றிடுதல்'' என்றும்; ''ஒக்க உறைந்து இவர் அவனை, அவன் இவரை விடாதே, உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்'' என்றும் சிவஞானசித்தியாரில் அருள் நந்தி சிவாசாரியர் விளக்கியருள்வர். இதனையே,

''ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி, மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ?''

என்று தாயுமானவர் விளக்கியிருத்தல் காணலாம். பாசங்கள் நீங்கிய நிலையிலும், உயிரை வாசனாமலம் வந்து தாக்கும் என்பதனை,

''போதம் மேலாகப் பண்டே
புல்லிய மலநோய் தீர்ந்தும்
வாதனை தாக்கு மாபோல்,
மழைப்பெயல் மாறித் தீர்ந்தும்,
காதல்செய் துறையும் புள்ளும்
மாக்களும் கவன்று நெஞ்சம்
நோதக மரங்கள் எல்லாம்
நுண்துளி துவற்றும் மாதோ''

எனச் சிவஞான சுவாமிகள் காஞ்சிப் புராணச் செய்யுளிற் குறிப்பிடுதல், இங்கு அறிதற்கு உரியது.

வாசனாமலமாவது, பெருங்காயச் சிமிழில் பெருங்காயம் இல்லையாகிய வழியும், முன்பு இருந்த பெருங்காயத்தின் வாசனை கமழ்ந்து கொண்டிருத்தல் போல, ஆணவமலம் நீங்கிய வழியும், ஒரொருகால் ஆன்மசுத்தி எய்தப் பெற்றவர்களையும், அஃது இடையிடையே வந்து தாக்குதல் ஆகும். ''முன்செய் வினை இங்குத் தங்கிப் போம் பாத்திரமும், குலாலன் வினைதவிர்ந்த சக்கரமும், கந்தித்துச் சுழலுமா போல், மங்கிப்போய் வார்தனையால் மெலிவிக்கும்'' என்பது சிவஞான சித்தியார் (309).

## 10. முதல் அதிகரணம்

''அவ்வாறு நிற்கவே யான் எனது என்னும் செருக்கு அற்று அவனது சீபாதத்தை அணையும் ஆதலான், ஈண்டுப் பரமேசுவரன் இவ்வான்மாவாய் நின்ற முறைமையாய், அவனிடத்து ஏகன் ஆகி நிற்க என்றது''

(வெண்பா)

நான்அவன்என்று எண்ணினர்க்கும் நாடும்உளம் உண்டாதல்,
தான்எனஒன்று இன்றியே தான்அதுவாய், —நான்எனஒன்று
இல்என்று தானே எனும்அவரைத் தன்அடிவைத்து,
இல்என்று தானாம் இறை

பதவுரை :

நான் அவன் என்று—நான் என்றும் அவன் என்றும்,

எண்ணினர்க்கும்—பகுத்து உணர்ந்து நிற்பார்க்கும்,

நாடும் உளம் உண்டாதல்—(யானே என நிற்பார்க்குப் போல) அவ்வாறு எண்ணுகின்ற உயிருணர்வு முனைத்துத் தோன்றும் ஆதலால்,

தான்என ஒன்று இன்றியே — அவ்விடத்துத் தான் என்று ஒரு முதல் காணப்படுமாறு இல்லாமல்,

தான்அது ஆய்—இறைவன் அவ்வுயிருணர்வேயாய் நிற்பன்;

நான் என ஒன்று—இனி யான் என்று ஒருமுதல்,

இல்என்று—(காணப்படுமாறு) இல்லை என்று உணர்ந்து,

தானே எனும் அவரை—முழுவதும் இறைவனே எனக் காணும் தெளிவு உடையாரை, (அவ்வாறே வேறு காணப்படுமாறு இல்லை என்னுமாறு),

தன் அடி—தனது திருவடியையே,

இல் என்று வைத்து—இல்லம் என்று சொல்லும் படி, உறைவிடமாகக் கொண்டு நிற்கச் செய்து,

தான் ஆம்இறை—அவனே! தான்ஆக நிற்பன் இறைவன்.

குறிப்பு :

உயிராய்க் காணுங்கால் சிவம் இல்லை; சிவமாய்க் காணுங்கால் உயிர் இல்லை; இரண்டுமாய்க் காணப்புக்கால், தற்போதம் முற்பட்டு நிற்றலின், அவ்வழிச் சிவம் ஐயக் காட்சிக்குப் புலனாய் நிற்பதல்லது, தெளிவுக் காட்சிக்குப் புலனாய் நிற்குமாறு இல்லை; ஆதலின் நான் என, என் செயல்என ஒன்றும் இல்லை; எல்லாம் சிவமே என்னும் தெளிவு அடையப் பெற்றவர்களைச் சிவம் தன் திருவடியில் உறையுமாறு செய்து, அவர்தம் செயலெல்லாம் தன் செயல் என்றும், அவர்க்குச் செய்வனவெல்லாம் தனக்குச் செய்வனவே என்றும், ஏற்றுக் கொண்டு நிற்பன் இறைவன் என்பது. இப் பாடலின் கருத்து.

## 10. இரண்டாம் அதிகரணம்

''அவன் அருளால் அல்லது ஒன்றையும் செய்யான் ஆகவே, அஞ்ஞான கன்மம் பிரவேசியா ஆகலான், இனி இறைபணி வழுவாது நிற்க என்றது''.

( வெண்பா )

**நாம்அல்ல இந்திரியம்; நம்வழியின் அல்ல, வழி**
**நாம்அல்ல; நாமும் அரனுடைமை:—ஆம்என்னில்,**
**எத்தனுவில் நின்றும் இறைபணியார்க்கு**
**இல்லைவினை;**
**முற்செய்வினை யும்தருவான் முன்''**

பதவுரை:

இந்திரியம்-வினைகளை நுகர்வதற்கும் ஈட்டுவதற்கும் கருவியாகிய இந்திரியங்கள்,

நாம் அல்ல—மாயேயம் ஆவன அன்றி, யாம் ஆவன அல்ல;

நம் வழியின் அல்ல—(இந்திரியங்கள் தொழிற்படுதலும் முதல்வனின் வயத்தானன்றி) நம் வயத்தான் அல்ல;

வழி—வினை நிகழ்ச்சிக்கு வாயில் ஆகிய விடயம் முதலியனவும்,

நாம் அல்ல—(மாயேயம் ஆவன அன்றி) நாம் அல்ல;

நாமும்—(இந்திரியங்கள் விடயங்கள் ஆகியவற்றுடன் இயைந்து நின்று வினைகளை ஈட்டி நுகர்கின்ற) ஆன்மாக்களாகிய நாமும்,

அரன் உடைமை—முதல்வனின் வயத்தராய் ஒழுகும் கருவிகளே யாவோம்;

ஆம் என்னில்—இதுவே உண்மை என்று உணர்ந்தால்,

இறை பணியார்க்கு—இறைவனின் பணிகளைச் செய்கின்ற அடியவர்களுக்கு,

எத்தனுவில் நின்றும்—எவ்வுடம்பில் இருந்து எந்தச் செயல்களைச் செய்தாலும்,

வினையில்லை—அவற்றால் உண்டாகும்பந்தம் இல்லை.

முன்செய் வினையும்—முன்னே செய்த பிராரத்த வினையும்,

தருவான்முன்—தன்னைக் கூட்டுவிக்கின்ற இறைவனின் முன்னிலையில் (உடல் ஊழாய்க் கழியும்).

குறிப்பு:

வினைகளை நுகர்வதற்கும் ஈட்டுவதற்கும் கருவியாகிய இந்திரியங்கள் மாயேயம் ஆகும்; அவைகள் முதல்வனின் வயத்தினாலேயே தொழிற்படும்; வினை நிகழ்ச்சிக்கு வாயிலாகிய விடயம் முதலியனவும் மாயே வினைகளை ஈட்டி நுகரும் உயிர்களாகிய நாமும், முதல்வனின் வயத்தராய் ஒழுகும் கருவிகளேயாவோம். இறைவனின் பணிகளைச் செய்கின்ற அடியவர்களுக்கு, எவ்வுடம்பில் இருந்து எந்தச் செயல்களைச் செய்தாலும், அவற்றால் உண்டாகும் பந்தம் இல்லை. முற்பிறவிகளில் செய்த பிராரத்த வினையையும் இறைவனே அடியவர்களுக்கு உடல் ஊழாய்க் கழியும்படிசெய்தருள்வன். சஞ்சிதவினை தீக்கையாலும், ஆகாமிய வினை ஞானத்தாலும், பிராரத்த வினை அனுபவத்தாலும் கழியும். வழி-விடயங்கள் முதலியன. ஆம் என்னில்-இதுவே உண்மை என்று உணர்ந்தால். இறைபணியார்க்கு-இறைவனின் பணிகளைச் செய்பவர்களுக்கு. 'வினை' என்பது ஈண்டுப் 'பந்தம்' (கட்டு) என்னும் பொருளில் வந்தது. வழி - விடயங்கள் முதலியன. சஞ்சிதம் பிராரத்தம் என்னும் இரண்டுமே 'முன்செய்வினை' ஆயினும், ஈண்டு ஏற்புழிக் கோடலால் பிராரத்த வினையைக் குறித்தது; சஞ்சித வினை தீக்கையால் அழிந்து போதலின். தருவான்-கூட்டுவிப்பான், இறைவன். முன்-முன்னிலை; சந்நிதி. 'கழியும்' என்பது சொல்லெச்சம்; 'உடலூழாய்' என்பது அவாய் நிலை.

வெண்பா

**சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடன்ஆதல்,**
**சார்ந்தாரைக் காத்தும் சலம்இலனாய்ச்**
**—சார்ந்தடியார்**
**தாம்தானாச் செய்துபிறர் தங்கள்வினை**
**தான்கொடுத்தல்**
**ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு**

பதவுரை:

சார்ந்தாரை—தம்மிடம் அடைக்கலம் புகுந்தவர்களை,

காத்தல்—(ஏதம் நீக்கிக் களைகணாய் நின்று) காப்பாற்றுதல்,

தலைவர் கடன்—தலைமைக்குணம் உடையவர்களுக்குக் கடமை;

ஆதல்—ஆதலால்,

சார்ந்தாரைக் காத்தும்—தன்னை அடைந்தவர்களைப் பாதுகாத்தும்,

சலம் இலனாய்—அதுபற்றிக் கோட்டம் உடையவன் அல்லனாய்,

சார்ந்த அடியார்—தன்னைச் சார்ந்து தன் அடித்தொழில் செய்பவர்களை,

தான்ஆய்ச் செய்து—தன்னைப் போல் ஆகாமிய வினைத்தொடக்கு இலராகச் செய்து,

பிறர்தங்கள் வினை—தன்னைச் சாராத பிறர்க்கு வரும் ஆகாமிய வினையை,

தான் கொடுத்தல்—முதல்வன் அவர்களுக்குக் கொடுப்பான் ஆதலால்,

ஆய்ந்து ஆர்—(அவ்விருதிறத்தோர் மாட்டும்) நுணுகி வந்துகூடுவதாகிய,

முன் செய்வினையும்—பிராரத்தவினையையும்,

ஆங்கு — அதுபோலவே இருவகைப்படச் செய்வன்.

குறிப்பு :

தம்மிடம் அடைக்கலம் புகுந்தவர்களின் ஏதங்களை நீக்கிக் களைகணாய் நின்று, அவர்களைக் காப்பாற்றுதல் தலைமைக் குணமுடையவர்களுக்குக் கடமை; ஆதலால் இறைவன் தன்னை அடைந்தவர்களைத் தன்னைப்போல் ஆகாமிய வினைத்தொடக்கு இலராகச் செய்து பாதுகாப்பான். தன்னைச் சாராத மற்றவர்களுக்கு வரும் ஆகாமிய வினையை அவர்கள் அனுபவிக்கும்படி கூட்டுவிப்பான்.

இங்ஙனம் தன்னைச் சார்ந்தோர் சாராதோர் ஆகிய இவ்விருதிறத்தோர் மாட்டும் நுணுகி வந்து கூடுவதாகிய பிராரத்த வினையையும், அவ்வாறே இருவேறுவகைப்படுமாறு இறைவன் செய்தருள்வான். தன்னைச் சார்ந்தவர்களுக்குப் பிராரத்த வினை எறும்பு கடிப்பது போல உடலூழாய்க் கழியுமாறும், தன்னைச் சாராதவர்களுக்குக் கருந்தேள் கடிப்பதுபோல உயிரூழாய்க் கழியுமாறும், இறைவன் செய்தருள்வான்.

பிராரத்த வினை அதிசூக்குமமாய் வருவது ஆகலின், அதன் இயல்பு அறிதல் அரிது என்பார் 'ஆய்ந்து ஆர் முன் செய்வினையும்' என்றார். 'தான்ஆய்ச் செய்தல்' என்புழி, 'தான்' என்பது சிவம் என்னும் பொருள் குறித்தது; தன்னைப்போலச் செய்தல். ஆதல்-ஆதலால். கொடுத்தல்-கொடுத்தலால். ஆய்தல்-நுணுகுதல். ஆர்தல்—அடைதல். ஆர் வினை-அடைகின்ற வினை. சலம்-வஞ்சனை, கோட்டம்.

வெண்பா

இங்குளி வாங்கும் கலம்போல, ஞானிபால்
முன்செய் வினைமாயை மூண்டிடினும்,
—பின்செய்வினை
மாயையுடல் நில்லாது; மற்றவன்தான்
மெய்ப்பொருளே
ஆயஅத னாலால்உணரும் அச்சு

பதவுரை :

இங்கு உளி—பெருங்காயத்தில் இருந்து,

வாங்கும்—அதன் வாசனையை வாங்கிக் கொள்ளுகின்ற,

கலம்போல—சிமிழின்கண் அவ்வாசனை மங்கிப் போய் மெலிதாகக் கமழ்வதுபோல,

ஞானிபால்—இறைபணி நிற்கும் தத்துவஞானிகளிடத்து,

முன்செய் வினை—பிராரத்த கன்மம்,

மூண்டிடினும்—பயிற்சி வசத்தால் வாசனையாக மூளுமாயினும்,

பின்செய்வினை — ஆகாமிய வினையானது,

மாயை உடல்—மாயேயம் ஆகிய உடலோடு,

நில்லாது—நிலைபெறாமல் கெட்டு ஒழியும்;

அவன்தான்—அந்தத் தத்துவஞானியானவன்,

மெய்ப்பொருளே ஆய அதனால்—சிவமே ஆகியவாற்றால்,

மற்று அச்சுஉணரும்—வாசனாமலத்தால் பிறழ நேரினும், அந்தச் சிவத்தையே நோக்கிநிற்பன்.

குறிப்பு :

பெருங்காயச் சிமிழின்கண், பெருங்காயம் இல்லையாய்த் தீர்ந்து போயினும், அதன் வாசனை மெலிதாகக் கமழ்வதுபோல, இறைபணி நிற்கும் தத்துவஞானிகளிடத்தில்மலங்கள் நீங்கியவழியும், பிராரத்த கன்மமானது, பயிற்சி வசத்தால் வசனாமலமாக ஒரோவழி வந்து மூளும்; ஆகாமிய வினையானது மாயேயம் ஆகிய உடலோடு, நிலைபெறாமல் கெட்டு ஒழியும்,; அந்தத் தத்துவஞானி சிவமேயாகி விடுவன்; அதனால் வாசனாமலத்தால் பிறழ நேர்ந்தாலும், அவன் அச்சிவத்தையேநோக்கி நிற்பன். ஒளி இருளைத் துரக்குமாறுபோல, சிவனையே நோக்கும் உணர்வு ஆகாமிய வினையைத் துரக்கும் என்பதாம். இங்கு—பெருங்காயம். உளி-இருந்து, ஐந்தன்உருபு. வாங்குதல்—வாசனையைக் கவர்தல். மூண்டிடினும் எனவே, மூளுதல் ஒருதலை அன்று என்க. மாயை-மாயேயம், உடல்; ஆகுபெயர். ஞானிகளை வாசனாமலத்தால் பிறழ விடாமைபற்றி மெய்ப்பொருளை 'அச்சு' என்று உருவகம் செய்தார்.

வெண்பா

நண்அனல் வேவாத நற்றவர் தம்மினும்,
பண்அமர மாச்செலுத்தும் பாகரினும்—எண்ணி
அரன்அடி ஓர்பவர் ஐம்புலனிற் சென்றும்,
அவர்திறல் நீங்கார் அதற்கு

பதவுரை :

நள்அனல்—நெருப்பின் நடுவே,
வேவாத—வெந்து போகாமல் இருக்கின்ற,

நற்றவர் தம்மினும்—நல்ல தவமுடைய ஞானிகளைப் போலவும்,

பண்அமர—பண்ணுதல் அமரும்படி,

மாச்செலுத்தும்—குதிரையைச் செலுத்துகின்ற,

பாகரினும்—பாகர்களைப் போலவும் ;

எண்ணி—(ஐம்புலன்களில் அகப்படாத உபாயம்) யாது என்று எண்ணி,

அரன்அடி ஓர்பவர்—முதல்வனின் திருவடியாகிய அச்சை உணர வல்லவர்கள்,

ஐம்புலனில் சென்றும்—ஐவகைப்பட்ட விடயங்களில் சென்றார் ஆயினும்,

அதற்கு—அதனால்,

அவர்திறன் நீங்கார்—அவர்களுடைய திறனில் இருந்து தீர்ந்து பந்தம் அடையமாட்டார்கள்.

குறிப்பு :

நெருப்பின் நடுவில் வெந்து போகாமல் இருக்கின்ற நல்ல தவமுடைய ஞானிகளைப் போலவும்; பண்ணப்படும் பல்வேறு கதிகளில் (Gallops) குதிரையைச் செலுத்துகின்ற பாகர்களைப் போலவும்; ஐம்புலன்களில் அகப்படாத உபாயம் யாது என்று எண்ணி, முதல்வனின் திருவடியாகிய அச்சை உணர்ந்து தியானிக்க வல்லவர்கள், ஐம்புல விடயங்களில் சென்றார்கள் ஆயினும், அதனால் அவர்கள் பந்தம் அடையமாட்டார்கள். நள்அனல் என்பது நண் அனல் என வந்தது. 'நீணுலகெலாம்' என்றாற் போல. பண்ணுதல்-கதிகளில் செலுத்துதல். 'இன்' இரண்டும் உவமை உருபுகள். ஓர்பவர்-தியானித்து வழிபடுபவர்கள். ஓர்தல்-தியானித்தல். சென்றும்-சென்றாராயினும். அதற்கு-அதனால். அவர்-திருவடியை உணர்ந்து தியானிக்க வல்லவர்கள். திறல் நீங்கார்-தம் இயல்பில் வேறுபடமாட்டார்கள்: பந்தம் சற்றும் அடையமாட்டார்கள்.

வெண்பா

சதசத்தாம் மெய்கண்டான் சத்தருளிற் காணின்,
இதமித்தல் பாசத்தில் இன்றிக்—கதம்மிக்கு,
எரிகதிரின் முன்இருள்போல், ஏலா அசத்தின்
அருகுஅணையார், சத்தணைவார் ஆங்கு

பதவுரை:

சதசத்து ஆம் மெய்கண்டான்—தான் சதசத்து என்னும் உண்மையை உணர்ந்தவன்,

சத்து அருளிற் காணின்—சத்தாகிய முதல்வனின் திருவருளாலேயே அனைத்தும் காணுமாயின்,

பாசத்தில்—பாசம் ஆகிய அசத்தில்,

இதமித்தல் இன்றி—இதம் செய்தல் (பற்றுக் கொள்ளுதல்) இன்மையால்,

சத்து அணைவார்—சத்து ஆகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பர்;

கதம்மிக்கு—சீற்றம் மிகுந்து,

எரி கதிரின்முன்—எரிகின்ற சுடரின் முன்னர்,

இருள்போல் — நிலைபெறுதல் இல்லாத போல,

ஆங்கு—சத்தின் எதிரில்,

ஏலா—தமது சத்தி ஏற்கமாட்டாத,

அசத்தின் அருகு—அசத்தாய ஐம்புலன்களின் மாட்டு,

அணையார்—பொருந்தி நிற்கமாட்டார்.

குறிப்பு :

தான் சதசத்து என்னும் உண்மையை உணர்ந்தவன், சத்தாகிய முதல்வனின் திருவருளாலேயே அனைத்தையும் காண்பன்; காணின், அவன் பாசமாகிய அசத்தில் பற்றுச் செய்யான்; அதனால் அவன் சத்தாகிய முதல்வனைத் தலைப்பட்டு நிற்பன்; சீற்றம் மிகுந்து எரிகின்ற சுடரின் முன்னிலையில் நிலைபெறுதல் இல்லாத இருளைப்போல, சத்தின் எதிரில் தனது சத்தி நிலைபெறமாட்டாத அசத்தாகிய ஐம்புலன்களின்பால், அத்தகையோர் பொருந்தி நிற்க மாட்டார்கள். இதமித்தல்—இதம் செய்தல், பற்றுக் கொள்ளல். இன்றி-இன்மையால். ஏகனாக நிற்றலால், மலம் இல்லையாகும். இறைபணி நிற்றலால், மாயை வினைகள் இலவாகும்.

'மெய்கண்டான்' என்னும் ஒருமை, 'காணின்' என்னும் வினைகொண்டு முடிகின்றது; 'சத்து அணைவார்' என்னும் பன்மை, 'அணையார்' என்னும் வினைகொண்டு முடிகின்றது. இங்ஙனம் வேறு வினைமுடிபு பெறுவதனால், ஒருமைப்பன்மை மயக்கம் இங்கு இலதாயிற்று.

பத்தாம் சூத்திரம் முற்றிற்று.

(தொடரும்)

# இந்து சமயத்தின் உலகளாவிய இனிய இயல்பு*

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

## முன்னுரை:

இந்தியப் பெருநாட்டில், பலதிற மக்களும், பல்வேறு மொழிகளும், பல்வேறு நடையுடை பாவனைகளும், பல்வேறு பழக்க வழக்கப் பண்பாடுகளும்; ஆங்காங்கே அமைந்து விளங்கக் காண்கின்றோம். ஆயினும், இப் பல திற வேறுபாடுகளுக்கும் இடையே, ஒரு பெரும் பொதுத் தன்மையும் ஊடுருவி நின்று பொலிந்து திகழ்ந்து காணப்படுகிறது. இந்திய மக்களின் புறக்கோலங்களும் பிறவும் வேறுபட்டாலும், அவர்கள் அனைவருடைய உள்ளப்போக்கும் உணர்வும், பெரும்பாலும் ஒரே தன்மை உடையனவாக விளங்குகின்றன. இமயம் முதல் குமரி வரையிலுள்ள எல்லா மக்களும் பற்பல துறைகளில், மிகவும் வியக்கத் தக்க நிலையில், ஒத்த மனப்பான்மையும் உணர்வும் உடையவராக இருக்கின்றனர்.

கடவுள் நம்பிக்கையிலும், விக்கிரக வழிபாடுகள் புரிவதிலும், பல்வேறு சடங்குகள் இயற்றுவதிலும், பாவம் புண்ணியம் ஊழ்வினை இறப்பு பிறப்பு மறுபிறப்பு சுவர்க்கம் நரகம் என்பன பற்றிய கொள்கைகளிலும், இந்திய மக்கள் அனைவருக்குமிடையே ஒத்த கருத்தே நிலவி வருகின்றது. இவைகள் யாவும் இந்திய மக்களின் அடிப்படைப் பொதுக் கருத்துக்களாக அமைந்திருக்கக் காண்கின்றோம். சார்வாகம் சமணம் பௌத்தம் சைவம் வைணவம் சாக்தம் சீக்கியம் முதலிய சமயங்களும், கேவலாத்து வைதம் விசிட்டாத்துவைதம் துவைதம் சுத்தாத்துவைதம் முதலிய எத்துணையோ பற்பல தத்துவக் கொள்கைகளும், நமது இந்தியப் பெருநாட்டில் விளங்கி வருகின்றன. ஆயினும், அவைகள் அனைத்தையும் தனக்குள் ஏற்றுத் தழுவிக் கொண்டு விளங்கிவரும் சிறந்த பொதுமைப் பெருநெறியே, இந்து சமயம் ஆகும் என நாம் சுருக்கமாகக் கூறலாம்.

## பழைமை நலம்:

உலகில் நிலவிவரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழைமையும் பெருமையும் வாய்ந்து திகழ்வது, நமது இந்து மதம். பிற சில சமயங்களைப் போல நமது இந்து சமயமானது, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட ஒருவரால் தோற்றுவிக்கப் பட்டதன்று. யூதமதம் (கி.மு. 1500-1200), ஷிண்டோமதம் (கி.மு. 660), சொராஸ்ட்ரமதம் (கி.மு. 660), டாவோயிஸம் (கி.மு. 604), சமணம் (கி.மு. 599), பௌத்தம் (கி.மு. 560), கன்ஃபூசியம் (551), கிறித்துவம் (கி.பி. 4), இசுலாமியம் (570 கி.பி.), சீக்கியம் (1469 கி.பி.) என்னும் மற்றைச் சமயங்கள், இன்ன காலத்தில் இன்னாரால் தோற்றுவிக்கப்பட்டன என்றெல்லாம் வரலாற்று நூல்கள் கூறக் காண்கின்றோம்.

இவ்வாறு காலம் ஏதும் கூறுதற்கு இயலாத நிலையில், வரலாற்றுக் காலத்திற்கும் மிக முற்பட்டு, மிக்க பழைமை வாய்ந்ததாக நமது இந்து சமயம் விளங்கி வருகின்றது. எகிப்து, மெக்சிகோ, பாபிலோனியா, அசீரியா, பினீசியா, சிறிய ஆசியா, கிரீசு, உரோம் முதலிய நாடுகளில், ஒவ்வொரு காலத்தில் விளங்கியிருந்த எத்தனையோ பல மதங்கள் இருந்த இடமும் தெரியாமல் மருங்கறமாய்ந்தொழிந்து அழிந்தன. அவ்வாறு இன்றி, நம்முடைய இந்து சமயம் தொன்றுதொட்டு இன்றுகாறும் நின்று நிலவி வழங்கி வருகின்றது. பேரறிஞர் பாலகங்காதர திலகர், பேராசிரியர் எர்மன் ஜேக்கோபி ஆகிய பெருமக்கள், வானநூற் குறிப்புக்கள் பல கொண்டு கணித்து, வேதகாலம் கி.மு. 4500க்கு முற்பட்டது என்று வரையறை செய்துள்ளனர். இதனால் இந்து மதத்தின் பழமை எத்தகையது என்று ,யாவரும் இனிது உணரலாம். இத்தகைய சிறந்த தொன்மை யுடைமை பற்றியே, இந்து மதத்தினைச் 'சநாதன தருமம்' (Perennial Religion) என்று நம் சான்றோர்கள் போற்றி வந்துள்ளனர்.

''இந்து சமயம்'' என்னும் சொல், நமது பழைய வேதம் உபநிடதம் ஆகமம் புராணம் முதலிய நூல்கள் எதிலும் காணப்படவில்லை என்றும், அஃது அண்மையிற் சில காலமாகவே வழங்கி வருகின்ற வேற்றுப் புலச்சொல் என்றும் ஒரு சிலர் கூறுவது உண்டு. அஃது ஒரு

* இலங்கையில் நடைபெற்ற உலக இந்துமத மாநாட்டு விழா மலருக்காக எழுதிய சிறப்புக்கட்டுரை. (21-4-82 — 25-4-82)

வகையில் உண்மையேயாகுமாயினும், அது பற்றி ஏதும் குறையில்லை.

''தொன்மையவாம் எனும் எவையும்
நன்றாகா ;இன்று
தோன்றியன எனும்எவையும் தீதாகா''

என்று, நம் சைவசித்தாந்த சந்தான ஆசிரியர் களுள் ஒருவர் ஆகிய உமாபதிசிவம் கூறுவது, இங்கு நாம் எண்ணியுணர்வதற்கு உரியது.

'கடிசொல் இல்லை
காலத்துப் படினே''

என ஆசிரியர் தொல்காப்பியர் அருளிச் செய்திருத்தலும், இங்கு நாம் பெரிதும் சிந்திக்கத் தகுவதாகும். இச்சொல் அண்மையது ஆயினும், அது குறிக்கும் பொருள் மிக்க தொன்மையுடையதே யாகும் என்பதில் ஐயமில்லை.

பண்டைக் காலத்தில், பாரசிகர்கள், கிரேக்கர்கள் முதலிய பிற நாட்டு மக்கள், நம் பாரத நாட்டுச் சிந்து நதியையும், அதனைச் சார்ந்த நிலப்பகுதியையும் (Indus, India, Hindu), இந்து என்று வழங்கி வந்தனர். அதுவே பின்னர்ப் பாரததேசம் முழுமைக்கும், அதன்கண் வாழும் மக்கள் தொகுதியினர்க்கும், அவர்களின் பழக்க வழக்கம் பண்பாடு சமயம் ஆகியவற்றிற்கும், நாளடைவில் வழங்குவதாயிற்று. முதலில் நிலப் பரப்பைக் குறிக்கும் பெயராகவே இருந்த இந்து என்னும் சொல், இன்று இந்தியா என வழங்கப்படும் நம் பாரதநாடு முழுவதற்கும் பொதுவாக உரிய சமயப் பண்பாட்டு நெறியினைக் குறிப்பதாக விளங்கி வருகின்றது. இச்சொல் அண்மைக் காலத்திலேயே பெருவழக்குப் பெற்றது எனினும், இதனால் குறிக்கப்படும் சமயநெறி தொன்மை வாய்ந்ததாகும். (The name is recent, but the religion is ancient).

(1) இனி, 'இந்து' என்னும் சொல், நம்முடைய பழைய வேதாகம உபநிடதங்கள் முதலியவற்றில் யாண்டும் வரப்பெறவில்லையாயினும், இன்று நம் பாரத தேசத்திலுள்ள சைவம் வைணவம் சாக்தம் சமணம் பௌத்தம் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய பல்வேறு சமய நெறிகளையும் ஒன்று சேர்த்துத் தொகுத்துப் பொதுவாகக் குறிப்பிடுவதற்குரிய ஒரு தொகுதிப் பெயராக (Collective noun), 'இந்து சமயம்' என்னும் சொல் பெருவழக்காக நிலவி வருகின்றது.

''ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தைத் தனக்கு வந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவன் ஒருவன் பணிபுரிகின்றானோ, அவனே இந்து ஆவான். அவனது சமயமே இந்து சமயம்'' (இம்-இம்சையில், து-துக்கிக்கின்றவன்; இந்து) என்று இதற்குப் பெரியோர்கள் பொருள் கூறுவர்.

(2) இனி, இதற்கு வேறொரு பொருளும் பெரியவர்கள் கூறுவது உண்டு. 'சப்த கல்பதரு' என்னும் புகழ்பெற்ற வடமொழி இலக்கண நூல், 'ஏயம் நிந்தாதி இதி இந்து' எனக் கூறுகின்றது. அதன்படி''நினைவிலும் சொல்லிலும் செயலிலும் எத்தகைய இழிவும் பிழையும் நேராமல் கருத்தாகப் புறக்கணித்து ஒழுகுபவன் எவனோ, அவன் இந்து; அவனுடைய சமயமே இந்து சமயம்'' என்பது மற்றொரு வகை விளக்கம். இவ்விருவகைப் பொருள்களும் இந்து மதத்தைப் பின்பற்றி ஒழுகும் மக்களாகிய நாம் அனைவரும் கடைப்பிடிப்பதற்குரிய உயரிய சிறந்த குறிக்கோள்களை உணர்த்துவனவாகத் திகழ்கின்றன. ஆதலின் இப்பொருள் விளக்கங்கள், நாம் பெரிதும் போற்றிப் பாராட்டுவதற்குரியனவாகும்.

## பிணக்கு அற்ற பெருஞ்சமயம்:

தமிழ்நாட்டில் தோன்றிய தத்துவ ஞானிகளில் தலைசிறந்த ஒருவரும், சிவஞானசித்தியார் என்னும் செந்தமிழ்த் தத்துவப் பெருநூலை இயற்றியருளியவரும் ஆகிய அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் (கி.பி. 13ஆம் நூற்.), சிறந்த சமயம் எது என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார். ''உலகத்திலுள்ள பல சமயங்களும், அவற்றிற்குரிய பல நூல்களும், தம்முள் ஒன்றோடொன்று ஒவ்வாமல் மிகவும் மாறுபட்டனவாக உள்ளன. இவற்றுள் சிறந்த சமயம் யாது? சிறந்த பொருள் நூல் யாது? என்று நாம் ஆராய்ந்தால், எந்தச் சமயத்தையும் நூலையும் இகழாமலும், 'இதுவே சிறந்தது அதுவோ தாழ்ந்தது' என்னும் பூசல்கள் இன்றியும், பல்வேறு சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா உண்மைகளையும் ஏற்றபெற்றி இனிது உடன்பட்டுத் தழுவிக்கொண்டு, அவைகள் அனைத்திற்கும் பொதுவானதாய், அவற்றிற்கெல்லாம் ஒருபெரும் நிலைக்களனாகத் திகழும் பரந்து விரிந்த மனப்பான்மையுள்ள சமயமும் நூலுமே, உண்மையிலேயே மிகவும் சிறந்த ஒருபெரும் சமயமும் நூலும் ஆகும்'' எனக் குறிப்பிடுகின்றார்.

''ஒது சமயங்கள்
பொருள் உணரும் நூல்கள்,
ஒன்றோடொன்று ஒவ்வாமல்
உளபலவும்; இவற்றுள்
யாது சமயம்? பொருள்நூல்
யாது இங்கு? என்னில்,
இது ஆகும்; இது அல்லது
என்னும் பிணக்கது இன்றி,
நீதியினால் இவையெல்லாம்
ஓர் இடத்தே காண,
நின்றது யாதொரு சமயம்!
அது சமயம்; பொருள் நூல்!''

என அவர் சைவ சித்தாந்தத்தின் சிறப்பைப் பற்றி விதந்து கூறியிருப்பது, இந்து சமயத்திற்கும்கூட, ஒரு வகையிற் பெரிதும் ஏற்புடைத் தொன்றேயாகும் எனலாம்.

## சர் மானியர் வில்லியம்ஸ்:

இவ்வுண்மையை நன்கினிது வலியுறுத்தி வற்புறுத்தும் முறையில், சர் மானியர் வில்லியம்ஸ் என்னும்மேலைநாட்டுப்பேரறிஞர், இந்து

சமயம் பற்றிக் கூறியிருக்கும் பின்வரும் கருத்துக்கள் இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியன. ''இந்து சமயம், எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கொள்கைகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கின்றது. எந்த ஒரு சமயத்தையும் இகழ்ந்து புறக்கணிக்காமல், எல்லாவற்றையும் ஏற்றபெற்றி உடன்பட்டுத் தழுவிக்கொள்கின்றது. மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும், அனைத்துலகிற்கும், உரிய இனிய சமயமாக அது திகழ்கின்றது. வேறு எந்த மதத்தின் வளர்ச்சியினையும் தடுத்து எதிர்க்கும் இயல்பு, அதன்கண் காணப்பட்டவில்லை.

ஏனைய எல்லாச் சமயங்களையும், தனது பரந்து விரிந்த பெருநோக்கினால், தன்பால் ஏற்று இணைத்துத் தழுவிக்கொள்ளும் பெருமாட்சிமை உடையதாக இந்து சமயம் இலங்குகின்றது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப, அவரவர்க்குப் பொருந்திய நலங்களை விளைவிக்கும் திறனை, இந்து சமயம் உண்மையிலேயே பெற்று விளங்குகின்றது. மனித குலத்திற்கும், மனித மனப்போக்குக்கும் உரிய, எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில், இந்து சமயம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும் வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவ ஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தனிமை நாடுவோர், உணர்ச்சிமிகுந்தோர், செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்கவல்லதாக, இந்து சமயம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது''.1

## அன்னை வசந்தை :

இவ்வாறே இங்கிலாந்தில் தோன்றியவரும், உலகப்புகழ் பெற்ற ஜார்ஜ் பெர்னார்டு ஷா, சார்லஸ் பிராட்லா முதலியவர்களோடு நட்புரிமை கொண்டு பழகிய பெருநாவலரும், பல நூல்களின் ஆசிரியரும் ஆகிய திருமதி அன்னை வசந்தை அம்மையார் (Dr. Annie Besant) அவர்கள் கூறியிருப்பதும், இங்கு நாம் அறிந்து பெரிதும் மகிழ்தற்குரியது. ''கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக, உலகின் பல்வேறு பெருமதங்களையும் பற்றி ஆராய்ந்தறிந்த பிறகு, இந்து சமயம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போன்று நிறைவுடையதும், அறிவார்ந்ததும், ஆராய்ச்சி அனுபவங்களில் மிக்கதும், உயிர்க்கு உய்வளிக்கக்கூடியதும் ஆகிய சிறந்த சமயம், வேறு பிறிது எதுவும் இல்லை என்று நான் உணருகின்றேன். அதனை எவ்வளவுக்கெவ்வளவு உணருகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதனை நாம் நேசிப்போம்; எத்தனை அளவுக்கு நாம் அதனைப் புரிந்து நன்கு விளங்கிக்கொள்ளுகின்றோமோ, அத்துணை அளவுக்கு அதனை நாம் பெரிதும் மதித்துப் போற்றி மகிழ்வோம்.'' 2

## சர் வில்லியம் ஜோன்ஸ் :

இந்து மதத்தின் பலதிறப் பெருஞ் சிறப்புகளுள், அதன் தத்துவக் கொள்கைகளும், சிறந்த நூற்பெருக்கமும் குறிப்பிடத்தக்கனவாகும். ''அறுவகைச் சமயங்கள்'' என்னும் தொடர் தொன்றுதொட்டு வழங்கி வருவது. சமய தத்துவ நூலாசிரியர்கள், இவ் அறுவகைச் சமயங்கள் யாவை? என்பன குறித்துத் தத்தம் நூல்களில் பல்வேறு வகைகளில் குறிப்பிட்டுள்ளனர். எனினும் அறுவகைச் சமயங்கள் அல்லது 'ஷட் தரிசனங்கள்' எனப்படும் நியாயம் வைசேடிகம் சாங்கியம் யோகம் மீமாம்சை வேதாந்தம் என்னும் ஆறுமே, ஏனையவற்றைவிட மிகவும் பழமை வாய்ந்தனவாகும். இவைகளை விளக்கி, முறையே அக்கபாதர் கபிலர் பதஞ்சலி ஜைமினி வாதராயணர் என்னும் ஆறு பெருமுனிவர்கள் அரிய நூல்கள் இயற்றியுள்ளனர்.

மிகப்பழைய காலத்திலேயே, நம் இந்தியா நாடானது, கிரேக்கர் உரோமர் முதலிய மேலை நாட்டு மக்களுடன் வாணிகம் முதலிய தொடர்புகள் கொண்டிருந்தது. அதன் பயனாக இந்நாடுகள் இந்தியாவுடன் பல பொருள்களைக் கொண்டும் கொடுத்தும் கலந்து உறவாடி மகிழ்ந்தன. ஆதலின், இந்திய நாட்டுத் தத்துவக் கொள்கைகளை ஆராய்ந்துணர்ந்து வியந்த சர் வில்லியம்ஜோன்ஸ் என்னும் பேரறிஞர், ''இந்தியத் தத்துவக் கொள்கைகளுள் நியாயம் 'பெரிபடெடிக்' கொள்கையையும், வைசேடிகம் 'ஐயோனிக்' கொள்கையையும், மீமாம்சம் 'பிளேட்டோவின்' கொள்கையையும், சாங்கியம் 'இட்டாலிக்' கொள்கையையும், யோக தத்துவம் 'ஸ்டாயிக்' கொள்கையையும் பெரிதும் ஒத்துள்ளன. இவ்வாற்றால் கௌதமர் என்னும் அக்கபாதர் அரிஸ்டாட்டிலையும், கணாதர் தேல்ஸையும், ஜைமினி சாக்ரடீஸையும், வியாசர் எனப்படும் வாதராயணர்பிளேட்டோவையும், கபிலர் பித்தாகரஸையும், பதஞ்சலி ஜெனோவையும் போன்றவர்களாகக் காணப்படுகின்றனர் ''என்று, ஆராய்ந்து ஒப்

(1) " A characteristic of Hinduism is its receptivity and all-comprehensiveness. It claims to be the one religion of humanity, of human nature, of the entire world. It cares not to oppose the progress of any other system. For it has no difficulty in including all other religions within its all-embracing arms and ever-widening fold. And, in real truth, Hinduism has something to offer which is suited to all minds. Its very strength lies in its infinite adaptability to the infinite diversities of human character and human tendencies. It has its highly spiritual and abstract side suited to the metaphysical philosopher, its practical and concrete side suited to the man of poetic feeling and imagination, its quiescent and contemplative side suited to the man of peace and lover of seclusion."

*—Sir Monier Williams.*

(2) " After a study of some forty years and more, of the great religions of the world, I find none so perfect; none so scientific, none so philosophical, and none so spiritual as the great religion known by the name Hinduism. The more you know it, the more you will love it ; the more you try to understand it, the more deeply will you value it."

*—Dr. Annie Besant.*

பிட்டுக் கூறி மகிழ்கின்றார்.[3] இங்ஙனமே மாக்சு முல்லர், பெரிடேல்கீத், விண்டர்நிட்ஸ், கிரிஃபித், எட்வின் ஆர்னால்ட், வில்லியம் காரி, ஷோஃபனேர், ரோமைன் ரோலண்ட் முதலிய நூற்றுக்கணக்கான மேலைநாட்டு அறிஞர்கள் பலர், இந்து சமய நூல்களை ஆராய்ந்து வியந்து போற்றிப் பதிப்பித்திருக்கின்றார்கள்.

### விக்டர் கசின் :

''இந்திய நாட்டின் கவிதை இலக்கியங்கள், தத்துவ நூல்கள் ஆகியவற்றை ஆராயும் பொழுது, அவைகளிற் பொதிந்துள்ள உண்மைகள் மிகவும் சிறப்புடையனவாகக் காணப்படுகின்றன. அவற்றின் உயரிய தத்துவக்கொள்கை நலங்களை, நம்முடைய ஐரோப்பிய அறிவுநலனுடன் ஒருங்கு வைத்து ஆராயும்போது, நாம் மண்டியிட்டு வணங்கிப் பணிய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்'' என்று, விக்டர் கசின் என்னும் பேரறிஞர் விளம்புகின்றார்.[4]

### மாக்சுமுல்லர் :

இங்ஙனமே மாக்சுமுல்லர் என்னும் பேரறிஞரும், ''ஐரோப்பியர்கள் வெறும் கிரேக்க ஊரோம யூத தத்துவங்களை மட்டும் படித்தால் போதாது. நம்முடைய அகவாழ்க்கை நிறைவானதாகவும், பல நலம் பொதிந்ததாகவும், உலகளாவி விரிந்த தாகவும், உண்மையிலேயே உயரிய மனித இயல்புடையதாகவும் அமைய வேண்டுமாயின், இந்தியத் தத்துவ நூல்களை நாம் படிக்க வேண்டுவது, மிகவும் இன்றியமையாததாகும். அது நம்முடைய குறைகளைப் போக்கித் திருத்திச் செம்மைப்படுத்த வல்லதாக உள்ளது'' என்று கூறுகின்றார்.[5] இவற்றினாலெல்லாம் இந்து சமயத்தின் சிறப்பு இனிது புலனாதல் காணலாம்.

### உலகளாவிய இயல்பு

இந்து சமயத்தின் உலகளாவிய இனிய நல்லியல்பு (The Universality) பெரிதும் வியந்து போற்றுதற்குரியதாகத் திகழ்கின்றது. இந்து சமயமும், அதன் பல்வகைப் பண்புநலங்களும், உலகின் பல பகுதிகளிலும் பரவியுள்ளன. சுமத்திரா (சுவர்ணதீபம்), ஜாவா (யவத்தீபம்), பாலி, போர்னியோ, மலேசியா, கம்போடியா (காம்போஜம்), சம்பா, இந்தோனேஷியா, இந்தோசைனா, நடுஆசியா, திபெத்து, பர்மா, சிலோன், சைனா, கொரியா, ஜப்பான் முதலிய பல பகுதிகளிலும், இந்து மதத்தின் பண்பாடுகளும், சாயல்களும் பரவிக் காணப்படுகின்றன. கிழக்காசிய நாடுகளில் தேவவர்மன், குணவர்மன், உருத்திரவர்மன், யசோவர்மன், சஞ்சயன், கௌணியன், அர்ச்சுனன், உக்கிரசேனன், சித்திரசேனன், பிரம்மதத்தன், இந்திராதித்தன் முதலிய பல இந்து மதப் பெயர்கள், இன்றளவும் பெருக வழங்கப்பட்டு வருகின்றன.

ஜாவாவில் உள்ள போராபுதூர்ப் புத்தர் கோயிலும் (கி.பி. 750-850), கம்போடியாவில் உள்ள அங்கோர்தாம் என்னும் சிவபிரான் கோயிலும் (கி.பி. 802-860), அங்கோர்வாட் என்னும் திருமால் கோயிலும் (கி.பி. 1110-1150), நமது தமிழக இந்துக் கோயிற் கட்டடக்கலை, சிற்பக்கலைகளினுடைய வளர்ச்சியையும், சிறப்பையும், பரவலையும் விளக்குவனவாக அமைந்து திகழ்கின்றன.

கம்போடியாவில் அங்கோர்வாட் என வழங்கும் ஒரு பெருங்கோயில் திருமாலுக்கென அமைக்கப்பட்டுள்ளது. அதன்கண் இராமாயணம், மகாபாரதம், அரிவம்சம் என்னும் நூல்களிலிருந்து பல அழகிய சிறந்த சிற்பக்காட்சிகள் செதுக்கப்பட்டுள்ளன. இராமன் மாயமானைப் பின்தொடர்தல், வாலி சுக்ரீவப் போர், அசோக வனத்தில் சீதையின் சோக நிலை, கண்ணபிரான் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்தல், சிவபிரான் காமதகனம் செய்தல், தேவர்கள் திருப்பாற்கடல் கடைதல், முதலிய காட்சிகள் மிகப் பெரிய அளவில் செதுக்கப்பெற்று இன்றளவும் உயிரோவியங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

### ஈலியோடொரஸ்

மிகப் பழங்காலத்தில் வெளிநாட்டவர்களும் இந்திய நாட்டில் வந்து தங்கியிருந்து,

---

(3) " Of the philosophical schools, it will be sufficient here to remark that the first Nyaya seems analogous to the Peripatetic; the second sometimes called Vaisesika, to the Ionic; the two Mimamsas, of which the second is often distinguished by the name Vedanta, to the Platonic; the first Samkhya to the Italic; and the second of Patanjali to the Stoic philosophy; so that Gautama corresponds with Aristotle, Kanada with Thales, Jaimini with Socrates, Vyasa with Plato, Kapila with Pythogoras, and Patanjali with Zeno."

—*Sir William Jones.*

" According to Greek tradition, Thales, Empedocles, Anaxagoras Democritus and others undertook journeys to Oriental countries in order to study philsophy."

—*Prof. A.A. Macdonnell*

(4) " When we read withattention. the poetical and philosophical movements of the East, above all those of India, which are beginning to spread in Europe, we discover there so many truths, and truth so profound, and which make such a contrast with the meanness of the results at which the European genius has sometimes stopped, that we are constrained to bend the knee before that of the East, and to see in this cradle of human race the native land of the highest philosophy."

—*Victor Cousin*

(5) " If I were to ask myself from what literature, we here in Europe, we who have been nurtured almost exclusively on the thoughts of Greeks and Romans and of one semitic race, the Jewish, may draw that corrective which is most wanted, in order to make our inner-life more perfect, more comprehensive, more universal, in fact nore truly human, a life, not for this life only, but a transfigured and eternal life, again I should point to India".

—*Max Muller*

இந்து மதத்தைத் தழுவிப் போற்றியுள்ளனர். கி.மு. 2ஆம் நூற்றாண்டில் குவாலியர் மாநிலத்தில் பெஸ்நகர் என்னுமிடத்தில், பிராமி எழுத்துக்களில் நிறுவப் பெற்றுள்ள கல்வெட்டுத் தூண் ஒன்றில், "சுங்கவம்சத்து மன்னனாகிய பகபத்திரன் என்பவனின் அரசவைத் தூதுவனாக அந்தால்கிதாஸ் என்னும் கிரேக்க மன்னவனால் அனுப்பப்பெற்றவனும், டியோன் என்பவனின் புதல்வனும், தட்சசீலத்தில் வாழ்பவனும், 'பாகவதன்' எனப்படும் விஷ்ணு பக்தனும் ஆகிய ஈலியோடொரஸ் என்பவனால், பரவாசுதேவன் எனப்படும் விஷ்ணுவுக்குரிய புனிதம் மிக்க பறவையாகிய கருடனின் வடிவத்தை உச்சியில் செதுக்கப்பெற்றுள்ள, இத்தூணானது நிறுவப் பெற்றது" என்று காணப்படுகிறது. இதனால் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே கிரேக்கர் முதலிய பிறநாட்டவர்கள், இந்து மதத்தைத் தழுவியுள்ளனர் என்னும் சிறப்பு மிக்க செய்தி அறியப்படுதல் காணலாம்.

## இராமாயணமும் இலியதமும் :

எகிப்து தேசத்தில், நமது இராமரின் திருப்பெயர் பெரிதும் பரவியிருந்ததாகத் தெரிகின்றது. அந்நாட்டின் வரலாற்று நூல்களில் முதலாம் இராமேசஸ், இரண்டாம் இராமேசஸ் என்னும் பெயர்கள் பல காணப்படுகின்றன. எகிப்து நாட்டிலுள்ள சகாரா என்னும் பாலை நிலப்பெயருக்கும், இராமாயணத்தில் வரும் பகீரதனின் முன்னோர்கள் ஆகிய சகரர் என்பவர்களின் பெயருக்கும் இடையே, தொடர்பு இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

கிரேக்க நாட்டின் இணையற்ற பெருங் காப்பியம் ஆகிய இலியதம் (Iliad) என்னும் காப்பியத்தின் கதையில் வரும்மாந்தர்களுக்கும், ( Characters ) இராமாயணம் என்னும் நம் நாட்டு இதிகாசத்தில் வரும் மாந்தர்களுக்கும் இடையே, பலதிற ஒப்புமைத் தன்மைகள் காணப்படுகின்றன. இவ்விரு பெரு நூல்களுமே போர் நிகழ்ச்சியினை அடிப்படைப் பொருளாகக் கொண்டுள்ளன. இரண்டிலுமே ஒருவன் மனைவியை மற்றொருவன் கவர்ந்துகொண்டுசென்று விடும் செய்தி கூறப்படுகின்றது.

கிரேக்க நாட்டின் இலியதம் என்னும் காவியத்தில் வரும் மெனிலஸ் ( Menelaus ) இராமன்; ஹெலன் (Helen) சீதை; ஸ்பார்ட்டா நகர் ( Sparta ) அயோத்தி நகரம், இலங்கை (Troy) அகமெம்னன் (Agamemnon) சுக்கிரீவன்; பெட்ராக்ளஸ் (Patroclus) இலக்குவன், நெஸ்ட்டார் ( Nestor ) ஜாம்பவான்; யுலிசிஸ் ( Ulysses ) ஆஞ்சநேயன்; ஹெக்டார் (Hector) இந்திரசித்து என்று கூறலாம்படி, ஓரளவு ஒப்புமைத்தன்மை இவ்விருபெரு நூல்களிலும் அமைந்து கிடக்கின்றன. இன்னோரனைய சான்றுகள் பலவும், இந்து மதத்தின் கருத்துக்கள், கொள்கைகள் உலகின் பல பகுதிகளிலும் சென்று பரவியிருந்த செய்தியினை, நுண்ணிதின் எண்ணியுணரப் பயன்படும் இனிய அரிய சான்றுகள் ஆகும் எனலாம்.

## கிருட்டினனும் கிறித்துவும் :

எத்துணையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த கண்ணபிரானின் திருவவதாரம் பற்றிய வரலாறும், மேலைநாடுகளிலும் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததாகத் தெரிகின்றது. கண்ணபிரானின் வரலாற்றைப் போலவே, இயேசுநாதரின் பிறப்பைப் பற்றிய வரலாறும் அமைந்து காணப்படுகின்றது. இரண்டிற்கும் இடையே பெரிதும் ஒப்புமைத் தன்மை மிக்குத் திகழ்கின்றது.

இருவரும் இரவிலேயே பிறந்தனர். கண்ணன், கம்சன் பொருட்டு ஒளிந்து வளர்ந்தான். இயேசுநாதர், ஏரோது (Herod) என்னும் அரசனின் பொருட்டு அஞ்சி மறைத்து வளர்க்கப் பெற்றார். கம்சனைப் போலவே, ஏரோது அரசனும் தனது உயிர்ப்பாதுகாப்பின் பொருட்டுப் பல குழந்தைகளைக் கொல்வித்தான். கம்சனுக்குக் கண்ணபிரானின் அவதாரம் பற்றிய அறிவிப்பு முன்னரே நிகழ்ந்தது. அவ்வாறே ஏரோது அரசனுக்கும் அசரீரியினால் இயேசுநாதரின் அவதாரச் செய்தி அறிவிக்கப் பெற்றது. கண்ணபிரான் சிறையிலே பிறந்தார். இயேசு தொழுவத்திலே பிறந்தார். இயேசுவை 'நல்ல மேய்ப்பன்' (Good shepherd) என்று போற்றுவர். அவ்வாறே கண்ணபிரானும் ஆயர்பாடியில் இடையர்களில் ஒருவனாகப் பசுக்களை மேய்ப்பவனும் காப்பவனுமாகக் 'கோபாலன்' 'கோவிந்தன்' என்று பெயர் பெற்று விளங்கினான்; இயேசு மலைச் சொற்பொழிவு (Sermon on the Mount) நிகழ்த்தினார். கண்ணபிரான் குருட்சேத்திரத்தில் தேர்த்தட்டின்மீது இருந்து பகவத்கீதை ( Song Celestial ) உபதேசம் புரிந்தார். இத்தகைய ஒப்புமைகள் பலவும் நாம் அறிந்துணர்ந்து மகிழ்தற்குரியன.6

## அமெரிக்காவில் இந்து சமயம்

"திருமாலின் கூர்மாவதாரப்படிமையினைக் கொண்ராகுவாவிலும், ஆதிசேடனின்கோயிலை மெச்சிகோ நகரின் அருகிலும், வாமனன் இந்திரன் ஆகியோர் படிமங்களை மெச்சிகோ நகரின் தேசியக் காட்சிச் சாலையிலும், இன்றும் யாவரும் காணலாம். பெருவிய நாட்டுக் கவிதை நூல்களின், ஒவ்வொரு பக்கத்திலும், இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றின் இலச்சினைகள் காணப்படுகின்றன. மெச்சிகோ, குவாதமாலா, பெரு, பொலிவியா, ஒண்டுரஸ் முதலிய அமெரிக்க நாட்டுப் பகுதிகளில், சிவபிரான் திருமால் விநாயகர் வாமனர் இந்திரன் சூரியன் அனுமன் முதலிய தெய்வங்கள் வழிபடப் பெற்றன. நடு அமெரிக்காவிலும், தென்னமெரிக்காவிலும்

(6) " The birth stories of Krishna and Jesus have a certain striking resemblances suggestive of mutual borrowing. The similarities in the teachings of the 'Bhagavad Gita' and the Gospels have led some to think that Krishna and Christ were one. A comparison of the lives of the founders of the two religions of Buddhism and Christianity, their scriptures and their ethical teachings is undoubtedly an instructive study of comparative Religion...."

—*Dr. S. Radhakrishnan.*

இத்தெய்வங்கள் வழிபடப் பெற்றன'' என்று சமன்லால் என்னும் ஆராய்ச்சிப் பேரறிஞர் கூறுகின்றார்.7

இந்தியாவில் மட்டுமேயன்றி, இலங்கை, பர்மா, மலேசியா, சயாம், தாய்லாந்து, இந்தோனேஷியா, அன்னாம், திபேத், சைனா முதலிய பிற நாடுகளிலும், இராமாயண வரலாறுகள், இலக்கியங்களிலும் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் நாடகங்களிலும் பலவகை விழாக்களிலும் பரவி விரவிப் படர்ந்து வளர்ந்துள்ளன. சயாம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் அரசர்கள் சிலரின் பெயர் ஈறுகள், இராமர் என்று உள்ளன. ஜாவாத் தீவின் தலைநகரப் பெயராகிய ஜாகர்த்தா என்பது அயோத்தியா என்பதன் திரிபேயாகும்.

ஜாவாத் தீவிலுள்ள பெரம்பானன் தொகுதிக் கோயில்களில், இராமாயண வரலாறு முழுவதும், கண் கவரும் வனப்புமிக்க சிறந்த புடைப்புச் சிற்பங்களாக, ஏராளமாக மிகப் பெரிய அளவில் செதுக்கப்பட்டுள்ளன. அவைகள் 'கல்லும் சொல்லாதோ கவி' என்பதற்கு ஏற்பக் கல்லில் அமைந்த அழகிய பெருங்காவியங்களாக விளங்குகின்றன.

இராமபிரான் ஜாவாத் தீவின் தேசியத் தலைவராக மதிக்கப்படுகின்றார். சயாமிலுள்ள லோப்பரி என்னும் தலைநகரின் பெயர், லவபுரி என்பதன் சிதைவேயாகும். ஜாவாவின் நடுவில் ஓடும் ஓர் ஆற்றுக்குச் செரயா எனப் பெயர் வழங்குகின்றது. அது கோசல நாட்டில் ஓடிய சரயு என்னும் நதியினது பெயரைத் தழுவியதேயாகும். பாங்க்காக் என்னுமிடத்தில் ஒரு கோயிலில் இராமாயண வரலாறு முழுவதும் வெள்ளித் தகடுகளில் செதுக்கப் பெற்றுப் பதிக்கப்பெற்றுள்ளது.

கம்போடிய அரசர்கள் தம்மைச் சூரிய வம்சத்தில், இட்சுவாகு குலத்தில் உதித்த, இராம பிரானின் வழிவந்தவர்களாகக் கூறிக் கொள்ளுகின்றனர். கம்போடிய நாட்டில் அங்கோர்தாம் என்னும் தலைநகரில் ஆண்டு வந்த யசோவர்மன் என்னும் அரசன்(கி.பி. 890-910), இராம பிரானைப் போன்றவன் என்று புகழப் படுகின்றான். பபுவா எனத் தற்போது வழங்கும் ஏமசிருங்ககிரி என்னும் நகரில் உள்ள கோயிலில், இராமாயணச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. கம்போடியாவில் அங்கோர் வாட் என்னும் இடத்திலுள்ள விஷ்ணுகோயிலிலும், இராமாயணச் சிற்பங்கள் பற்பல காணபடுகின்றன.

சம்பா என வழங்கும் தெற்கு அன்னாம் நாட்டிலும், இராமாயணக் கதை பெருக வழங்கி வருகின்றது. அந்நாட்டு மக்கள், தங்களை இராம பிரானின் வானரசேனைகளினது சந்ததியில் வந்தவர்கள் என்று பெருமையுடன் கூறிக்கொள்ளுகின்றனர். இங்ஙனமே திபெத்து மக்களும் தங்களைக் குறிப்பிட்டுக்கொள்கின்றனர். சீனாவில், லங்காவதார சூத்திரம், தசரத ஜாதகம் என்னும் புத்தநூல்களால் இராமாயணம் பெரிதும் பரவியது.

இங்ஙனம் கிழக்கு ஆசிய நாடுகளில் மட்டுமன்றி, மேலை ஐரோப்பிய நாடுகளிலும்கூட, இராமாயணம் பெரியுதும் பரவி வருகின்றது. மாக்ஸ்முல்லர் (Max Muller), கீத் (A.B. Keith), மாக்டனால் (A.A. Macdonnel), விண்டர் நிட்ஸ் (Winternitz), ஆப்கின்ஸ் (Hopkins), ஜேக்கோபி (Jacobi) முதலிய அறிஞர்கள் பற்பலர், இராமாயணத்தினை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்து இயற்றியுள்ளனர். அண்மையில் ரஷிய நாட்டிலும், இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எகிப்து நாட்டிலும், மெக்சிகோ, பெரு முதலிய அமெரிக்க நாட்டின் பகுதிகளிலும், இராமாயணம் மிகப் பழங்காலத்திலேயே பரவியிருந்ததற்குச் சரித்திரச் சான்றுகள் காணப்படுகின்றன.

இந்து சமயக் கடவுளர்க்கும், கிரேக்க உரோமக் கடவுளர்க்கும் இடையே பலதிற ஒப்புமைகள் காணப்படுகின்றன. இந்திரன், ஜுபிடர், சிவபிரான் ஜீயஸ், பார்வதி ஜுனோ, கிருஷ்ணன் அப்போல்லோ, இலட்சுமி கேரெஸ், பிருதிவி சிபலே, வருணன் நெப்ட்யூன் (யுரேனஸ்), சரசுவதி மினர்வா, கார்த்திகேயன் (முருகன்) மார்ஸ், இமயன் ப்ளூட்டோ (மினோஸ்), குபேரன் புளூட்டஸ், விசுவகர்மன் வல்கன், மன்மதன் கியூபிட், இரதி வீனஸ், நாரதர் மெர்க்குரி, ஆஞ்சநேயர் பான், உஷை ஈயோஸ், அருணன் அரோரா, வாயுதேவன் இயோலஸ், கணேசர் ஜேனஸ், அசுவினி குமாரர் சடயோஸ்கரி (கேஸ்டர், பொல்லுக்ஸ்) என்று முறையே இணைத்துச் சொல்வதற்கு ஏற்ற வகையில், இந்து சமயக் கடவுளர்க்கும் ஏனைய கிரேக்க உரோமக் கடவுளர்க்கும் பலவகை ஒப்புமைத்தன்மைகள் இருப்பதாக சர் மானியர் வில்லியம்ஸ் (1819-1879) என்னும் ஆங்கிலேய அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.8

## உலகின் பல பகுதிகளில் சிவலிங்கம்

நமது இந்திய நாட்டிலும், குறிப்பாக, இந்து சமயத்திலும், சிறப்பாகப் போற்றி வழி

---

(7) "Every page of Peruvian poetry bears the imprints of Ramayana and Maha Bharatha..Shiva, Ganesha, Indra, the Sun, Hanuman, Vishnu and his tortoise-incarnation (Kurma Avatar), were some of the Hindu Gods worshipped in Central and South America...... After 17 years of research, I can now claim to have proved my theory of Hindu Colonisation of America. The stones in every corner of America speak of Hindu influences."

—*Prof. Chamanlal, Hindu America*

(8) "The practice of Linga-worship was so general as to have spread itself over a large part of the habitable globe, for it flourished for many ages in Egypt, Syria, Persia, Asia-Minor, Greece and Italy. It still is in vigour in India and many parts of Africa, and was even found in America on its discovery by the Spaniards, being regarded as the most sacred object of worship and consecrated by religion. The culture was associated with the very idea and sentiment which was regarded as ennobling to man."

—*H. M. Westropp.*

படப்பெறும் தெய்வத் திருவுருவங்கள் அல்லது அடையாளங்களில், சிவலிங்கத் திருவுருவம் மிக்க சிறப்புடைய ஒன்றாகும். இமயம் முதல் குமரி வரையிலுள்ள எண்ணிறந்த எத்தனையோ பல தலங்களிலும் கோயில்களிலும் சிவலிங்கத் திருவுருவங்கள் சிறப்புற நிறுவப் பட்டு, தொன்னெடுங்காலம் முதல் இன்றளவும் இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலுமே, பல கோடிக்கணக்கான மக்களால் போற்றி வணங்கப்பட்டு வருகின்றன.

சிவலிங்கத் திருவுருவின் பழமையும் பெருமையும் எல்லையற்றன. மொகஞ்சதாரோ, ஆரப்பா முதலிய இடங்களில் நிகழ்ந்த அகழ்வு ஆராய்ச்சிகளில், மிகப் பல சிவலிங்கத் திருவுருவங்கள் கண்டெடுக்கப் பெற்றுள்ளன. சிவலிங்கத் திருவுருவங்களும், சிவலிங்க வழிபாடும் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, எகிப்து சிரியா பாரசீகம் சிறியஆசியா கிரீசு இத்தாலி ஆஃப்பிரிக்கா அமெரிக்கா திபெத்து சீனா ஜப்பான் சைபீரியா சுமத்திரா ஜாவா போர்னியோ ஆஸ்திரேலியா முதலிய, உலகின் பல பகுதிகளிலும் ஒரு காலத்தில் பெரிதும் பரவியிருந்தது.9 இதனை எச்.எம். வெஸ்ட்ராப், இ.பி. டெய்லர், ஆலன் கிராண்ட் முதலிய மேலைநாட்டு அறிஞர்கள் தத்தம் நூல்களில் ஆராய்ந்து விளக்கியுள்ளனர்.

## முடிவுரை:

இந்து சமயத்தின் பலவகையான சிறப்புக்களையும் இயல்புகளையும் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதற்கு அதன் கோயில்கள் (Temples), அருளாளர்கள் (Saints), சாத்திரங்கள் (Scriptures) என்பன பெரிதும் துணை செய்யும். இம் மூன்றுமே எண்ணற்றனவாய் எல்லையின்றி விரிந்து பரந்து விளங்குகின்றன. இந்து சமயக் கோயில்களையும் ஞானிகளையும் சாத்திரங்களையும் பற்றி நாம் அறிந்துகொள்ளுதற்குரிய எத்தனையோ பல அரிய பெரிய செய்திகள் எல்லையில்லனவாய் விளங்குகின்றன. இவைகளையெல்லாம் ஆராய்ந்து உணருந்தோறும், இந்து சமயமானது விரிந்து பரந்த பெரு நோக்குடையது என்பதும், உலகளாவிய பெருந்தகைமை சான்ற உயர்ந்த சமயம் என்பதும், நாடு மொழி இனம் நிறம் முதலிய வேற்றுமைகளையெல்லாம் கடந்து விளங்கும் மாட்சிமைகளையுடையது என்பதும், பிறவும் நாம் தெளியலாம். —ந. ரா. முருகவேள்

---

(9) "We cannot, of course, do more than indicate here the bare outlines of so interesting a subject as a comparison between the gods of India, Rome and Greece thus:

Indra and Siva certainly offer points of analogy to Jupiter and Zeus ; Durga or Parvati to Juno : Krishna to Apollo ; Sri to Ceres ; Prithivi to Cybele ; Varuna to Neptune and in his earlier character to Uranus ; Saraswathi, goddess of speech and arts, to Minerva ; Karti keya or Skanda God of war to Mars ; Yama to pluto or Minos; Kubera to Plutus; Viswakarman to Vulcan; Kama, god of Love, to Cupid; Rati his wife to Venus; Narada to Mercury; Hanuman to Pan; Ushas, and in the later mythology Aruna, to Eos and Aurora ; Vayu to Aeolus; Ganesa, as presiding over the opening and beginning of all undertakings, to Janus ; the Asvini-kumaras to the Dioscuri, Castor and Pollux."

—*Sir Monier Williams, Indian Wisdom.*

---

## பக்தி நெறி வகைகள்

எல்லாம் வல்ல இறைவன்பால், அவனது மெய்யடியார்கள் செய்தொழுகும் அன்பாகிய பக்தியானது, பலவகை நெறிகள் அல்லது உணர்வுகளில் இயங்கும். அவற்றைத் தாஸ்யபாவம், சக்யபாவம், வாத்சல்யபாவம், சாந்தபாவம், காந்தாபாவம், மதுரபாவம் என ஆறு வகைகளாகப் பெரியோர்கள் கூறுவதுண்டு.

(1) தாஸ்யம்: அடியவன் தலைவன்பாற் செலுத்தும் அன்பு; இராமனிடத்தில் ஆஞ்சநேயன் செலுத்திய அன்பு.

(2) சக்யம்: நண்பன் நண்பன்பாற் செலுத்தும் அன்பு: குசேலமுனிவரும் கண்ணபிரானும் தம்முள் ஒருவருக்கொருவர் கொண்டிருந்த அன்பு.

(3) வாத்சல்யம்: குழந்தையின்மேல் தாய்க்குள்ள பரிவு; கண்ணபிரானிடம் யசோதைப் பிராட்டியார் செலுத்திய பரிவு.

(4) சாந்தாம்: குழந்தைக்குத் தாயின் மேலுள்ள பாசம்; துருவனும் பிரகலாதனும் இறைவன்பாற் கொண்டிருந்த அன்பு.

(5) காநதம்: மனைவி கணவன் மேலும், கணவன் மனைவிமேலும் வைக்கும் நேசம்; சீதைக்கும் இராமபிரானுக்கும், கண்ணனுக்கும் உருக்குமிணிக்கும் இடையே நிலவிய நேசம்.

(6) மதுரம்: காதலனுக்கும் காதலிக்கும் இடையே உள்ள காதல் உணர்வு; இராதைக்கும் கண்ணனுக்கும் இடையே நிலவிய காதலன்பின் நிலை.

இந்த ஆறுவகை உணர்வுகளின் நெறியினைத் தமிழில் ,முறையே அடிமைநெறி, நட்புநெறி, தூய்மைநெறி, குழந்தைமைநெறி, கணவன்மனைவி நெறி, காதலன் காதலிநெறி எனக் குறிப்பிடுதல் பொருந்தும்.
—ஆசிரியர்

# சைவாகமங்கள்

திரு மு. அருணாசலம்

## வேதங்களும் ஆகமங்களும்

வேதம்-ஆகமம்: ஆகமங்களுக்கு மூலம் வேதம் என்று சொல்வது மரபாகிவிட்டது. பல ஆகமங்களில், அவை வேதத்தின் சாரம் என்றே சொல்லியிருக்கக் காண்கிறோம். எனினும், சைவசித்தாந்த சாத்திரங்கள் இரண்டையும் வேறு பிரித்து, ''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்'' என்று கூறும். இங்கு வேத நூல் வேதம் என்றும், சைவநூல் ஆகமம் என்றும் ஆன்றோரால் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. ஆகமத்தை மிகவும் போற்றி உரைக்கின்ற சேக்கிழார், தம் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத் தொடக்கத்தில் அவர் துதியாகச் சொல்லும் பாடல் எல்லாரும் நன்கு அறிந்தது. ''வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத... திருஞானசம்பந்தர்'' என்று சொல்லுமிடத்து, வேதநெறி-வேதநெறி என்றும், மிகுசைவத் துறை என்பது அதனினும் மேம்பட்டதாகிய ஆகமநெறி என்றும் பொருள் சொல்வது வழக்கமாக உள்ளது. இவ்விரண்டு மேற்கோட் பாடல்களாலும் வேதநெறி ஆகமநெறி என்ற இரண்டும் தனித்தனி நெறிகள், வெவ்வேறானவை என்றே கருதப்பட்டு வந்தமை தெளிவு. ஒரு தெய்வம் என்ற கருத்தே எழாமல், வெறும் தத்துவப் பொருளாகவே கொள்வது வேதநெறி (அதாவது உபநிடதம் கூறும் பொருள்) என்றும், ஒரு தெய்வமாகிய சிவத்தைக் கூறுவது ஆகம நெறி என்றும் தெளிவாகப் பெறப்படுகின்றது.

## வேத-ஆகம ஒருமைப்பாடு

இவ்வாறு இருப்பினும், ஆகமங்களில், இரண்டும் ஒன்று என்ற கருத்தும் காணப்படும். ''சித்தாந்தம் என்பது வேதங்களின் சாரம்'' என்று சுப்பிரபேதாகமம் கூறுகிறது. ''இந்தத் தந்திரமானது வேதத்தின் சாரமாக உள்ளது''- ''வேதத்தின் சாரமாகவுள்ள இந்தச் சித்தாந்த ஞானம் பரம மங்களமானது'' என்று மகுடாகமம் கூறுகிறது. (தந்திரம்-ஆகமம்). வேத நூல்கள் மேல்வகுப்பினராகிய அந்தணருக்கே உரியன. இவர்கள் தங்களுக்காகவும் சமூகத்திலுள்ள பிற இனத்தாருக்காகவும் செயல்படுபவர்கள். ஆனால் ஆகம நூல்கள் மக்கள் அனைவருக்குமே உரியவை. இவ்விரண்டுவகை நூல்கள் இந்த நாட்டிலேயே தோன்றியவை, வேறிடத்திலிருந்து வந்தவை அல்ல. இரண்டும் மிகப் புராதனமான காலத்திலிருந்தே பிற தொடர்பு ஏதும் இல்லாமல் ஒன்றாகவே இருந்து வளர்ந்தன என்ற கருத்து உண்டு என்று முற்கூறிய அதே ஆசிரியர் சொல்லுகிறார்.

எனினும் பேராசிரியர் தம் தொல்காப்பிய உரையுள், வழிநூலைக் கூறும்போது, வேதப் பொருண்மை ஆகமப் பொருண்மை என்று வேறு பிரித்துச் சொல்வதால் (மரபியல் 97ஆம் சூத்திரவுரை), இரண்டும் வெவ்வேறு என்ற கருத்துக்கள் அக்காலத்தே நிலவின என்பது பெறப்படும். ஆகமங்களுக்கும் மறைகள் என்ற பெயர் உண்டு. வேதங்களைப் போலவே அவையும் சாத்திரங்கள். அவற்றிற்கு ஐந்தாம் வேதம் என்றும் பெயர் சொல்லப்படும். வடமொழி நிகண்டுகளில் வேதத்திற்கு நிகமம் என்ற பெயரும், தந்திரங்களுக்கு ஆகமம் என்ற பெயரும் சொல்லப்பட்டிருக்கும்.

ஆகமங்களும் வேதங்களைப் போலவே நெடுங்காலம் ஆசானிடம் இருந்து மாணாக்கர்களுக்குச் சொல்லப்பட்டுச் செவி வழியாகவே வந்த காரணத்தால் சுருதி என்று பெயர்பெற்று இருந்தன. பதினோராம் நூற்றாண்டு வரை இப்படியிருந்து அதற்குப் பின் நிகமம் ஆகமம் என்று வேறுபாடு கொள்ளப்பட்டது.

சாக்த தந்திரங்களை ஆராய்ந்து வங்கத்தில் நீதிபதியாக இருந்து பல நூல்கள் அது பற்றி எழுதிப் பெரும் புகழ் பெற்றிருந்த சர். ஜான்வுட்ராப் என்ற பேரறிஞர் சுவாமி பிரக்ஞாநந்தரின் கருத்தாகப் பின்வருமாறு கூறுகிறார்: ''இன்றுள்ள ஆகமங்களின் பெரும் பகுதி பௌத்த சமயத்திற்கு முற்பட்டவை. ஆகமங்களே இந்தியக்கண்டத்தில் மெல்ல மெல்லப் பௌத்தக் கருத்துக்களை ஏற்றுக் காலக் கிரமத்தில் பௌத்தத்தையே இந்திய மண்ணில் இருந்து முடிவில் மறைந்து விடுமாறு செய்துள்ளன. பௌத்தத்தை அடிப்படுத்தி அதிலுள்ள சிறப்பான கோட்பாடுகளை இந்து சமயத்தின் முக்கிய பாகமாகச் சேர்த்துக் கொள்வதற்குக் காரணமாக இருந்தது ஆகமப் பண்

பாடுதானே ஒழிய, உபநிடத தத்துவப் பண்பாடு அல்ல''. இது அறிஞர் அனைவரும் மிக்க கவனத்தோடு கருத்தில் கொள்ளத்தக்க சிறப்பு வாய்ந்த முக்கியமான ஒரு கூற்றாகும்.

## வேத பாகங்களும் - ஆகம பாகங்களும்

ஆகமங்களின் நான்கு பாகங்களையும் வேதத்தின் நான்கு பாகங்களோடு பொருத்திச் சொல்வதும் உண்டு. வேதத்தில் மந்திரபாகம் என்று சொல்லுகின்ற தோத்திரபாகம் ஆகமங்களுடைய சரியாபாதத்தோடு ஒப்பிடத்தக்கது. கிரியைகளைச் சொல்லுகின்றன. இவ்வாறு சொல்லியபோதிலும்கூட ஒன்று தெளிவாக உணர வேண்டும். அதாவது ஆகமங்களில் போதிய மந்திரங்கள் உள்ளன. வேத மந்திரங்கள் ஆகமத்திற்கு இன்றியமையாதன அல்ல.

## வேதத்தில் காணும் ஆகமசிவம்

ஆகம வாதிகள் இன்னும் ஒரு படிமேல் சென்று, ஆகமத்தில் பரம்பொருளாகச் சொல்லப்பட்டுள்ள சிவம் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று கூறி, பின்வரும் தொடர்களை எடுத்துக் காட்டுவார்கள்.

ஈசா வாஸ்யம் இதம்சர்வம்
ய: பர; ச மகேச்வர:
சர் வேனை ருத்ர:
அம்பிகா பதயே உமா பதயே
யோவை ருத்ரஸ்ஸ பகவான்யூர் புவஸ்கவ
தஸ்மை நமஸ் தஸ்மைத்வா துஷ்டம்
நியூரஜ்மி யஸ்மை நமஸ் தத்சிவ:
ஹராய ருத்ராய சர்வாய சிவாய பவாய
மகா தேவாய உக்ராய

(இக் கடைசித் தொடரில் குறிப்பிட்டுள்ள எல்லாச் சொற்களும் சிவத்திற்கு ஆகமங்களில் சொல்லப்படும் மந்திரப் பெயர்களாகவும் உள்ளமை நோக்கத்தக்கது).

பசுபதயே ருத்ராய சங்கராய ஈசானாய
சுவாஹா
சிவயே கோப்தயே ய: சிவம் கரஸ்
சர்வம் அந்யத் பரித் பஜ்ய
யதா சர்மவத் ஆகாசம் வேஷ்ட்டஇஷ்
யந்திமான;
ததா சிவம் அவிஞ்ஞாய துக் கஸ்யந்தோ
பவிஷ்யதி

காயத்திரி மந்திரத்தில் ''பர்க்கோதேவஸ்த தீமஹ'' என்ற தொடரில் வருகின்ற பர்க்கசப்தம் சிவத்தைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது.

## உபநிடதத்தில் சிவம்

மேலும் கேனோபநிடதத்தில் உமாதேவியைக் குறிப்பிடும் சந்தர்ப்பமும் சைவ சமயப் பொருள் என்று கருதப்படும். அச் சந்தர்ப்பம் பின்வருவது! ஒரு சமயம் தேவலோகத்தில் அசுரர்களோடு செய்த யுத்தத்தில் பெற்ற வெற்றிக்குக் காரணம் யார் என்பது பற்றித் தேவர்களிடையே பூசல். ஒவ்வொருவரும் நான்தான் வெற்றிக்குக் காரணம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் புத்தி புகட்டுவதற்காக அவர்கள் மத்தியில் ஒரு பெரிய நெடிதுயர்ந்த சோதி ஒன்று தோன்றிற்று. அக்கினியும் வாயுவும் அச் சோதி யார் என்று அறிய முடியவில்லை. இந்திரன் அதை அறிய முற்பட்டபோது அவன் முன்னே இருந்த சோதி மறைந்து, அந்த இடத்தில் மிகவும் அழகுடையவளான இமவான் புத்திரியான உமாதேவி தோன்றினாள்:

ஸ தஸ்மிந்நேவ ஆகாசேஸ்திரியம் ஆஜாகாம
பகுசோப மானாம் உமாம் ஹைமவதீம்

''நீங்கள் பெற்ற வெற்றி பரம்பொருளின் வெற்றியே ஆகும்'' என்று அவள் சொன்னாள் என்பது உபநிடதம். உமாதேவி தோன்றி இந்திரனுக்கு அறிவுண்டாகச் செய்தாள் என்பதனால் சைவசமயத் தத்துவமாகிய திருவருள் சத்தி பதிந்தால்தான் ஞானம் உண்டாகும் என்ற கருத்து இங்கு வெளிப்படக் காண்கின்றோம்.

மற்றொரு குறிப்பும் தரலாம். பண்டைய உபநிடதங்களில் ஒன்று கைவல்யோபநிடதம். இது அத்வைத வேதாந்தத்துக்குரியதென்று அத்வைதிகள் கூறுவார்கள். இதன் ஏழாவது சுலோகம் பின்வருமாறு:

தம் ஆதி மத்யாந்த விஹனம்
ஏகம் விபும்
சிதானந்தம் அருபம் அத்புதம்
உமா ஸஹாயம் பரமேச்வரம்
ப்ரபும் திரிலோசநம்
நீல கண்டம் ப்ரசாந்தம்

இங்குச் சொல்லப்படுவது பிரமமல்ல; பரமேச்வரன். ''அவர் ஆதிமத்திய அந்தம் கடந்தவர். ஒருவர் விபுவாயுள்ளவர். ஞானம் அனந்த வடிவினர். அருவாயுள்ளார். அற்புதர். உமா ஸஹாயர். பரமேச்வரர். பிரபுவாயுள்ளார். திரிலோசனர். நீலகண்டர். பிரசாந்தராயுள்ளார்''. இங்குச் சொல்லப்பட்ட அடைமொழிகள் யாவும் பரமேசுவரனுக்கேயுரிய உருவ அருவ வருணனைகள் என்பது தெளிவு. ஆதலால் பரம்பொருள் சிவம் என்றே கொள்ளப்பெறுகின்றது என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியதில்லை.

நாரத பரிவ்ராஜ கோப நிஷத் என்பது பத்து உபதேசங்கள் அடங்கிய பெரிய உபநிஷத். அதன் எட்டாம் உபதேசம் பிரணவத்தைக் கூறுவது. இதன் இரண்டாவது சுலோகம், '' ஸர்வாகமயஸ்-சிவ: '' என்று கூறுகிறது. இவ்வுபநிடதம் பண்டை உபநிடதங்களில் ஒன்றல்ல என்றாலும், இது சிவன் எல்லா ஆகமங்களின் மயமாயிருக்கிறான் என்று கூறுவது, வேதத்தினுள் ஆகமத்துக்கிருந்த செல்வாக்கை உணர்த்துகிறது.

வேதம் புண்ணிய உலகில் (சுவர்க்கத்தில்) கொண்டு சேர்க்கும்; இது லௌகிகர்களுக்கு ஒத்தது. ஆனால் ஆகமங்கள் மெய்ஞ்ஞான நாட்டமுடையோருக்குரியது; அவர்களுக்குச் சத்திநிபாதம் தந்து சாலோக சாமீப சாரூப்பிய நெறியால் இறுதியான சாயுச்சிய நிலைக்குக் கொண்டு செல்வன என்றும் சொல்லப்படும்.

## சகஸ்ரநாமம் முதலியன :

சிவசக்தி நாமங்களும் ஆகமத்தைப் போற்றியுரைப்பதைக் காணலாம். பிரசித்த மான லலிதாசகஸ்ரநாமத்தில் 290ஆவது நாமம், ''சகலாகம சந்தோக சக்தி சம்புட தி மௌத்திகாயை நம:'' என்பது. ''சகலாக மங்களாலும் செய்யப்பட்ட சம்புடத்தினுள் அடங்கியுள்ள முத்து மூக்குத்தி அணிந்தவள்'' என்பது இதன் பொருள். தேவி அஷ்டோத்தர நாமங்களுள், ''கல்யாண்யை நம'', என்று தொடங்குவது ஒன்று. அதில்''ஆகம ரூபிண்யை நம'' என்ற தொடர் ஒரு நாமமாகும். இதன் பொருள் ''ஆகம வடிவாயுள்ளவள்'' என்பது. சிவமும் சக்தியும் அபின்னமாதலினால், சிவபரம் பொருள் பற்றிய கருத்தே இங்குதேவிக்கும் சொல்லப்படுகிறது. காளிதாசன் இரகுவமி சத்தின் கடவுள் வணக்கமாகச் சொல்லும் தோத்திரப் பாடலும் இங்கு குறிப்பிடத்தகும்.

வாகர்த்தா இவ சம்ப்ருக்தௌ
வாகர்த்தப் ப்ரதி பத்த யே
ஜகத: பிதரௌ வந்தே
பார்வதீ பரமேச்வரௌ

''சொல்லும் பொருளும் போல ஒன்றா யிணைந்து, சகத்துக்குப் பிதா மாதாக்களாக வுள்ள பார்வதி பரமேசுவரர்களை வணங்கு கிறேன்'' என்பது இதன் பொருள்.

சகஸ்ரநாமங்கள் முதலியன வேதங்க ளல்ல. பௌராணிகமே. ஆயினும் அவை ஆக மங்களுக்கு இருந்த முதன்மையையும், பெரு மான் வடிவமே ஆகமங்கள் என்ற கொள்கை யையும் உணர்த்துவது சிந்திக்கத்தக்கது.

வேதாகமங்களையும் சிவபெருமானுடைய பஞ்ச கிருத்தியங்களையும் இணைத்துச் சொல் வதும் ஒரு சைவ மரபு. யசுர்வேதம் சிருட்டி யைக்குறிப்பது, ருக்வேதம் ஸ்திதியைக் குறிப் பது, சாமவேதம் சம்மாரத்தையும், அதர்வவே தம்திரோதானத்தையும், ஆகமங்கள் அனுக்கிர கத்தையும் குறிப்பனஎன்பது அம்மரபு. மேலும், சிவபெருமானின் சத்தியோஜாதம் வாமதேவம், அகோரம், தத்புருஷம் ஆகிய நான்கு முகங் களும் நான்கு வேதங்களையும் தோற்றுவித்தன என்றும், ஊர்த்துவ முகமாகிய ஈசானம் 28 ஆகமங்களையும் அருளிச் செய்தது என்றும் சொல்லப்படும்.

மற்றொரு கருத்தும் சொல்வதுண்டு. சத் தியோசாதமுகம்-லௌகிகம், ஆயுர்வேதம், தண்டநீதி ஆகியவற்றை உணர்த்துவது. வாம தேவம்-வைதிகம், (பூர்வ) மீமாம்சை, நியாயம் வைசேடிகம் ஆகியவற்றை உணர்த்துவது. அகோரமுகம் அத்தியான்மிகம் ; சாங்கியம், பாதஞ்சலம் (யோகம்), வேதாந்தம் (உத்தர மீமாம்சை) ஆகியவற்றை உணர்த்துவது. தத் புருஷமுகம் அதிமார்க்கம்; பாகவதம் காபாலம் மாவிரதம் ஆகிய அகப்புறச் சமயங்களை உணர்த்துவது. ஈசானம்-மாந்திரம். ஆகம மாகிய சித்தாந்த சாத்திரத்தை உணர்த்துவது. இது எல்லாச் சாத்திரங்களும் தரிசனங்களும் சிவபெருமானால் அருளப் பெற்றவையே என்று காட்டும் முயற்சியாகும்.

## அறிவிற்குப் பொருந்துவதே

இவ்வுலகில் உள்ள சூரியன், சந்திரன், பரந்த வானப்பெருவெளி, அங்கு ஒளிரும் எண்ணற்ற விண்மீன்கள், கடல்கள், மேகங்கள், ஓங்கி உயர்ந்த மலைகள், நெருப்பும் காற்றும் போன்ற முதற் பொருள்கள், மற்றும் எத்தனையோ சரம் அசரம் என்னும் இயங்கியல் நிலையியற் பொருள்கள், என்பன வற்றின் இயல்பை எல்லாம் இனிது எண்ணிப் பார்த்தால், கடவுள் ஒருவர் உண்டு என்னும் உணர்வு நமக்குத் திண்ணிதின் உதிக்கும்.

உலகப் படைப்பும் இயற்கையும் எத்துணை வியத்தக்கனவாக இருக்கின்றன! சூரியன் காலையிலும், சந்திரன் மாலையிலும், விண்மீன்கள் இரவிலும், தத்தம் ஒழுங்கு முறைகள் தவறாமல் ஒளி வீசிக் கொண்டு வருகின்றன. பரந்த பெருங்கடலில் நீரை முகந்துகொண்டு, பல இடங்கட்கும் பரவிச் சென்று மேகங்கள் மழைபொழிந்து பயிர்களை வாழ்விக்கின்றன. கடல் தன் எல்லையிற் கடந்து பொங்கி விடா மல் ஒரு வரம்பிற்குள் அடங்கி நிற்கின்றது.

காலம் என்பது, பகலும் இரவுமாக மாறி மாறி வருவதுடன், இளவேனில் முதுவேனில் கார்காலம் குளிர்காலம் முன்பனிக்காலம் பின்பனிக்காலம் எனப் பலவேறு பருவங்களாகவும் அமைந்து, அவ்வக் காலங்களுக்கு ஏற்ற செடிகொடி வகைகளை வளர்த்தும், நிகழ்ச்சிகளைத் தோற்றுவித்தும், காய் கனி பயிர் வகைகளை அளித்தும், உதவி புரிந்து வருகின்றது.

பாம்பு முதலிய நச்சு உயிர்கள், மந்திரம் முதலியனவற்றுக்குக் கட்டுப்பட்டு வசமாகின்றன. உயிர்க்கூட்டங்கள் தம்முடைய இனவளர்ச்சியுற்றுப் பெருகி, வழிவழியே தம் பண்புகள் மாறாமல் விளங்கி வருகின்றன. இங்ஙனமே மரஞ் செடி, கொடி இவைகளில் ஒவ்வொன்றும், தமக்கென ஒவ்வொரு தனித்தனி அமைப்பும் பண்பும் பயனும் பெற்றுத் திகழ்கின்றன.

மக்களில் சிலர், குருடு, செவிடு, ஊமை, முடம் முதலிய குறைபாடுகள் உடையவர்கள் ஆக உள்ளனர். ஒரு சிலர் தீராப் பிணியாளராகவும், மற்றும் சிலர் காண்பதற்கே அருவருப்பை விளைவிக்கும் குரூபிகளாகவும் உள்ளனர். வேறு சிலர் பெருஞ் செல்வராக விளங்குகின்றனர். ஒரு சிலர் வறுமையி லேயே வாடி வதங்குகின்றனர். ஒரு சிலர் பேரறிஞர்களாகத் திகழ்கின்றனர். மற்றும் சிலரோ அறி யாமையிற் கிடந்து உழன்று அழிகின்றனர். சிலர் நல்லொழுக்கம் தலைநிற்கின்றனர். பிறர் சிலரோ, தீயொழுக்கமே கன்றிப் பெரிதும் திரிதந்து உழன்று அலைகின்றனர்.

இங்ஙனம், இப் பரந்த உலகத்தை இனிது நோக்கி ஊன்றி யுணருந்தோறும், இதனைப் படைத்த கடவுள் ஒருவர் உண்டு என நம்புவது, நம்மனோர் அறிவிற்குப் பொருந்துவதேயாகும் என்று ''பஞ்சதிகாரம்'' என்னும் நூலில், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் பாடுகின்றார். —ஆசிரியர்

# உடையும் — நடையும்

"திருமால் நெறிச்செல்வர்"

திரு. உ. வே. ஆர். கண்ணன், B.A., அவர்கள்

மனிதனுக்கு உண்ண உணவைப்போல், உடுக்க உடையும் மிகவும் தேவையானது. ஆடையில்லாதவன் அரைமனிதன் என்பது பழமொழி. ஆடை அணிவதில் அவரவர்களுக்குரிய வசதியைப் பொறுத்தும் சமூகத்தில் அவர்களுக்கு உள்ள அந்தஸ்தைப் பொறுத்தும் வேறுபாடு இருக்கும். அரசில் வேலை பார்ப்பவர்களுக்கு அவரவருடைய பதவியைப் பொறுத்துக் குறிப்பிட்ட மாதிரியான உடைதான் அணிய வேண்டும் என்ற முறையும் உண்டு. ஆக ஒருவருடைய உடையைப் பார்த்தே அவனுடைய அந்தஸ்து, தொழில் என்ன என்பதைப் பார்ப்பவர்கள் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும். ''உடையானது பெரும்பாலும் ஒரு மனிதனின் இயல்பை வெளிப்படுத்தி உணர்த்துகின்றது' ("Apparel oft proclaims the man"– **Shakespeare**) என்பது பழமொழி. அதே மாதிரி உடையைக் கொண்டே இவன் அரசன். அந்தணன், துறவி, பிரம்மசாரி, குடும்பத்தன் என்பதையும் தெரிந்து கொள்ள முடியும்.

இப்படி ஒரு அந்தஸ்தைக் காண்பிக்கும் உடையில் இருப்பவன், அந்தப் பதவிக்குக் குறைவை உண்டாக்கக்கூடிய செயல் எதையும் செய்யமாட்டான். அப்படிச் செய்தால் அது அவனைப் பொதுமக்களுடைய ஏச்சுக்கு உட்படுத்துவதோடு, அவனுடைய உடைக்கான பதவிக்கும் இழுக்கை உண்டாக்கும். உதாரணமாக ஒருவன் துறவி வேடத்தில் இருந்தால், அவன் தன்னுடைய வேடத்துக்குத் தக்கபடி அடக்கத்தையும், அறிவு விவேகம் இவைகளுடன் இறை பக்தியையும் காண்பித்துக் கொண்டால்தான், அது அவனுக்குப் பெருமை கொடுக்கும் அன்றி, அவன் ஒரு கீழ்மையான காரியத்தைச் செய்வானாயின், அது அவனுக்குத் தீமையை விளைவிக்கும் ஆதலின், ஒருவனின் உடையும் நடையும் (ஒழுக்கமும்), கோலமும் சீலமும் ஒத்திருத்தல் வேண்டும். ''வேடநெறி நில்லார் வேடம் பூண்டு என்ன பயன் ?''.

அப்படி துறவி வேடமணிந்தஒருவன், மாறான காரியத்தைச் செய்ததையும், அதற்காக அவன் அனுபவித்த தொல்லைகள் என்ன என்பதையும் திருமங்கையாழ்வார் ஒரு பாசுரத்தில் விளக்குகிறார். துறவிகளுக்கான காவி உடை உடுத்து ஒருவன் வந்தான். ஆனால் அவன் தன்னுடைய உடைக்கேற்றபடி நடந்துகொள்ளாமல், ஒரு பெண்ணின்மேல் ஆசை கொண்டான். அதுவும் மற்றவனுக்கு மனைவியான ஒரு கற்புக்கரசியை. இதைக் கேட்டவர்கள், அடடா, அந்தத் துறவிக்கு இதனால் என்ன தீமை நேர்ந்தது என்று கேட்டார்கள். அதற்கு ஆழ்வார் பதில் சொல்லுகிறார். அவன் என்ன ஆனான் என்று கேட்காதீர்கள். அவன் செய்த தீயசெயலால் அவன், அவனுடைய குடும்பம் இவைகளோடு நில்லாமல் அவனுடைய ஊரே நாசமாகிவிட்டது. சில தீவினைகள், செய்தவனை மாத்திரம் பாதிக்கும். சில அவன் குடும்பத்தையும் பாதிக்கும். இதுபோன்ற பெரிய தீமைகள் அவனோடும் அவன் குடும்பத்தோடும் நில்லாது, அவன் இருந்த ஊருமே அழிவதற்குக் காரணமாக ஆகின்றன. அப்படி அந்த ஊரை நாசம் செய்தது யார் என்று கேட்டால், நம்பி நம்பெருமாள் என்கிறார் ஆழ்வார்.

இதிலிருந்து இந்தக் கதையில் துறவி வேடம் பூண்டவன் இலங்கேசுவரனான இராவணன் என்பதும், அவன் காதல் கொண்டது உலகுக்கெல்லாம் தாயும் கற்புக்கரசியுமான சீதாப் பிராட்டியை என்பதும், அதனால் அவன் இருந்த ஊரான இலங்கையை அழித்து ''இலங்கை பாழாகப் பொருதவன்'' என்றும், ''இலங்கை நீறுஎழச் செற்றபிரான்'' என்றும் கொண்டாடப் பெறுபவன், சக்ரவர்த்தித் திருமகன் ஆகிய இராமன்தான் என்பதும் விளங்கியிருக்கும்.

திருவள்ளூர் என்று இப்போது பிரசித்தமாக இருக்கும் 'திருவெவ்வுள்' என்ற திவ்விய தேசத்தைப் பற்றித் தாம் பாடிய பெரிய திருமொழிப் பதிகத்தில், இந்த வரலாற்றை இசைத்துப் பாடியுள்ளார் திருமங்கையாழ்வார். பாசுரம் இதோ :

காசையாடை மூடியோடிக்
காதல் செய்தானவனூர்

நாசமாக நம்பவல்ல
நம்பி நம்பெருமான்

வேயினன்ன தோள்மடவார்
வெண்ணெயுண்டான் இவனென்று

ஏசநின்ற எம்பெருமான்
எவ்வுள் கிடந்தானே"

இந்தத் திவ்வியதேசத்துப் பெருமாளுக்கு வீரராகவன் என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பதும், இந்த வரலாற்றுக்கு இசைந்ததே. இந்தப் பாசுரத்தில் ஒரு விசேடம் என்னவென்றால் முதலடியில் 'காசையாடை மூடி ஓடி' என்றதனால் இராவணன் துறவிகளுக்குரிய காவி உடையை மாத்திரம் தரித்தானேயன்றித் துறவிக்குரிய மனப்பக்குவம் அவனிடம்இல்லையென்பதை ஆழ்வார் குறிப்பாக உணர்த்தியதாக ஆகிறது. ஆக இவ்வளவில் ஒருவன் தன்னுடைய உடைக்குத் தகுந்த காரியங்களைத்தான் செய்ய வேண்டும் என்பது உறுதியாகிறது.

இந்த மாதிரி உடைக்குப் பொருத்தமில்லாத செயலைச் செய்ய வேண்டிய சந்தர்ப்பம், எம்பெருமானான, திருமகள் கேள்வனான நாராயணனுக்கே ஒரு தடவை ஏற்பட்டிருக்கிறது. அது எப்படி என்பதையும், அதை அவர் எப்படி சமாளித்தார் என்பதையும் இனி பார்ப்போம்.

வைணவத்தில் இறைத் தத்துவம் என்பது மகாலட்சுமி என்று சொல்லப்படும் பெரிய பிராட்டியாரும், நாராயணனும் ஆகிய ஒரு சேர்த்தியே. ஆகையால்தான் அவரை ஸ்ரீமந் நாராயணன் என்று குறிப்பிடுகிறோம். இருவரையும் சேர்த்துத்தான் வணங்க வேண்டும். தனித்தனியாக விரும்பித் துதித்தால் சரியான பலன் கிடைக்காது. இந்த மகாலட்சுமி, நாராயணனை விட்டு ஒருபோதும் பிரிந்திருக்க மாட்டாள். ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்பா'' என்றே, ஆழ்வார் குறிப்பிடுகிறார். சூரியனிடமிருந்து ஒளியை எப்படிப் பிரிக்க முடியாதோ, அப்படி இவர்களை யாரும் பிரிக்கவும் முடியாது. அவர்களும் அப்படிப் பிரிந்து இருக்க மாட்டார்கள். இந்த விபரத்தைச் சீதாபிராட்டியும், இராமனும் ஆகிய இருவரும் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் தாங்களாகவே அருளிச் செய்திருக்கிறார்கள். வால்மீகி இராமாயணத்தில்.

எம்பெருமான் அவதாரம் செய்யும் காலத்திலும், பிராட்டியும் அவனோடு கூடவே அவதரித்து அவதார காரியத்தில் அவனுக்கு உதவிகளைச் செய்து வருகிறாள் என்பது கொள்கை. மீன், ஆமை முதலிய அவதாரங்களில்கூட, பிராட்டியின் அம்சமும் சேர்ந்தே அவதாரம் ஆனதாகப் பெரியோர்களுடைய அபிப்பிராயம். இந்த நிலைக்கு வராக அவதார காலத்தில் எம்பெருமானுக்கு ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டு விட்டது. அந்த அவதாரத்தில் பகவானுடைய குறிக்கோள் என்னவென்றால், மகாபலியின் யாகசாலைக்குச் சென்று அவனுடைய சொத்துக்களை யாசகமாகப் பெற்று வரவேண்டும் என்பதுதான். இப்படி யாசகம் செய்வதற்குச் சௌகர்யமாக ஒருசிறிய பிரம்மசாரியாகச் செல்கிறான். மகாலட்சுமி இல்லாமல் எம்பெருமான் அவதாரம் செய்வதில்லை என்று முன் சொன்னோம். இப்போது பிரம்மசாரி வேடத்திலும் பிராட்டி திருமார்பில் இருந்து கொண்டுதான் இருக்கிறாள். போட்டிருக்கும் வேடமோ பிரம்மசாரி வேடம். இதில் ஒரு பெண்ணையும்கூட தன் உடம்பிலேயே வைத்துக்கொண்டு செல்வது, பிரம்மசரிய வேடத்துக்குப் பொருந்தாது. பார்ப்பவர்களும் ஏளனம் செய்வார்கள். இந்த நிலையில் பிராட்டியைப் பிரிந்திருப்பதில்லை என்ற கொள்கையையும் விடமுடியவில்லை. பிராட்டி இருப்பதை வெளியே காண்பித்தால், பிரம்மச்சாரி வேடம் பலிக்காததோடு, வந்த வேலையும் கெட்டு விடும். இதை எப்படிச் சமாளித்தான் என்பது தான் இதில் மிகவும் முக்கியமானது. பிரம்மசாரிகள் மேலாடையாக அணியும் மான் தோலால் பிராட்டியை மறைத்துக் கொண்டு சென்றானாம் மகாபலியின் யாக சாலைக்கு.

நாராயணனுடையமேன்மைக்குப்பிராட்டி உடன் இருப்பதும் ஒரு அடையாளமாகும். வாமனனாக இருக்கும்போது உன்னுடன் பிராட்டி இருப்பதை நீ மறைத்துக் கொண்டாலும், பிற்பாடு நீ திரிவிக்ரமனாக வளர்ந்து உலகளந்தபோது உன்னுடன் பிராட்டி இருப்பதைக் கண்டுகளித்து உன்னுடைய மேன்மையான நிலையை எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள் என்று, வைணவ ஆசிரிய வள்ளலான வேதாந்த தேசிகன், உலகளந்த பெருமாளைப் பற்றிய தனது துதியில் புகழ்ந்து பேசுகிறார்.

இப்படி வாமனமூர்த்தியானவர், தன்னுடைய திருமார்பில் மகாலட்சுமி இருந்ததை வெளியே தெரியாமல் மறைத்துக் கொண்டதற்கு, மற்றொரு நுணுக்கமான காரணமும் சொல்லலாம். மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை எந்தெந்தப்பக்கம் எல்லாம் திரும்புமோ, அந்தந்தப் பக்கம் எல்லாம், தான் முன்னே தான் முன்னே என்று செல்வங்கள் போட்டி போட்டுக்கொண்டு நிறைந்துவிடுமாம். வாமனன் வந்த வேலையோ மகாபலியினிடம் இருந்த இந்திரனுடைய செல்வத்தை யாசகம் செய்து பறித்துக் கொள்ள. இந்த நிலையில் மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை மகாபலியின் மேல் படுமானால் அவனுக்கு மேன் மேலும் செல்வங்கள் வளருவதோடு, முன் இருந்த செல்வமும் நிலையானதாக அவனிடமே தங்கிவிடும். ஆக வாமனனுடைய குறிக்கோள் நிறைவேற்ற முடியாததாக ஆகிவிடும். இந்தக் காரணத்தைக் கொண்டும், வாமனன் தன் மார்பில் இருந்த மகாலட்சுமியை மறைத்துக் கொண்டான் என்று கொள்வது மிகவும் சுவை நிறைந்தது.

**

# ''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே''

" செந்தமிழ்ச் சிவநெறிச் செல்வர் ''
பேராசிரியர் மறைத்திரு ப. சு. மணியம் அவர்கள், கோவை

அன்பின் ஐந்திணை ஒழுகலாறு கூறுவ தாய் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப்பனுவல், திருச்சிற்றம்பலக் கோவையார் என்பது. அந்நூல் சுட்டும் ஒரு பெரும் பரம் பொருள், ஒருவன் என்னும் ஒருவனாம் சிவபரம் பொருள். அறிவாற் சிவனேஆய மணிவாசகர் அம்பலத்துக் குனிக்கும் ஆளுடைஐயன் மலர் வாயாற் கேட்டு எழுதுமாறு இயற்றிய விழுமிய கடவுள் நலம் சான்றது. அன்பின் வழியாம் சிவநெறியும் அவன் அருட்டுறையும் தெளிவு பெறவும் மனங்கொளவும் விளக்குவது. கோவை திருவாசகம் எனப் பெயர்கொண்டு திருவாசகச் செழுமாமறையுடன் வைத்து எண்ணப்பெறு வது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாவதாக அமைவது. பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக முற்றும் பரிசு காட்டி மாயை மூளையாவாறு அறுப்பது. சிவஞான போதத் தின் ''ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந் தென'' என்னும் எட்டாவது மறைமொழிக்கு இலக்கியமாய் இலங்குவது.

திருவாசகச் செழுமாமறைத் திருவெம் பாவையில், கன்னிமகளிர் உமை அம்மையினை நோக்கி நோன்பு இயற்றக் காண்கின்றோம். ''எம் கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க'' ''எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க'' என நோற்று நின்ற மகளிர், விழைந்த அன்பரை விழைந்தவாறே பெற்று நின்று அரனடிக்கே எப்பணியும் செய்த ஆரா இன்பத்தின்பின் ஒழுக்கத்தினைத் தெளி வுறுத்துவதாய் அமைந்த நுட்பமுடையது கோவையார். களவு கற்பு என்னும் இருவகைக் கைகோள் நெறியில், நானூறு கூற்றுக்களை (துறை) உடையது. அவற்றுள், இரவுக்குறியில் குறைநேர்தல் என்பது ஒரு கூற்று. அது தலை மகள் கூற்றாய் அமைவது.

தோழியினால் ஆகும் பாங்கியிற் கூட்டத் திற்காக அவள் பின் பலகாலும் குறையிரந்து நின்ற தலைமகனது குறையினை ஏன்று கொண்ட தோழி, அதனைத் தலைமகட்கு உணர்த்தும் வகையால் உணர்த்தினாள். உணர்ந்த தலைமகள், தலைமகன் செய்த உதவி சாலப்பெரிது என நினைவுகூர்ந்தும், அவனது ஆற்றாமையினை அறிந்தும் அவன் குறைக்கு உடன்படுவாளாயினள். குறை என்பது இன்றியமையாதது என்னும் பொரு ளது. ''தோழி! அன்று ஒருநாள் என்னைத் தனியே சுனைப்பக்கம் நிறுத்தி நீயும் தோழி யரும் பல்வேறு மலர்கொய்யச் சென்றீர் களல்லவா? செல்ல, யானும் சில பல விளை யாடிச் சுனையாட எண்ணிச் சுனைக்கண் இறங்கினேன். அருவிநீர் எதிர்பாராவகை பெருகிவரச் சுனையில் நீர் மிக்கோங்கியது. யான் கால் இழுக்கி அதன்கண் வீழ்ந்தேனாய் அழுங்கிமுழ்கிச் செல்ல, அங்கு அவ்வமயம் கது மென வந்து தோன்றிய தோன்றல், விரைந்து சுனைக்குட்பாய்ந்து என்னைப் பற்றி எடுத்துக் கரைக்கண் உய்த்து யாதொன்றும் கருதானாய்ச் சென்றான். இருந்தவாற்றான் அவன் ஒரு பெருந்தகையே. முன்னர் யாதேனும் உதவி யான் செய்திருந்தேனா! இல்லையே. ஆதலின் அது செய்யாமற் செய்த உதவியாமன்றே! அதற்கு வையகமும் வானகமும் ஈடாகி விலை போமா? யான் கெடுங்காலைச் செய்த உற்ற நல் உதவியல்லவா? மாணப் பெரிதென மதித் தல் வேண்டாமா? இன்பம் பல நுகரும்அடங்கா இளம்பருவத்தும் நிலையிற்றிரியாதும் உளத்து யாதொன்றும் கருதாதும் சென்றனனே. அவ னல்லனோ குறையிரந்து நிற்கும் இவன். சால் பிற் சிறந்த பேருதவிக்கு இவற்கு என்ன கைம் மாறு காட்டுவேன். சொல்லுவேன். துன்பம் துடைத்தவர் நட்பு எழுமையும் நினையலாகும் விழுமியதன்றோ? துன்பத்துள் துப்பாயார் நட்பினைத் துறத்தலாகுமா? 'மாசற்றார் நட் பினை மறவற்க; துப்பாயார் துப்பினைத் துற வற்க' என்பது மறைமொழியாமே. எழுமை யும் தொடரும் உழுவல் அன்பன்றோ அவர் அன்பு. அப்பெருந்தகை நம்பால் ஏதோ ஒன்று கருதி, ஆற்றாமை உடையர் எனின், யான் சிறியன் என் சொல்லவல்லேன். பெரியதிற் பெரிய பேருதவி புரிந்துளரே. ஆதலின், எண்ணகலாது அவர் கருத்தின்வழி நிற்பதா யினேன்'' என்பதனைக் குறைநேர்ந்த வகை யால் நுண்ணிதின் உணர்த்தினள் தலைமகள். அவள் கூற்றினைச் சிவமாய மணிவாசகர் செம்மொழியாகக் காணலாம்.

ஓங்கு மொருவிடம் உண்டம்
பலத்தும் பருய்யவன்று
தாங்கும் ஒருவன் தடவரை
வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன்
றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கு மவற்கறி யேன்சிறி யேன்
சொல்லும் வாசகமே

உம்பரேயாயினும் ஓங்கி அழன்ற நஞ்சிற்கு அஞ்சி ஓலமிட்டனர். அவரெல்லாம் உய்ய அதனை உண்டு மிடற்றடக்கி அம்பலத்து நின்றாடித் தன் அருள்விளக்கும் ஐயன் பெரு வரையில் அருவி பெருகி ஓடிற்று. சுனையோ புனலால் நிரம்பி ஓங்கிற்று. வீங்கும் சுனை யில் வீழ்ந்து அழுங்கும் தலைவி மூழ்கும் நிலை யினள். அந்நிலையில் விரைந்துவந்து பிடித் தெடுத்துக் கரைக்கண் விடுத்துச் சென்றான் ஒரு தலைமகன். அவன் செயற்கரிய செய்த பெரியன். இறப்பவும் உயர்ந்த பெருமகனுக்கு இறப்பவும் இழிந்த சிறியளாய்ச் சொல்லும் வாசகம் அறியாளாய்த் தன்னைச்சுட்டிக் குறை நேர்கின்றாள் தலைவி. பிறிதோர் இடத்தும் 'மண்டலமே பணியாய் தமியேற்கொரு வாச கமே' என்று கூறுவதும் நினைவில் எழுகின்றது.

ஓங்கிய ஒரு விடத்திற்கு அஞ்சி அடங்கிச் செயலற்றனர் உம்பர். தலைமகளோ நீரால் வீங்கிச் சுனையில் · வீழ்ந்தன்றழுங்கினர். அம்பலவன் தடவரைவாய் வந்த தலைவன் குறிஞ்சி நிலக் கிழவனுமாம். தலைவியைப் பிடித்து எடுத்துக் கரைக்கண் உய்த்த அவன் உணர்வு அம்பலவன் அருள்போலும். அமரர்க்கு நஞ்சு தவிர்த்து அமுதூட்டியவன் அம்பலவன். பிடித்தெடுத்து அழுக்கத்தின் நீக்கிக் கரைக்கண் உய்த்தவன் தலைமகன். கரை-வீட்டுலகமுமாம். 'உக்கரை மல்லற்கரை' என்பன நினைக.

செய்ந்நன்றி அறிதல் என்னும் செம்மனப் பண்பு தலைமகள் உள்ளத்தழுந்தப் பதிந்துள்ளது. அந்நன்றி கோறல், எந்நன்றி கோறலிலும் எவ்விடத்தும் எக்காலத்தும் யாதொன்றாலும் தீர்வில்லாதது. நட்பிற்கு நல்ல ஒருவித்து. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே வாழ்க்கை. அவ்வாழ்வினுக்குத் துணையாய் அமைபவள் இல்லாள். ஆதலின் வாழ்க்கைத்துணை எனப் பெற்றாள்.

> பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வொடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே

என்று கூறும் ஒப்புமை பத்தும் தலைமகற்கு இயைய உடைய தலைமகள் அவள். ஒன்றியுயர்ந்த பாலதாணையிற் கூடிய கூட்டம் பெற்றவள். அவ்வொத்த உணர்வின் கேண்மையே தலைமகன் இம்மையிற் செய்த நன்றியை நினைவுகூருமாறு செய்தது. அவனது ஆற்றாமையினையும் ஆழநினையுமாறு செய்தது. எவ்வகை உதவியையான் செய்யினும், அஃது அவன் செய்த உதவிக்கு ஈடாகாமல்; தினையளவினதேயாம். மெய்ப்பொருள் உணர்ச்சியோடுநோக்கின், பெரிது, பெரிது; அன்பாம் ஈரத்தால் அளப்பரிது. அவன் இரவில் இடர் பலவும் நீந்தி வருதலினும் நான் அவன்பாற் சேறலே நன்று'' என என்ணிஞள் தலைமகள். அவள் வாய்மொழியே மேலைய பாடல்.

**செய்யுள் நலம்:**

ஓங்கும் ஒருவிடம்-மண்ணகமும் விண்ணகமும் மற்றும் பிறவும் ஒருங்கு மடிய ஒரு காலைக்கொருகால் ஓங்காநின்றவிடம். ஒருவிடம்-கதையால் அறியப்பட்டவிடம், வியக்கத்தக்கது ஒப்பில்லாதது என்ற பொருளும் தரும்.

உண்ணுதல் - அருள் உருவாய ஐயன் கண்ணோட்டம் சுட்டியது. அம்பலவனுக்கு உணவு போலும். மன்னுயிர் ஓம்பற்கன்றே கொடு நஞ்சமும் உண்டான். உயிர்களின் வினைப்பயனையும் தாங்கி நீக்குபவன் போலும். உம்பரையெல்லாம் உய்யக்கொண்டதும் கண்ணோட்டமே. மறைநவிலந்தணரும் அதனையேநுவன்று நிற்பர். எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வுயிர்க்கும் எத்தொழிலுக்கும் தன்னருள் உண்டு என்பதனை, அம்பலத்து ஆடிநின்று தாங்கிக் காட்டுகின்றானும், ஒருவிடம் உண்டானும் ஒருவனே. அவனே ஒருவன் என்னும்ஒருவன். மேலுரைத்த ஒருமைப்பொருள் நினைவு கொள்ளலாம். அவனது தடவரை - குறிஞ்சியின் ஒழுகலாறு குறிப்பது. அவ்வொழுக்கம் திருவருள் வழியது. ''என்னறிவால் வந்ததன்று இது முன்னும்; இன்னும் முயன்றால் மன்நெறிதந்தது இருந்தன்று தெய்வம் வருந்தல் நெஞ்சே'' என்னும் மெய்ம்மொழியும் நினைவுகூரலாம். தழங்கும் அருவி இன்னிசையொடு முழங்கி நீர்பெருகி வருவது. தடவரை மாரிக்கண் உண்டநீரைக் கோடைக்கண் உமிழும் பெருநலத்தது. ஓடுதற்கு இடமும் வளைவும் உடையது என்னும் குறிப்பினதாம். நீர்ப்பெருக்கும் ஒலியும் அமைவதற்குத் தடவரை காரணம் ''தழங்கும் அருவி எம்சீறூர் பெரும'' என்பது நினைவெழும். தழங்கும் அருவியால் ஒருகாலைக்கொருகால் நீர்வீங்கும் சுனை என்பது, வீங்கும் சுனைப்புனல் என்பதன் குறிப்பு. அன்று வீழ்ந்தழுங்க - அன்று என்பது தானும் தோழியும் அறிய நின்ற முன்னொருநாள். அன்றொருநாள் ஒருபொழுதெனக் கதைபோன்று கூறியதாம். வீழ்ந்தழுங்க என்பது, காலத்தினாற் செய்த உதவி கருதியது. துணையாதற்குரிய தோழியும் ஆயமும் இல்லாத போழ்து உற்றுவந்து, தழுவினான். தானே வந்து பிடித்தெடுத்து அவ்வழுக்கத்தினின்றும் நீக்கி வாங்கிக் கரைக்கண் உய்த்துச் சென்றாண். யாதொன்றும் கருதிலன்-கூறிலன்-செய்திலன். அவர் பெருந்தகைமை இருந்தவாறு என்னே என வியந்து,'உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பதும், அவன் எவ்வகையாலும் தாழ்விலாது உயர்ந்த பெருந்தகைத் தலைமகன் என்பதும் புலப்படப்''பிடித்தெடுத்து வாங்கும் அவற்கு'' என்றார். ''நம் இடர்தவிர்த்த ஏந்தல், இரவுக்குறி கருதி இரவு நேரத்து இடர்பல நீந்தி வருதலை உடன்படலாமா? நாமே சென்று அவரை அடைவோம் என்று உளம்கெழுமிய அன்பாற் செய்ந்நன்றி மறவாத நல்லுணர்வோடு கூறிநின்றனள் தலைவி. தலைமகள் வழங்கா வழியில் வருதலால் யான்படும் இடுக்கண்ணினையும் அவரே தீர்த்தல் வேண்டும். அன்றும் தாமே வந்து இடுக்கண் களைந்தார் அவரல்லரோ? ஆதலின் அஃது அவர் கடப்பாடுமாகும்.

விடமுண்ட அம்பலவன் தடவரையாதலால், அங்கு எய்திய அவரும் அவ்வருளியல் பினராவர் என்ற குறிப்பும் கொள்ளலாம். ''அணியார் கயிலை மயில்காள்'' என்ற தொடர்ப் பொருட்குறிப்பும் நினைவுக்கு வரும்.

அழகிய சிற்றம்பலமுடையான் தன் திருக்கையால் எழுதியதாலான், கோவையார் நுதலும் நுண்பொருள், ஞானயோக நுண்பொருளும் காட்டும் கருத்தினது. திருக்கோவையார் உண்மையும், களவியல் உரையும் பேரின்பப் பொருளை நன்கு தெளித்துக் காட்டும். பேராசிரியரும் அவ்வுண்மை உணர்ந்தே, ''பிறவிக் குட்டத்து யான்விழுந்து கெடப்புகத் தாமே வந்து பிடித்தெடுத்து அதனினின்றும் வாங்கிய பேருதவியார்க்குச் சிறியேனாகிய யான் சொல்வதறியேன் என வேறும் ஒரு பொருள் தோன்றியவாறு காண்க'' என்று உண்மை விளக்கம் கூறுவாராயினர். 'மடுத்தான் குடைந்தன்றழுகத் தழீஇ மகிழ்வுற்று, எடுத்தாற் கினியனவே இனியாவன எம்மனைக்கே' என்பதும் கருத்திலெழும். இன்னும் சில இதுபோல் உண்டு. இலக்கண நூலுடையார் இதனைப் 'புனல்தரு புணர்ச்சி' என்பர். பொதுமறை கூறும் செய்ந்நன்றியறிதற் பண்பெல்லாம் இச் செய்யுளில் செறிந்தினிதிருக்கக் கண்டு மகிழலாம். ***

# திவ்வியப் பிரபந்த சார சங்கிரகம்

மகாவித்துவான்

திரு. பி. ப. அண்ணங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்

(1) திருப்பல்லாண்டைக் கற்று, அதற்கு ஏற்ப ஒழுக வேண்டிய விதம், யாதெனில் அர்ச்சாவதாரங்களில் எம்பெருமானைச் சேவிக்கும்போது அற்ப பலன்களை விரும்பாமல், மனப்பூர்வமாக, அவனுக்கு மங்களாசாசனம் பண்ணவேணும்; பண்ணினால் நமக்கு நாம் விரும்பியவை அனைத்தும் தன்னடையே சித்திக்கும்.

(2) பெரியாழ்வார் திருமொழிக்குச் சாரமாக அநுசந்திக்க வேண்டுவது ''உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன்; இனிப் போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை, நின்சாயை அழிவு கண்டாய் ''(5-3-3) என்கிற பாசுரம். இந்த நம்பிக்கையை மிகவும் திடமாகக் கொண்டு கடைப்பிடித்து ஒழுக வேணும்.

(3) திருப்பாவையில் ''உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது'' (28) என்னும்படி, ஒழிக்க ஒழியாத பகவத் சம்பந்தத்தை நன்கு உணர்வதற்கு மேற்படக் கர்த்தவ்வியம் ஏதும் இல்லை நமக்கு.

(4) நாச்சியார் திருமொழிக்குச் சாரமாக ''வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை, வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே'' (10-10) என்கிற பாட்டை அநுசந்தித்து, ஆசார்ய சம்பந்தத்தையே தஞ்சமாகக் கொண்டிருக்கும் அத்தனையே சொரூப அனுரூபம். இதுவே சரம பர்வ நிஷ்டை என்பது.

(5) பெருமாள் திருமொழிக்குச் சாரமாகத் ''தருதுயரம் தடாயேல்'' (5) என்கிற பதிகத்தை அநுசந்தித்து, அதில் பாசுரந்தோறும் காட்டியுள்ள திருட்டாந்தங்களைச் சிந்தனை செய்து, அநந்யகதித்வம் குலையாதபடி ஒழுக வேண்டியது முக்கியம்.

(6) திருச்சந்த விருத்தத்திற்குச் சாரமாக ''நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே'' (101) என்று எம்பெருமான் திருவடிகளிலே பிரார்த்திக்க வேண்டும். நமக்கு விளையும் நன்மைகள் அவனடியாக விளைந்தவை என்று தெளிந்திருக்க வேண்டும்.

(7) திருமாலையில் ''உன் கடைத்தலை இருந்து வாழும் சோம்பரை உகத்தி போலும் சூழ்புனல் அரங்கத்தானே'' (38) என்ற பாசுரத்தைச் சிக்கெனக் கொண்டு, பகவத் சந்நிதியே கதியாக ஒழுகவேணும். அர்ச்சாவதார ஈடுபாடும் பக்தியும் உண்டாகவேணும்.

(8) திருப்பள்ளியெழுச்சியில், 'உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் பள்ளி எழுந்தருளாயே'' (10) என்ற பாசுரத்தைப் பெரிய சாத்திர அர்த்தமாகக் கொண்டு, அடியார்க்கு ஆட்பட்டிருக்கையையே சொரூப அநுரூபம் என்று உறுதி கொண்டிருக்கவேணும்.

(9) அமலன் ஆதிபிரானில் ''அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்'' (1) என்ற சந்தையைக் கொண்டு, அவ்வுறுதியை மேன்மேலும் வளரச் செய்து கொண்டு போகவேணும்.

(10) கண்ணிநுண் சிறுத்தாம்பில், ''ஆயிரம் இன்தமிழ் பாடினான் அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே'' (8) என்றதைச் சாரமாகக் கொண்டு, எம்பெருமான் அருளைக் காட்டிலும் ஆழ்வாருடைய திருவருளே மேம்பட்டது என்று சிந்தித்து இருக்கவேணும்.

(11) பெரிய திருமொழி ஆயிரத்தையும் விட்டிட்டு ''எங்கள் கதியே! இராமாநுச முனியே! சங்கை கெடுத்து ஆண்ட தவராசா! பொங்குபுகழ் மங்கையர்கோன் ஈந்த மறை ஆயிரம் அனைத்தும், தங்கும் மனம் நீஎனக்குத் தா!'' என்கிற தனியனையே அநுசந்தித்து இருக்க வேண்டும். எம்பெருமானார் திருவருளினால்தான் பெரிய திருமொழி முழுவதும் மனப்பாடம் ஆகும்.

(12) திருக்குறுந்தாண்டகத்தில் ''உலகம் ஏத்தும் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சி பேர்மல்லை என்று மண்டினார் உய்யல் அல்லால், மற்றையார்க்கு உய்யலாமே'' (19) என்ற பாசுரத்தைச் சாரமாகக் கொண்டு உகந்தருளின நிலங்களிலே ஈடுபாடு மிகுந்தவராய், குணானுபவ கைங்கரியங்களே போது போக்காய் இருக்க வேணும்.

(13) திருநெடுந்தாண்டகத்தில் ''என்னில் அங்கமெல்லாம் வந்து இன்பம் எய்த எப்பொழுதும் நினைந்துருகி இருப்பன் நானே'' (28) என்றபடி, எம்பெருமானுடைய சித்தனையே எப்பொழுதும் கொண்டு நினைந்து உருகி இருப்பதற்கு மேற்படி, ஒரு புருஷார்த்தமும் இல்லை என்று துணிந்திருக்கவேணும்.

(14) பொய்கையாழ்வாருடைய திருவந்தாதியில் ''பழுதே பலபகலும் போயின என்று அஞ்சி அழுதேன்'' (16) என்கிற பாசுரத்தைச் சாரமாகக் கொண்டு, ஒருகண நேரமும் பழுதுபட்டு வீணாகாமல், பகவத் பாகவத ஆசார்ய குணசிந்தனையே போது போக்காய் இருக்கவேணும்.

(15) பூதத்தாழ்வாருடைய திருவந்தாதியில் ''வனத்திடரை ஏரியாம் வண்ணம் இயற்றும் இதுவல்லால், மாரி யார்பெய்கிற்பார்?'' (16) என்கிற பாசுரத்தைச் சாரமாகக் கொண்டு, நாம் செய்யும் செய்கைகளிலே உபாயத்துவபுத்தி குலைந்திருக்கவேணும்.

(16) பேயாழ்வாருடைய திருவந்தாதியில் ''மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு''(14) என்கிற பாசுரத்தைச் சாரமாகக் கொண்டு விஷயாந்தர வைராக்கியப் பயிற்சி நிகழவேணும்.

(17) நான்முகன் திருவந்தாதியில் ''தெரிந்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன்போது'' (63) என்கிற பாசுரத்தைச் சாரமாகக் கொண்டு அவ்விதமாகவே வாசித்தும் பூசித்தும் போது போக்கி வரல்வேண்டும்.

(18) திருவிருத்தத்தில் ''தொல்லை மாலைக் கண்ணாரக் கண்டு கழிவதோர் காதல் உற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே'' (97) என்ற பாசுரத்தை நாள்தோறும் நித்தியானு சந்தானம் பண்ணியிருக்க வேண்டும்.

(19) திருவாசிரியத்தில் ''மாயாப் பெருவிறல் உலகம் மூன்றினொடு நல்வீடு பெறினும், கொள்வது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே?''(2) என்றபடி இருக்கஆசைப் பட வேண்டும்.

(20) பெரிய திருவந்தாதியில் ''சீர் கலந்த சொல்நினைந்து போக்காரேல், என் நினைந்து? போக்குவர் இப்போது''(86) என்றபடி, போதைப்போக்குவதற்குப் பகவத்குணாநுபவம் ஒழிய வேறொரு உபாயம் இல்லை என்று துணிந்திருக்க வேணும்.

(21) திருவெழுகூற்றிருக்கையில் ''அறுதொழில் அந்தணர் வணங்கும் தன்மையை''- ''நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை'' என்கிற சந்தைகளை அனுசந்திப்பதற்குப் பலன், அவரவர் தத்தமக்குரிய ஒழுக்கநெறி முறைகள் வழுவாமை இருப்பதுதான் என்று கொண்டிருக்கவேணும்.

(22) சிறிய பெரிய திருமடல்களைச் சிந்தித்து, சொரூப விருத்தமாக மடலூர்ந்தாகிலும் எம்பெருமானைப் பெற ஆசைப்பட்டு, ''நான் அவனைக் காரார் திருமேனி காணும் அளவும் போய்ச் சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே...'' என்று திவ்விய தேசங்கள் தோறும் புக்குப் புறப்படுவதே பேறு என்று உறுதிகொண்டு இருக்கவேணும். மடலூர்வது திவ்வியதேச அநுபவம் பெறுவதற்கே யாகும்.

(23) திருவாய்மொழி ஆயிரத்தில் புகுவதற்கு முன்னே ''ஏய்ந்த பெருங் கீர்த்தி இராமாநுச முனிவன், வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன், ஆய்ந்தபெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத உள்ளம் பெற'' என்று அனுசந்தித்து ''மிக்க இறைநிலையும், மெய்யாம் உயிர்நிலையும், தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும்குருகையர்கோன் யாழின்இசை வேதத்து இயல்'' என்று, அநுசந்தித்து இருக்கும் அத்தனையே போதும். ''உண்டோ? திருவாய்மொழிக்கு ஒப்பது ஓர் கலைதான்.''

(24) இராமானுச நூற்றந்தாதியில் ''இன்புற்ற சீலத்து இராமாநுச! உன் தொண்டர்கட்கே அன்புற்று இருக்கும்படி என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே'' (107) என்ற ஓர் பாசுரத்தின் அநுசந்தானமே தலைசிறந்து நிற்கவேணும்.

(25) மணவாள மாமுனிகள் அருளிச்செய்த உபதேச ரத்தினமாலையில் ''அன்ன புகழ் முடும்பை அண்ணல் உலகாசிரியன்'' என்று தொடங்கி (53-59) ஏழுபாட்டுக்களால் வெளியிட்டு அருளின சீர்வசனபூடண திவ்விய சாத்திரப் பெருமையை நாடோறும் சிந்தித்திருப்பதே திருமால்நெறி அன்பர்களுக்குத் தஞ்சம் ஆகும். ''எல்லார்க்கும் அண்டாதது அன்றோ அது?''

(26) மணவாள மாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் எம்பெருமானார்க்குத் திருநாள் பாட்டு அருளிச் செய்கையில் ''ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும், வாழ்வானநாள் நமக்குச் சித்திரையில் செய்ய திருவாதிரை'' என்று அருளிச் செய்தார். மணவாள மாமுனிகளைப் பற்றிப் பேசவேண்டில் ''ஆழ்வாரும் ஆரியரும் அவதரித்த நாள்கள் தனில் வாசா மகோசரநாள் ஐப்பசியில் திருமூலம்'' என்று அனுசந்திக்கவேணும். ''அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்களுக்குச் சொல்லும் பொருளும் தொகுத்துரைத்த நல்ல மணவாள மாமுனிவன் திருவருள் கண்டீர்! இவ்வுலகினில் மிக்கதே'' என்றே அனுசந்திப்பர் அறிவிற் சிறந்த பெரியோர்கள்.

# அறத்தின் பெருமை

'' அருள்மொழியரசு ''

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

அறமாவது, நீதி நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். திருவள்ளுவர், பூதஞ்சேந்தனார், கணிமேதாவியார், குமரகுருபரர் முதலிய ஆன்றோர்களால் செய்தற்பாலன இன்னவென்று வரையறுக்கப் பட்டதே அறமாகும். அஃது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

(1) ஒழுக்கமாவது, அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அந்த அந்த நிலைக்கு ஓதிய அறங்களின் வழுவாது ஒழுகுதல்.

(2) வழக்காவ்து ஒரு பொருளைத் தனித்தனியே எனதென தென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறுபட்டு,அப்பொருள் மேற்செல்லுவது. அது கடன் கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

(3) தண்டமாவது, அவ்வொழுக்க நெறியினும் வழக்கு நெறியினும் வழீஇயினாரை அந்நெறி நிறுத்துதற்பொருட்டு ஒப்பநாடி அதற்குத்தக ஒறுத்தல்.

இவற்றுள் வழக்கும் தண்டமும், உலகநெறி நிறுத்துதற் பயத்தவாவதல்லது ஒழுக்கம்போல் உயிர்க்கு உறுதிசெய்யாது. ஆதலால்உயிர்க்கு உறுதிபயக்கும் அவ்வொழுக்கத்தையே அறமென ஆன்றோர் வலியுறுத்தினர். கற்பிற் சிறந்த இல்லாளுடன் மனமொருமித்திருந்து செல்விருந்தோம்பி, வருவிருந்து நோக்கித் தருமங்களை மேற்கொண்டு ஒழுகுவதே சிறந்த அறமாகும். இதனாலன்றோ அறத்தின்நுட்பத்தை நன்கு நுணுகி ஆராய்ந்து உலகினருக்கு அறிவுறுத்தவந்த தெய்வப்புலவராந் திருவள்ளுவர் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்று திருவாய்மலர்ந்தருளினார்.

இங்ஙனம் இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டால் பொய் வஞ்சனை களவு முதலிய தீவினைகளை யொழித்து நல்வழியில் பொருளையீட்டி, பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்களில் நின்ற இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணையாக இருந்து உதவி செய்தல் வேண்டும். இதுவேயுமன்றித் தென்புலத்தார் தேவர் விருந்தினர் சுற்றத்தார் ஆகிய நால்வர்களுக்கும் பகுத்துக் கொடுத்துப் பின் எஞ்சி நின்றதை ஒருவன் உண்டு வருவானேயானால் அவனுடைய மரபு இந்நிலவுலகில் அழிவுறாது எப்போது நிலைபெற்று நிற்கும்.

பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின், வாழ்க்கை

வழியஞ்ச லெஞ்ஞான்று மில்

அறத்தின் வழிநிற்பான் எக்காலத்தும் அழியாத புகழையும் இன்பவீட்டையும் எளிதிற் பெறுவன். இதனையுன்னியே நீதிநூல் கூற வந்த ஔவைப்பிராட்டியார் முதலாவதாக 'அறஞ்செய விரும்பு' என்றனர். இல்லறமார்க்கத்தின் முதல் அங்கமாவது பிறஉயிர்க்கு இடர் புரியாமையேயாம். எல்லா உயிர்களுக்கும் நன்மையே செய்தல் வேண்டும். அருட்பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க சுவாமிகள் இறைவனிடத்தில் ஒரு வரம் வேண்டுமென்று கேட்கிறார். என்ன வரத்தை விரும்பினார்? தனக்கு முத்திவீடு வேண்டுமென்று விரும்பினாரில்லை. சித்தி வேண்டும் என்று கேட்டாரில்லை.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டு

அருள்புரிதல் வேண்டும்

ஆருயிர்கட் கெல்லாம் நான்

அன்புசெயல் வேண்டும்''

அன்பர்களே! நன்கு நோக்குங்கள். இராமலிங்க அடிகளுடைய உள்ளத்தில் கருணை ஊற்றெடுத்துத் ததும்புகிறது. விரதங்களுக் கெல்லாம் சிறந்த விரதம் கொல்லா விரதமேயாம். அகிம்சா தருமமே மிகமேலான அறமென்று அறநூல்கள் முழங்குகின்றன. தாயுமானவரும் 'கொல்லாமை யெத்தனை குணக் கேட்டை நீக்கும்' என்றருளியிருப்பதையும் உய்த்துணர்க. இக்கொல்லாமையே அறவினை

யென்றதோடமையாது உயிர்க்கொலை யொன்றே மற்ற பாவச் செய்கைகள் எல்லா வற்றையுந் தரும் என்றனர் பொய்யில்புலவர்.

அறவினை யாதெனிற் கொல்லாமை, கோறல்

பிறவினை யெல்லாந் தரும்

இத்தகைய அறத்தின் பெருமையை யுணர்ந்து அறஞ்செய்ய எண்ணுவான் ஒருவன், யாம் இப்பொழுது இளையமாகலின் இறக்கும் ஞான்று செய்துமெனக் கருதாது, எக்கால் தருமசிந்தை யுண்டாயிற்றோ அத்தருணமே அறம் புரிய வேண்டும். அங்ஙனம் செய்த அறம் இவ்வுடம்பினின்று உயிர் பிரிகின்ற காலத்தும் பிரியாது நம்முடன் வந்து மறுமைக் கும் உதவி செய்யும்.

கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்ற அறுசுவையால் அமைந்தஉணவுகளைப் பரிசாரகர் பலரிருந்தும் இல்லாளே அன்புகூர்ந்து பல இன்சொல் கூறி வேண்டி உண்பிக்கையில், ஒருவகை யுண்டியில் ஒரு கவளமேயன்றி மற்றொன்றை நீக்கிப் புசித்த அத்துணைப் பெருஞ் செல்வராயிருந்த பெருமக்களும்,ஒரு காலத்தில் தரித்திரர்களாகி, வேறோரிடத்திற் போய்க் கூழையிரந்துஉண் பார்கள் என்னில், செல்வம் நிலைத்திருப்ப தாக எண்ணி அதனைக் காப்பாற்றத் தக்க தன்று.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லாள் ஊட்ட

மறுசிகை நீக்கியுண் டாரும்-வறிஞராய்ச்

சென்றிரப்ப ரோரிடத்திற் கூழெனிற்
செல்வமொன்

றுண்டாக வைக்கற்பாற் றன்று.

—நாலடியார்.

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்

நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்

—அதிவீரராமர்

என்று செல்வ நிலையாமையைக் குறித்து ஆன் றோர் கூறிய அமுத மொழிகளை உன்னிச் செல்வம் உள்ளபோதே பகிர்ந்தளித்துப் பல் லோரோடும் உண்டு பரகதிக்கு வழிதேட வேண்டும். இங்ஙனமின்றி நாளைக்கு அறஞ் செய்வோம்; அடுத்த ஆண்டில் வருகின்ற தைப்பூசத் திருநாளன்று அன்னதானஞ் செய் வோம் என்று எண்ணுவானேயானால், அவன் அதுகாறும் உயிருடன் இருப்பது நிச்சயமாகு மாகுமோ? மறுகணமே மாளினும் மாள்வன். பின்புறத்திலேயே கூற்றுவன் நிற்கிறான்.அவன் எந்த நிமிடத்தில் உயிரைப் பற்றுவானோ தெரியாது? யாக்கையோ நிலையற்றது; நீர் மேற்குமிழிக்கு நிகரானது. ''இன்றைக்கோ நாளைக்கோ இன்னும் அரை நாழிகைக்கோ என்றைக்கோ ஆவியிழப்பு'' என்ற முதுமொழி களை நினைந்து தீயவைகளை விட்டு இயன்ற அளவில் தருமத்தைப் புரிதல் வேண்டும். இதனையே நம் அருணகிரியாரும் ''இன்றைக் கன்றைக்கென நாடாது இடுக கடிது' என்று உபதேசித்தனர். கிள்ளியெடுக்கும் சிறிய அள வினதாகிய ஓர் ஆலமரத்தின் விதையானது மிகவும் ஓங்கி வளர்ந்து பல கிளைகளுடன் தழைத்து நின்று பெரிதும் நிழலைத் தருவது போல், தக்கார் கைப்பட்ட அறமானது அற்ப மாயினும், ஆகாயமும் அற்பமாகும்படி மிகவும் வளர்ச்சியுறும்.

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி

இறப்ப நிழற்பயந் தாஅங்-கறப்பயனும்

தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்

வான்சிறிதாப் போர்த்து விடும்

—நாலடியார்

''நொய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்''

என்ற அருணகிரிப் பெருந்தகையின் அமுத மொழியையுங் காண்க. தக்கார் தகாதவர் என்று பகுத்தறிந்து ஈவதே தானம் எனப்படும். அங்ஙனமின்றி வறியராய் வந்து ஏற்றார் யாவராயினும் இன்னார் இனியார் என்று நோக்காது ஈதலே தருமம் எனப்படும். தருமம் புரியும் ஆற்றலில்லாதார் தமக்கு எவ்வளவு சக்தியுண்டோ அவ்வளவாவது கரவாதளித்தல் வேண்டும். இதனை நோக்கியே நம் மூதாட்டி யார், 'இயல்வது கரவேல்' என்றனர். அதுவும் செய்யச் சக்தியில்லை என்னில், பிறர் தருமம் புரியுங்கால் குறுக்கே விழுந்து எதற்காக இப்படி தருமம் புரிகிறாய்? சிறிது கொடுத்தால் போதாதோ? என்று தடுக்காமலிருந்தாலே, போதும்.அதுவே தருமம் புரிந்தது போலாகும். இதுபற்றியே ஔவைப் பிராட்டியார் 'இயல் வது கரவேல்' என்று கூறினதோடு அமையாது, அடுத்தாற்போல் 'ஈவது விலக்கேல்' என்றனர். இதனைத் திருவள்ளுவரும்,

'கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பது

முண்பது மின்றிக் கெடும்' என்றார்.

அங்ஙனமாயின் நான் ஒருவரையுந்தருமம் புரியுங்கால் தடுப்பதில்லை; அதுவேபோதும் எனத் தகுதியுடையான் ஒருவன் எண்ணி வாளா கிடத்தல் கூடாதென 'ஐயமிட்டுண்' என்றும் உபதேசித்தனர். இங்ஙனம் நமக்கு அறமார்க்கத்தின் பொன்மொழியை வற் புறுத்திக் கூறியருளிய அப்பெரியார்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யவல்லேம்? 'குன்றிற் பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கை' என்று நம் அருணகிரிநாதசுவாமிகள் அருளியபடி, நம்முடைய வருவாயில் ஒரு சிறிது பாகமாவது ஏழைகளுக்கென்று ஒதுக்கி வைத்து அதனை அவர்களுக்கு அன்புடனீந்து மறுமைக்கு மாறா நலனைத் தேடிக் கொள்ளல் வேண்டும்.

கடவுள் அறத்தின் வடிவமாக விளங்குகிறார். சிவபெருமானுக்கு 'அறவன்' என்றே ஒரு திருநாமம் உண்டு. நமது காரைக்கால் அம்மையார் கயிலாயவரை சென்று கண்ணுதற் கடவுளைக் கண்டுகளித்து வரங்கேட்குங்கால் 'அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க' என்றார். சிவபெருமானுடைய ஊர்தியாகிய இடபம் அறத்தின் வடிவு; தருமவிடை என்று அதற்குப் பெயர். அத்தகைய அறவடிவுடைய ஆண்டவனையடைதற்கு அறத்தினை மறவாது உஞற்றுதல் வேண்டும். 'அறனை மறவேல்' என்ற திருவாக்கையும் உற்று நோக்குக. இத் தருமமே எல்லா நலன்களையும் தந்து இறைவன் திருவடியிற் சேர்க்கும்.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியும் அணையுமாங்கவை
வருவழித் தவமெனு மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர் சிவனைச் சேருமால்

—கந்தபுராணம்

## "தமிழ்ஞான சம்பந்தன்"

எந்தஒரு சான்றோரும் இனிதுதம்மைச்
சுட்டிக்கொண் டிராத வண்ணம்
சந்தமிகத் "**தமிழ்ஞான சம்பந்தன்**"
என்றுதம்மைச் சாற்றிக் கொண்டும்,
அந்தமில்பல் அடைமொழியால் அருந்தமிழைப்
புகழ்ந்துரைத்தும், அளப்பில் தொண்டு
செந்தமிழ்க்குச் செய்துயர்ந்த திருஞான
சம்பந்தர் சீர்த்தி வாழ்க!

—ந. ரா. முருகவேள்

## "தமிழகக் காப்பியம்"

எத்தனையோ காப்பியங்கள் இன்றமிழில்
இருந்தாலும், அவைகள் எல்லாம்
வித்தகஞ்சேர் **தமிழ்க்காப்பி யங்கள்**என்றே
விளம்பலுறும்; வியக்கத் தக்க
பத்திநெறி இலக்கியமாம் **பெரியபுரா
ணம்**அஃதொன்றே, பண்பார்ந் தோங்கி
மெய்த்திறஞ்சேர் **தமிழகக்காப் பியம்**எனும்சீர்
வியன்பெருமை விளங்கி நிற்கும்!

—ந. ரா. முருகவேள்

# அரும்பெருந் துறவி அப்பர் அடிகள்

டாக்டர் திரு அ. மா. பரிமணம், M.A., M.Litt., Ph.D., தஞ்சாவூர்.

சைவ சமய குரவர்களின் வயதினைக் குறிபிட்டுக் பாட்டும் ஒரு பாடல், அப்பரடிகள் நிலவுலகில் வாழ்ந்தகாலம், எண்பத்தொன்று ஆண்டுகள் என்று கூறுகின்றது. அடிகள் தம் இளமைக்காலத்தில் 'சமயங்களின் நல்லாறு' தெரிந்துணர வேண்டும் என்று எழுந்த வேட்கையால் தொடங்கிய சமயவாழ்வு ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என உரைத்து, நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, அண்ணலார் திருவடிக்கீழ் அமர்ந்திருத்தலோடு நிறைவு பெற்றது. அடிகளின் நெடிய வாழ்வில் ஏற்பட்ட கடுமையான சோதனைகளில் எல்லாம் அவர் தம் சித்தம் மாறுபடாது, துறவுநிலை பேணிநின்ற அருமை குறிப்பிடத்தக்கதாகும்.

அடிகளின் இறுதிக்காலத்தில் அவரை ஆட்கொள்ள விரும்பிய இறைவன்,அவர்தம் பற்றற்ற தன்மையினை உலகவர்க்கு உணர்த்தும் பாங்கில், சில சோதனைகளைப் புரிகின்றார். அடிகளின் உழவாரப்படை பதியும் இடங்களில் எல்லாம், பொன்னினொடு நவமணிகள் பொலிந்து இலங்க அருள் செய்தார். பருக்கைக் கற்களோடு ஒப்ப மதித்து, அவற்றை உழவாரந் தனில் ஏந்தி, வம்பலர் மென் பூங்கமல வாவியினில், அடிகள் எறிகின்றார். அடுத்து, வானவில் வந்து இறங்கியது போல் தேவமாதர்கள் அடிகள் முன்தோன்றி, பானல் நெடுங் கண்வெளி பரப்பி இசைபாடி ஆடி மயக்குவார் ஆயினர். அவர்தம் ஆடல் பாடல்களிலும், அழகு மயக்குகளிலும், சித்தநிலை திரியாது செய்பணியின் தலை நின்று, ''பொய்ம் மாயப் பெருங் கடலுள் புலம்பா நின்ற புண்ணியங்காள்! கிடந்துதான்'' என்றுரைத்து, வென்று நின்றார்.

அடிகள் புறச் சமயம் புகுந்திருந்தபோதும் துறவுபூண்டு தவம் பெருக்கும் தருமசேனராகவே திகழ்ந்தார். சமண் சமயம் புகுந்த நிலையில் மணந்திருப்பாராயின், துறந்தவர்க்கே சமயத்தலைமை நல்கும் அச் சமயத்தின் சமய குரவராய், தருமசேனராய்ப் பலகாலம் இருந்திருக்க இயலாது. பெற்றவர்களோடு சைவ சமயத்திலிருந்தபோதும், சமணம் புகுந்து மீண்ட பின்னரும் அப்பரடிகள் தூய துறவியாகவே வாழ்ந்துள்ளார்கள்.

அடிகள் மணவாழ்க்கையில் ஈடுபட்டுப் பின்னரே துறவு பூண்டனர் என்ற கருத்தினைச் சில அறிஞர்கள் ஆராய்ச்சி என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்கள். மணவாழ்விற்குப்பின் துறவு கொள்வதைச் சைவசமயம் வெறுக்கவில்லை என்றாலும், சிலர் கூறுவதுபோல அடிகள் மணந்து வாழ்ந்தவர் ஆகார் என்பதனைக் கண்டு காட்டுவது கடமையாகின்றது.

அடிகள் மணவாழ்க்கை கொண்டிருந்தவரா என்பதனை ஆராயுமுன்னர், அவர் மணந்து கொண்டவரே என்று கூறுகின்றவர்கள் சொல்லும் காரணங்களையும் உளங் கொள்ளுதல் வேண்டும். அடிகளின் தேவாரத்தில், ''உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்'' என்றும்; ''வலித்தேன் மனை வாழ்க்கையும் மகிழ்ந்தடியேன்'' என்றும்; ''பாலனாய்க் கழிந்தநாளும், பனிமலர்க் கோதை மார்தம் மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்புவந்து கோலனாய்க் கழிந்தநாளும் குறிக்கோளிலாது கெட்டேன்'' என்றும்; பிறவாறும் வருகின்ற சில பகுதிகளைக் காட்டி இவற்றால் அடிகள் மணவாழ்க்கையைப் பெற்றிருந்தவரே என்று கூறுகின்றனர்.

அடிகள் தம் தேவாரத்துப் பலவிடங்களில் தன் வரலாற்றுக் குறிப்புகள் (Autobiographical references) பல இடம்பெறுமாறு செய்துள்ளார் என்பது, உண்மையே. மேலோடியாகப் பார்த்தால் முன்னர்க் குறிப்பிட்டுள்ள பகுதிகள், அடிகள் மணந்து கொண்டவரே என்பதற்கு ஏற்பப் பொருள்தரக் கூடும். தேவாரம் போன்ற அருட் பனுவல்களில் தன் வரலாற்றுக் குறிப்புக்களைக் காணும் போது, ஆய்வாளர்கள் சற்று விழிப்புடன் இருத்தல் வேண்டும். உலகவர் குணஞ் செயல்களைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு, அவை தம்பால் உளவாக அமைத்துப் பாடுவது, அருளாளர் தம் இயல்பாகும். இல்லையேல் ''நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்'' என்னுமிடத்து மணிவாசகர் உண்மையிலேயே நாயிற் கடைப்பட்டு, நாய்க்குணம் உடையவராக இருந்ததாகக் கருதநேரும். இஃது ஆராய்ச்சியின் பெயரில் இழைக்கும் அபசாரமாகும்.

'உயர்ந்தேன் மனைவாழ்க்கை', 'வலித்தேன் மனை வாழ்க்கை' என்னும் தொடர்களில் வரும் மனைவாழ்க்கை, மணம் புரிந்து வாழும் இல்வாழ்க்கையைக் குறிக்க வேண்டும் என்னும் கட்டாயம் இன்று. மணந்துவாழும் வாழ்க்கை இல்லறம் எனப்படுவது போல, மணவாது துறவாதும் வாழும் வாழ்க்கையும் இல்லறத்திலேயே அடங்கும். இல்லறம் துறவறம் என்பனபோல, மணவாதும் துறவாதும் வாழும் வாழ்க்கைக்கு, வேறொரு தனிப் பெயர் இன்மையின்அதுவும் இல்லறம் என்பதிலேயே அடங்கும். சமண சமயம் புகுமுன்னர் அடிகள் மணவாதும்துறவாதும் இருந்து, தம் தமக்கையின் அன்பான ஆதரவில் வாழ்ந்த நிலையினை, அத்தொடர்களில் வரும் மனை வாழ்க்கை என்பது சுட்டுவதாகலாம்.

சமண சமயம் புகுவதற்கு முன்னர், மருள்நீக்கியாராக இருந்த நிலையில், மணம் புரிந்திருந்தால் அதனைச் சேக்கிழார் கூறாமலிருக்கக் காரணமில்லை. தமக்குப் பன்னூறாண்டுகட்குமுன் வாழ்ந்த அடியார்களின் வரலாறுகளில், பிறவகையால் அறிய முடியாத நுட்பமான செய்திகளையெல்லாம், அறிந்து வெளிப்படுத்தியுள்ள சேக்கிழாருக்கு அடிகளின்

மணம் பற்றிய செய்தியினை அறியாதிருக்கவும் ஏதுவில்லை. மணந்திருந்து அச்செய்தி தெரிந் திருந்தால், அதனை வெளியிடுவதால் ஏற்படும் குறையும் இல்லை. ''நில்லாத உலகியல்பு கண்டு நிலையா வாழ்க்கை அல்லேன்'' என்று அறத் துறந்து, சமயங்களின் நல்லாறு தெரிந்து ணரும் வேட்கையால் சமண் சமயம் சேர்ந்த தாகக் கூறியுள்ளார். நிலையாமை உணர்த்தும் காஞ்சித் திணையுணர்வினை இளமையிலேயே பெற்றமையால், மணம் பூண்டு வாழும்வாழ்க்கை நிலையான வாழ்க்கை என்று கண்டு சமணம் சார்ந்ததனால், அடிகட்கு அப்போது திருமண வேட்கைதானும் தோன்றுதற்கு இடமில்லை. மணச் சடங்கிற்கான ஆசையையே யன்றி, மாதரை விரும்பும் ஆசையையும் ஒருங்கே துறந்தார் என்பதனை உணர்த்தச் சேக்கிழார் ''அறத்துறந்து'' என்ற தொடரைப் பயன் படுத்தியுள்ளார்.

சமண சமயம் சார்ந்து, அச்சமய நூல்கள் தேர்ந்து, தேரர் போன்ற பிற சமயத்தாரை வென்று, சமண சமயத் துறவியர் கணங்களில் சேனா கணத்தைச் சேர்ந்தவராய்த் தரும சேனர் என்ற பெயரில், அடிகள் விளங்கினார் என்பதனைச் சேக்கிழார் வாக்கால் அறியலாம். இதனால் சமண சமயம் சார்ந்திருந்தபோதும், அடிகட்கு மணநாட்டம் இன்மையை உணர லாம். மீண்டும் சைவ சமயத்திற்கு வந்த பின்னர், இளமை கடந்த வயதினராக இருந்தா லும், மணந்து வாழ்வதனைச் சைவம் தடுக் காமையால், மணம் புரிந்து வாழ்வதில் தடை யில்லை. அங்ஙனம் மணந்திருப்பராயின் அதனையும் சேக்கிழார் கூறாமலிருக்கக் காரணமில்லை. இறுதியில் அரம்பையரை அனுப்பி இறைவன் சோதித்ததும், அவர்தம் மணவாப்பெருந் துறவை நைட்டிகப் பிரம்மச் சரியத்தை மாநிலத்திற்கு உணர்த்துதற்கே யாகும்.

'பாலனாய்க் கழிந்தநாளும்' என்னும் பாடல், பொதுவாக மக்கள் குறிக்கோளின்றி வாழ்ந்து மடியும் நெடிய வாணாளைச் சுட்டி எழுந்ததாகும். தம் வாணாளைப் பயனின்றிக் கழித்து வீணாக்கும் உலகவர் இயல்பினைத் தம்மேல் ஏறட்டுக்கொண்டு, அவர்கள் பொருட்டு, அடிகள் இவ்வாறு இப்பாடலில் இரங்கி ஏங்குகின்றார். 'பனிமலர்க் கோதை மார் மேலனாய்' என்றபகுதி, அடிகள் பெண்கள் பால் கொண்டநேயத்தைக் குறிப்பதாயின், 'கோலனாய்க் கழிந்த நாள்' என்பது, அடிகள் தண்டு ஊன்றி நடந்தமையை குறித்தல் வேண் டும். இறுதிவரையில் உழவாரப் படையேந்தித் தொண்டு செய்ததாகச் சேக்கிழார் கூறுகின் றாரேயன்றி, ஊன்றுகோல் ஏந்திச் சென்றதாக யாண்டும் கூறவில்லை. அவ்வாறு கொண்டால் 'பனிமலர்க் கோதைமார்' என்னும் பன்மை வாசகத்தால், அடிகள் பல பெண்களை நாடிய வர் என்று இடர்ப்படவும் கூடும். இளமை முதல் முதுமை வரையில், குறிக்கோள் இன்றிக் கழியும் மானிட வாழ்க்கைக்கு ஓர் அழகிய வடிவம் கொடுத்துக் காட்டிய காட்சியே, இத் தேவாரக் கருத்தாகும் என்று கொள்ளுதல் வேண்டும்.

அடிகள் சமண சமயம் சார்ந்த பின்னர், அவருடைய தமக்கையார், உற்றார் முதலியவ ரோடு வீட்டையும் துறந்து, திருவதிகை சென்று திருமடஞ்சார்ந்து வீரட்டானர்க்குத் தொண்டு புரியலானார். இறைவன் அருளிய சூலைக் கொடுமையால் இரவினில் சமணர் இருப்பிடம் நீத்துவந்த தருமசேனர், தம் தமக் கையாரைத் திருமடத்திலேயே சந்திக்கின்றார். இறைவன் திருவருளால் சைவ சமயத்திற்கு மீண்ட பின்னர்ச், சமணர் இழைத்த கொடுமை களை இறையருளால் வென்று, பின்னர்த் தம் ஊர்க்குச் செல்லாது, தமக்கையார் தொண்டு புரியும் திருவதிகைக்குச் செல்கின்றார். அது முதல் அடிகளின் வாழ்வு திருமடத்து வாழ்வாக அமைகின்றது. இதனால் அடிகள் திருமணம் புரிந்தவர் என்று நினைப்பதற்கும் இடமில்லா மல் போகின்றது.

திருவதிகை, திருவாரூர் ஆகிய நகரங் களில் அடிகள் நடந்து செல்லுங் காட்சியினைச் சேக்கிழார் அழகிய சொல்லோவியங்களாகத் தீட்டிக் காட்டியுள்ளார். திருவதிகையில் அடிகள் செல்லும் கோலம் வருமாறு:

''தூயவெண்ணீறு துதைந்த
பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே''

திருவாரூரில் அடிகள் சென்ற காட்சி பின்வரு மாறு கூறப்பட்டுள்ளது:

''மார்பாரப் பொழிகண்ணீர்
மழைவாரும் திருவடியும்
சேர்வாரும் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளும் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப் படையுள் தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்''

இந்தச் சொல்லோவியங்களில் திளைத்த மாத வச் சிவஞான சுவாமிகள், அப்பர் அடிகளை,


''இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவா ரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்''

என்று, தமது காஞ்சிப்புராணப் பாடலில்கவின் மிகப் போற்றுகின்றார். இதில் அப்பரடிகளைத் துறவியாகவே காட்டியுள்ளது குறிப்பிடத்தக் கது. பெருந்துறவு என்றும், நடையறாப் பெருந் துறவு என்றும், அமைந்துள்ள தொடர்கள், அப்பர் அடிகள் இளமை முதல் இறுதிவரை மணவாது, தூய துறவு மேற்கொண்டிருந்த நிலைமையினை நன்கு காட்டுவதாக அமைந் துள்ளன.


***



தமிழக அரசின் நிதி உதவியுடன் திருப்பணி செய்யப் பெற்றுவரும் இலங்கை அருள்மிகு **திருக்கேதீசுவரநாதர்** திருக்கோயிலில் பிரதிட்டை செய்யப்படுவதற்காகத் தமிழகத்தில் இருந்து செய்து அனுப்பி வைக்கப்பெற்ற **அருள்மிகு சரபமூர்த்தியின்** திருவுருவப் படிமம்.



சென்னை சூளைமேடு நெடுஞ்சாலை அருள்மிகு வேங்கடேசப் பெருமாள் கோயிலின் புதிய விமான கும்பாபிஷேக விழாவில், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **இராம. வீரப்பன்** அவர்கள் கலந்து கொள்ளுதல்.



திரு எஸ்.பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் பாடிய சோளிங்கர் அருள்மிகு இலட்சுமிநரசிம்ம சுவாமியின் சுப்ரபாத இசைத்தட்டு வெளியீட்டு விழாவில், திருப்பெரும்பூதூர் **ஸ்ரீமத் எதிராஜ ஜீயர்** அவர்களிடமிருந்து, நமது அறநிலைய ஆணையர் **திரு யு. சுப்ரமணியன், ஐ.ஏ.எஸ்.** அவர்கள் முதல் இசைத்தட்டினைப் பெறுதல்

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.